# தமிழரசு

16-4-1992 ரூ.1



# *Khadi Kraft* HONEY!
# A pure product of nectar and pollen now comes your way!

Nature's bounty comes your way. Now from *Khadi Kraft*. In the shape of honey a sweetener, so pure and divine. A food product for the family.

*Khadi Kraft* Honey brings a lost tradition to your home. It contains vitamins and necessary ingredients to ensure perfect health, nourishment and strength. It can be used with every meal or as a soft drink. A true miracle food.

*Khadi Kraft* Honey comes in enticing bottles.

For Babies Health

PURE HONEY








## Honey-Nature's own gift!
## For you and the family.

Available at all

# *Khadi Kraft*

Tamilnadu Khadi and Village Industries Board,
Kuralagam, Madras-600 108

DIPR 580 MS/92

# இந்த இதழில்...


தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை
முதன்மைநிலை அடையச் செய்வோம்!
—சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் ... 2
பதிலுரை

திருக்கோயில்களில் சிலை உடைப்புகள்:
—சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் ... 9
அறிக்கை

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ... 11
போக்குவரத்துக் கழகத் தொடக்க விழா... ... 12

டாக்டர் அம்பேத்கர் வாழ்விலே... ... 17

பெரியார் மாவட்டம்: குடிநீர்த்
திட்டப் பணிகள் ... 21

கல்வி சிறந்த தமிழ்நாடு ... 24

கோயில்களும் பழந்தமிழர் பண்பாடும்

தன்னை உயர்த்திய இசைக் கருவியின்
பெருமையை உயர்த்தியவர்
— திரு. குன்னக்குடி வைத்தியநாதன் பாராட்டு
விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 45



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

சித்திரைத் திங்கள் - 4

மலர்: 22 இதழ்: 20

16-4-1992

# இந்தியாவிலேயே

# தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை

# முதன்மை நிலை அடையச் செய்வோம்!

## தொழில்மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குச் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை

நமது நாட்டை எதிர்கொண்டிருக்கிற பொருளாதாரச் சிக்கல்களும், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிலைகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளும், நாம் இது வரை பின்பற்றி வந்த தொழிற்கொள்கைகளுக்குத் தற்போது தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்கிற படிப்பினையை நமக்கு வழங்கியுள்ளது. ஆகவே, தேசிய அளவில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள தொழில் முன்னேற்றக் கொள்கையைச் சார்ந்தும், தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தை முன்னுரிமையோடும், வேகத்தோடும் தூண்டுகிற வகையிலும், சில சிறப்பு நடவடிக்கைகளை எங்கள் அரசு எடுத்துள்ளதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இந்த அரசு பொறுப்பேற்ற உடன், இந்திய மற்றும் தமிழ்நாட்டிலுள்ள முன்னணித் தொழிலதிபர்களை நான் அழைத்து, தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சியில், இந்தியாவிலேயே முதன்மை நிலை அடையச் செய்வதற்காக, அவர்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்டறிந்தேன். அந்தக் கூட்டத்தில் தொழிலதிபர்கள் அளித்த சில ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டு இந்தப் பேரவையில் நடைபெற்ற தொழில் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, சில அறிவிப்புகளையும் வெளியிட்டேன். அவற்றின் மீது தற்போது தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப் பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் சிலவற்றை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, மிகவும் பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு அளிக்கப்படும் மானியம், நிலையான சொத்துக்களின் மீது செய்யப்பட்ட முதலீட்டில் 15 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகவும், உயர்ந்த பட்ச மானியம் ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொழில்கள் தொடங்கப்பட்டு, அவை போதிய அளவு வளர்ச்சியடைய அடிப்படை வசதிகள் இன்றியமையாதது. இதனை நிறைவேற்றும் வகையில் ஏற்கெனவே அமைந்துள்ள தொழிற்பகுதிகள், தொழில் வளாகங்கள் மற்றும் தொழிற்பேட்டைகள் ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்காகத் 'தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்' (Tamil Nadu Corporation for Industrial Infrastructure Development (TACID) என்ற நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுச் செயலாற்றி வருகிறது.

**தொழில்வளம் பெருக...**

தொழில்கள் ஏற்கெனவே வளர்ந்துள்ள பகுதிகளில், மேலும் விரைவான வளர்ச்சியை அடைவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் முனைவோருக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, தேவைப்படும் நிதியைக் கடனாக அளித்தல், தொழில் கழிவுகளைச் சுத்திகரிப்புச் செய்தல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் வளர்ச்சி மையங்களைத் தோற்றுவித்தல், போன்ற பணிகளை, இக்கழகம் இந்த ஆண்டு மேற்கொள்ள இருக்கிறது. இக்கழகத்திற்கு, அரசின் பங்கு மூலதனமாக ரூ.5 கோடி வழங்கப்படும்.

தொழில் வளம் பெருக, இம் மாநிலத்திற்குள்ளும் வெளியிலும் உள்ள தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து, இம்மாநிலத்தில் தொழில்களைத் துவக்க ஊக்கமும், ஆலோசனைகளும் வழங்கவும், அவர்கள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான பல்வேறு துறைகளின் அனுமதிகளைப் பெற்றுத் தரவும், உற்பத்தி செய்யும் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவும் வகையில், 'தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம்' (Industrial Guidance and Export Promotion Bureau) ஒன்று அமைக்கப்பட்டு, விரைவில் தன்னுடைய பணியைத் துவக்க இருக்கிறது.

பெருமளவில் ஏற்றுமதி செய்யும் தொழில்கள் அமைந்துள்ள திருப்பூர், இராணிப்பேட்டை, திண்டுக்கல், வாணியம்பாடி போன்ற நகரங்



களுக்கு, அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவ தற்கு மத்திய அரசின் உதவி நாடப்பட்டுள்ளது. மத்திய அரசும் இச்செயற்குறிப்பைக் கவனிப்ப தாகத் தெரிவித்தள்ளது.

தொழில் துறையில் பெண்களுக்கு முன் னுரிமை வழங்குகிற எங்கள் அரசின் நோக்கம் அனைவரும் அறிந்ததே. தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில், 30 சதவிகிதத்துக்கு மேல் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் புதிய தொழில்களுக்குக் கூடுதல் சலுகையாக, முதலீட்டில் 5 சதவிகிதமும், உச்ச அளவாக ரூ. 5 இலட்சம் சிறப்பு மானியமும் வழங்கப்படுகிறது. மேலும் எல்லாப் புதிய தொழிற்பேட்டைகளிலும், தொழில் வளாகங்களிலும் உள்ள தொழிற்கூடங் களில், மகளிர் தொழில் முனைவோர்களுக்காக, 30 சதவிகிதத் தொழிற்கூடங்கள் அல்லது மனைகள் ஒதுக்கப்படுகின்றன. 1991-92-ஆம் ஆண்டு, 800 மகளிருக்குத் தொழில் முனை வோருக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

**புதிய தொழில் கொள்கையின் முக்கிய அம்சங்கள்**

தொழில் அதிபர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு தமிழ் நாட்டைத் தொழில் வளர்ச்சியில் முன்னிலையில் நிறுத்தும் அடுத்த கட்ட நடவடிக்கையாக, இந்த அரசு முதன் முதலாகப் புதிய தொழிற்கொள்கை ஒன்றை, 20.1.1992 அன்று, முன்னணித் தொழிலதிபர்களின் முன்னிலையில் வெளி யிட்டது. இக்கொள்கையில், மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதன் முக்கியத்துவத்தைப் பற்றி யும், தனியார் துறையின் மூலம் மின் உற்பத்தித் திட்டங்களை அமைப்பது குறித்தும், மாநிலத்தில் பெருந்தொழில்கள் நிறுவுவதற்கான ஒப்புதல்களை விரைவில் பெறுவது குறித்தும், தொழில் துறை யின் முதலீட்டைப் பெருக்குவது குறித்தும், அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்வதை ஊக்குவிப்பது குறித் தும், வரிச் சலுகைகள் குறித்தும், தொழில் வளர்ச்சிக்கான ஊக்கத் திட்டங்கள் குறித்தும், தொழிலாளர்கள் - தொழில் முனைவோர் உறவு பற்றியும், பொதுத்துறை நிறுவனங்களைப் பற்றி அரசின் கொள்கை பற்றியும், சிறுதொழில் வளர்ச்சி மற்றும் விரைவான வளர்ச்சிக்கு வாய்ப்புகள் மிகுந்துள்ள தொழில்களைத் துவக்குதல் பற்றியும், தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தனியார் துறையில் புதிதாகத் தொழில்கள் துவங்க முன்வரும் நிறுவனங்களுக்கு, TIDCO மற்றும் ELCOT நிறுவனங்கள், ஆலோ சனைகளையும் மற்ற உதவிகளையும் நல்கும் வகை யில், இவ்விரு நிறுவனங்களிலும், 'வழிகாட்டும் சேவைத் துறை' (Escort Sector Projects) என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத் தில் பங்குகொள்ளும் தனியார் நிறுவனங்களுக்கு ஒரு சதவிகிதம் பங்கு மூலதன உதவி அளிக்கப்

படும். இத்திட்டத்தின் மூலம், தனியார் நிறுவனங்களுக்குத் தொழில்கள் துவங்கத் தேவையான அனுமதிகள் பெற்றுத் தரப்படும். தனியார் நிறுவனங்களின் நிர்வாகத்தில் அரசின் தலையீடு கூடாது என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப, இத்திட்டத்தினால் தனியார் நிர்வாகக் குழுவில், அரசின் பிரதிநிதிகள் இடம்பெறமாட்டார்கள்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், தமிழ் நாட்டில் முதலீடு செய்யும் வகையில், அவர்களை ஈர்ப்பதற்குப் புது டில்லியிலுள்ள தமிழக அரசின் ஆணையர், (Resident Commissioner) தலைமையில், 'வெளிநாட்டு முதலீட்டு வளர்ச்சிப் பிரிவு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மிகப் பெரும் தொழிற்சாலைகள் இம்மாநிலத்தில் அமைய ஊக்கமளிக்கும் வகையில், ரூ.200 கோடிக்கு மேல் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு, முன்பு இருந்த ரூ.50 இலட்சம் என்ற மானியத்தை, ஒரு கோடி ரூபாயாக உயர்த்தவும்,

முறையை எளிதாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தற்போது அதில் உள்ள இடர்ப்பாடுகள் களையப்படும்.

3. மாவட்டத் தொழில் மையங்களைப் பலப்படுத்தி, ஒரு கூரையின் கீழ் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவில் தீர்வு செய்ய Single Window Clearance அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, (Empowered Committee) ஒன்று, நலிவடைந்த சிறுதொழில்களின் புனரமைப்பிற்காகத் தொழில் துறைச் செயலாளரின் தலைமையில் அமைக்கப்படும்.

5. பொது நிறுவனங்கள், சிறு தொழிற்சாலைகளிலிருந்து வாங்கும் பொருட்களுக்கு, 30 நாட்களுக்குள் பணம் வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்யத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதைக் கண்காணிக்க ஒரு தனிக் குழு (Monitoring Committee) அமைக்கப்படும்.

# சிறுதொழில் வளர்ச்சிக்கு அரசின் புதிய நடவடிக்கைகள்!

ரூ. 300 கோடிக்கு மேல் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு, ஏற்கெனவே உள்ள 6 ஆண்டு விற்பனை வரி தள்ளுபடி என்பதை 7 ஆண்டுகளாகவும், 12 ஆண்டு விற்பனை வரி ஒத்திவைப்பு என்பதை 14 ஆண்டுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொழிற் பிரிவுகளைச் சீரமைத்து, நவீனப்படுத்தும்பொழுது, பாதிக்கப்படும் தொழிலாளர்களின் நலனுக்காகத் 'தொழிலாளர் மறுவாழ்வு நிதி' (Labour Rehabilitation Fund) என்ற ஒரு புதிய திட்டம், எங்கள் அரசின் புதிய தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டம் நம் மாநிலத்தில்தான் முதன் முதலாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. புதிய தொழில் கொள்கையில் கண்டுள்ள அம்சங்களைச் செயல்படுத்த, ஆணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

சிறு தொழில் அதிபர்களின் கூட்டம் ஒன்றினையும், 4.3.1992 அன்று கூட்டி, சிறு தொழில் தொடர்பான அவர்களது குறைகளைக் கேட்டறிந்தேன். அவர்கள் கோரிக்கைகளின் அடிப்படையில், சில நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அவை:

1. சிறு தொழில்களின் நடைமுறை மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்ய, ரிசர்வ் வங்கி மற்றும் முன்னோடி வங்கிகளுடன் கலந்துரையாடி, அவர்கள் விரைவில் மூலதனம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. சிறு தொழில்களைப் பதிவு செய்யும்

6. சிறு தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்படும் மானியங்கள், நிதி வழங்கப்படாததால் தாமதமாகின்றது என்ற குறையைப் போக்குவதற்கு, இம் மானியத் தொகை ரூ.300 இலட்சத்திலிருந்து ரூ.853.75 இலட்சமாக, 1991-92-ஆம் ஆண்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்த மின் அழுத்த மானியமாக வழங்கப்பட்ட ரூ.25 இலட்சத்தை, ரூ.77.87 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மின்சாரம் தயாரிக்கும் Generator Set வாங்குபவர்களுக்கு வழங்கவேண்டிய மானியத்திற்காக, ரூ.24.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆண்டுகளில், தமிழகத்தில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் அமைவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த, எங்கள் அரசு ஏற்கெனவே அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதை நீங்கள் அறிவீர்கள். துணை மற்றும் சார்புத் தொழில்கள் துவங்குவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றிய கணக்கெடுப்பு, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நிதி நிறுவனங்களின் உதவியுடன், ஆண்டொன்றுக்கு 20,000 சிறு தொழில்களைத் தகுந்த தொழில் முனைவோர்களைக் கொண்டு அமைக்கும் பொறுப்பை மாவட்டத் தொழில் மையங்களிடம் ஒப்படைக்க உள்ளோம். இதற்கென ஒரு செயல் திட்டத்தைத் தொழில் துறை இயக்குநர் தயாரித்து வருகிறார். இந்தத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி, தமிழகத்தின் சிறு தொழில் வளர்ச்சியை, அரசு கணிசமான வகையில் உயர்த்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



★ மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்க வழக்கங்களும் சமூகத்தின் முதல் பகைகள்.

### தொழில் வளர்ச்சி மையங்கள்

நிலக்கோட்டை வட்டத்தில் வேளாண் தொழில் வளாகத்தை அமைத்திடத் தேவையான, 413.35 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 4 புதிய தொழில் வளர்ச்சி மையங்கள், தர்மபுரி மாவட்டம் பர்கூர், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டான், பெரியார் மாவட்டம் பெருந்துறை, மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் பனங்குடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன. ஒவ்வொன்றும் சுமார் ரூ. 20 கோடி முதல் ரூ.30 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கின்றன. புதிய தொழில் வளர்ச்சி மையங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் பகுதியில், தொழிற்சாலைகள் அமைக்கப் பெரும்பாலான அடிப்படை வசதிகள் இருந்தபோதிலும், போதுமான தண்ணீர் வசதி இல்லை. அதன் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய, சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், கொடுங்கையூரிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக், குழாய் வழியாக அரக்கோணத்திற்கு வழங்க முன் வந்துள்ளது. எனவே விரைவில் அரக்கோணத்தில், ஒரு தொழில் மையம் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 'காஸ்டிக் சோடா' தொழிற்சாலை

வேதாரண்யம், உப்புத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உப்பைப் பயன்படுத்தி, காஸ்டிக் சோடா தயாரிக்க, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத் துறை நிறுவனமான, 'தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ்' நிறுவனத்திற்கு, மத்திய அரசு இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில் இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத் தொழிற்சாலையை விரைவில் அமைக்க, 'பெட்ரோ ப்ராடக்ட்ஸ்' நிறுவனம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 'ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்' நிறுவனம் திறப்பு

இந்த அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக, 2½ ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம், இந்த ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாள் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந் நிறுவனத்தைத் திறப்பதற்காக அரசு ரூபாய் 3 கோடியைக் குறைந்த வட்டியான 9 சதவிகிதத்தில் கடனாகக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமான, தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனம், இந் நிறுவனத்தில் பங்கு மூலதனமாக, ரூ.6.03 கோடி முதலீடு செய்யவும் அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், விற்பனை வரி ஒத்திவைத்து செலுத்தும் சலுகையினையும், ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது. இந் நிறுவனம் திறக்கப்பட்டதால், 2,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளார்கள். ஏனைய 1,000 தொழிலாளர்கள் விருப்ப ஓய்வுக்கு இசைவு தந்துள்ளனர்.

### தமிழ்நாடு எஃகு நிறுவனத்தை நவீனப்படுத்துதல்

தமிழ்நாடு எஃகு நிறுவனம், டிட்கோவின் துணை நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நிறுவனம் 1991-92-இல் (31.12.1991 வரை). ரூ.214.84 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆலையின் உற்பத்தி இந்த ஆண்டில், சுமார் 69,746 டன்களாகும்.

நாட்டிலுள்ள புதிய எஃகு உருட்டாலைகளுக்கு இணையாக, இதனை மேம்படுத்தும் வகையில், இந் நிறுவனத்தினைச் சுமார் ரூ.23 கோடி முதலீட்டுச் செலவில் நவீன மயமாக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு உத்தேசித்துள்ளது.

### அயல்நாட்டு முதலீடு

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத்தில் தொழில் துவங்கவும், தமிழகத்திலுள்ள தொழில்களில் முதலீடு செய்யவும், அவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளைத் துரிதப்படுத்துகின்ற வகையில், சிப்காட்டில் ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இக்குழு மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி, தமிழகத்தில் தொழில் அமைக்க விரும்பும் அயல்நாடு வாழ் இந்தியர்களின் தேவைகளைக் கவனித்து, உதவி வருகிறது. இதுவரை மொத்தம் ரூ.108.60 கோடி முதலீட்டில், 60 தொழில் பிரிவுகளை அயல்நாடு வாழ் இந்தியர்கள் அமைத்துள்ளனர். மேலும் ரூ.51.06 கோடி முதலீட்டில், 19 தொழிற்பிரிவுகளை அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, சிங்கப்பூரில் உள்ள தொழில் அதிபர்கள் சிலர், நமது நாட்டில் தொழில் தொடங்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்காக மத்திய அரசு, இந்தியா- சிங்கப்பூர் தொழில் இணைப்பு மையம் (India-Singapore Industrial Corridor) ஒன்றினை அமைக்கக் கருதியுள்ளது. இதன் மூலம் சிங்கப்பூர் தொழிலதிபர்கள், இந்தியாவில் தொழில்களை அமைக்க முன்வருகிற வாய்ப்புகள் பெருகும். சென்னையில் பெரிய துறைமுகம், பன்னாட்டு விமான நிலையம், மற்றும் இவை சார்ந்த அடிப்படை வசதிகள் ஆகியவை, ஏற்கெனவே சிறந்த நிலையில் உள்ளதால், இந்த

இணைப்பு மையத்தினைச் சென்னையில் அமைக் கும்படி கோரி, மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இதன் மீது தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கும் முயற்சியினை மேற் கொள்ள, உயர்மட்டக் குழு ஒன்றும் அமைக்கப் படும்.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்**

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், சிறிய மிகச் சிறிய, மற்றும் நடுத்தரத் தொழில் களின் வளர்ச்சிக்காக நிதியுதவி செய்து வருகிறது. கோவை மாவட்டம் திருப்பூரில், இந்நிறுவனத்தின் கிளை ஒன்று இந்த ஆண்டு திறக்கப்படும் என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தற்போது தொழில் முனைவோர்களுக்கு நிலம், கட்டடம், இயந்திரத் தளவாடங்கள் வாங்கு வதற்குக் கடன் வசதி அளிக்கிறது. அவர்களுக்கு மேலும் வசதி செய்து தரும் நோக்குடன், இந் நிறுவனமே தளவாடங்களை வாங்கி, குத்தகை அடிப்படையில் தொழில் முனைவோருக்குக் கொடுப்பதற்கான, குத்தகை நிதியுதவித் திட்டத்தை அதாவது (Lease Finance) திட்டத்தை நடப்பாண் டில் அறிமுகப்படுத்தும்.

1991-92-ஆம் ஆண்டு, கடன் வழங்குவதற் காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, ரூ.225 கோடி யாகும். குறிப்பாக, 29.2.1992 முடிய, இதுவரை 4,070 தொழில் பிரிவுகளுக்கு, ரூ.239 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், 3,903 சிறு தொழில் பிரிவுகளுக்கு ரூ.185 கோடி கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு கடன் வழங்குவதற்கான இலக்கு ரூ.250 கோடியாக உயர்த்தப்படும்.

தொடர்பு, தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற பல்வேறு துறைகளில் பயன்படும், மின்னணுச் சாதனங்களைத் தயாரிக்கத் தேவைப் படும் அடிப்படைப் பாகமாகும். ஒருங்கிணைந்த சுற்றுகளைத் தயாரிக்கும் ஒரு தொழில் திட்டத்தை, எல்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. இந்தத் தொழில் திட்டத்தை ரூ.300 கோடி செலவில், கூட்டுத்துறையில் அமைக்க, எல்காட் நிறுவனம் ஆராய்ந்து வருகிறது. இத்திட்டம் நாட்டின் மின் னணுத் தொழில் வளர்ச்சிக்குப் பேருதவிபுரியும் வகையில் அமையும்.

எல்காட்டின் தொலைத் தொடர்புப் பிரிவு, ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில், செய்தி மற்றும் தகவல் விவரங்களைப் பரிமாறிக்கொள்ள வகை செய்யும், நுண்ணலைத் தொலைத் தொடர்புக் கருவிகள், அதாவது Digital Microwave Communication Equipment தயாரிக்கும் திட்டத்தை மேற்கொள்ள உள்ளது.

வெளிநாட்டு முதலீடு, தொழில்நுட்பம், மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் உருவாக்கப்பட்டால்தான், தமிழ்நாட்டின் மின்னணுத் தொழிற்சாலைகள் உலக அளவில் பெருமை அடைய முடியும். இந்த நிலையை உருவாக்க, உலகிலேயே மின்னணுத் தொழில்நுட்பத்தின் முன்னோடியாக விளங்கும் அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரத்தில், ஒரு தொடர்பு நிலையம் (Overseas Window) ஏற்படுத்த, எல்காட் நிறுவனம் திட்ட மிட்டுள்ளது. மின்னணுப் பொருள் விற்பனை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி நிறுவனம் (Electronics Trade and Technology Development Corporation) மின்னணு மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம் (Electronics and Software Export Promotion Organisation) ஆகிய மத்திய அரசு

# ‘வெளிநாட்டு முதலீட்டு வளர்ச்சிப் பிரிவு’

# ‘வழிகாட்டும் சேவைத் துறை’

# ‘தொழிலாளர் மறுவாழ்வு நிதி’

# — திட்டங்கள் உருவாக்கம்!

இந்நிறுவனத்திடம் கடன் பெற்றோர், கடன் தவணைகளைக் குறித்த காலத்தில் செலுத்தினால் தான், மேலும் பல புதிய தொழில்களுக்கு நிதி யுதவி தர வாய்ப்பு ஏற்படும். எனவே, தொழில் முனைவோர் இதற்கு முழு ஒத்துழைப்பினை நல்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**மின்னணுத் தொழில்**

ஒருங்கிணைந்த சுற்றுகள் (Integrated Circuits) என்ற மின்னணுப்பாகம், பாதுகாப்பு, தொலைத்

நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், இந்தத் தொடர்பு நிலையம் செயல்படும். இத்தொடர்பு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் செயலாக்கப் பணிகளில், அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் ஈடுபடுத்தப் படுவார்கள். அவர்களின் ஆர்வத்தையும் வியா பாரத் திறமையையும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், இந்தத் தொடர்பு நிலையம் அமைக்கப் படும். இந்த நிலையம், தமிழ்நாட்டின் மின்னணுத் தொழில்கள், உலக அளவில் வளர்ச்சி பெற உதவும்.

**மணலி ஆரோமேடிக்ஸ் தொழில் வளாகம்**
(Aromatics Complex)

சென்னை மணலியில் (NAPCO) நிறுவனத்தால், பெட்ரோலிய இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஆரோமேடிக் பொருட்கள் உற்பத்தி வளாகம் ஒன்றினை அமைப்பதற்குத் தேவையான, 1655.92 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த, சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைக்கு முதலீட்டு அனுமதி வழங்குமாறு, மைய அரசு கோரப்பட்டுள்ளது.

**ஏற்றுமதி தொழில் வளர்ச்சி**

தமிழகத்திலிருந்து ஏற்றுமதியைப் பெருக்க, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 100 விழுக்காடு ஏற்றுமதிக்கான உற்பத்தி செய்யும் தொழில் பிரிவுகளுக்கு, மின் வெட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியைப் பெருக்கிட குறுகிய காலத் திட்டம், மற்றும் நீண்ட காலத் திட்டம் வகுத்தளிக்கவும், ஏற்றுமதிக்கான தொழில் பிரிவுகளின் சிக்கல்களைக் களையவும், அரசுக்கு ஆலோசனைகள் வழங்கிட, தொழில் அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட உயர்மட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசு நிறுவி வருகிற, 'தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம்' (Industrial Guidance and Export Promotion Bureau) இம் மாநிலத்தில் ஏற்றுமதி செய்யக்கூடிய தொழிற் பிரிவுகள் அமைத்திடவும், அவைகள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், தேவையான உதவிகளை நல்கும்.

தரமணியில் அமைக்கப்படும் நிரந்தரத் தொழிற் பொருட்காட்சி வளாகமும், இம் மாநிலத்தின் ஏற்றுமதியைப் பெருக்குவதற்குப் பெரிதும் உதவும். ஏற்றுமதித் தொழில் நிறைந்த திருப்பூர், இராணிப்பேட்டை, வாணியம்பாடி, திண்டுக்கல் போன்ற நகரங்களுக்கு, அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க, மைய அரசின் உதவியை இந்த அரசு நாடியுள்ளது.

**கிராபைட் மேம்படுத்தும் திட்டம்**

தமிழ்நாடு கனிம நிறுவனம், கிராபைட் மேம்படுத்தும் தொழிற்சாலையைச் சிவகங்கையில் அமைப்பதற்கு, இந்த அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்தொழிற்சாலையை நிறுவும் பணிகள் அனைத்தும், ஒரே ஒப்பந்தக்காரர் மூலம் செய்கின்ற வகையில், Turn Key Basis-இல் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யத் தமிழ்நாடு கனிம நிறுவனம் செய்துள்ள பரிந்துரைகள், அரசின் ஆய்வில் உள்ளன. ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட 15 மாதங்களில், தொழிற்சாலை உற்பத்தியைத் துவக்கும்.

இத்தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு, 66,000 மெட்ரிக் டன் கிராபைட் கனிமத்திலிருந்து, 9,240 மெட்ரிக் டன் அளவிலான மேம்படுத்தப்பட்ட கிராபைட்டை உற்பத்தி செய்யும்.

**சர்க்கரை ஆலைகள்**

தமிழகத்தில் தற்போது 31 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. மதுராந்தகம், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, மற்றும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை விரிவுபடுத்தும் திட்டமும், சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை நவீனப்படுத்தும் திட்டமும், இந்த ஆண்டு செயலாக்கப்படும்.

அரூரில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும் சர்க்கரை ஆலை, 1992-ஆம் ஆண்டின் இறுதியில் கரும்பு அரைவையைத் தொடங்க உள்ளது.

பொதுவாகச் சர்க்கரைத் தொழில் தமிழகத்தில் நன்கு செயல்பட்டு வருகிறது. மேலும், வரும் ஆண்டுகளில் 5 புதிய சர்க்கரை ஆலைகளை -

1. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்
2. தஞ்சாவூர் மாவட்டம்
3. நாகபட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்
4. தென்னார்க்காடு மாவட்டம்
5. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.

ஆகிய மாவட்டங்களில் அமைக்க, பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப்படும். தேவையானால் தனியார் துறையில் நிறுவுவதைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

**மின் உற்பத்திப் பெருக்கம்**

விரைந்த தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, மின்



## தொலைபேசி வசதி

நாட்டில் உள்ள எல்லா ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசு முடிவு எடுத்துள்ளது. இவ்வாண்டு 59,044 ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும். இன்னும் 1,69,625 ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி கிடைக்கவில்லை. எல்லா ஊராட்சிகளுக்கும், கிடைக்கக்கூடிய நிதியைக் கொண்டு 1995, மார்ச் 31-ஆம் தேதிக்குள் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். நம் மாநிலத்தில் உள்ள பொதுத் துறை மின் நிறுவனங்களாகிய, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவைகளில், கூடுதல் முதலீடு செய்து மின் உற்பத்தியை அதிகரிக்குமாறு, மைய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

மைய அரசின் புதிய தொழில் கொள்கையின்படி, மின் உற்பத்தியில் தனியார் துறை பங்கேற்க வழி காணப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்ட சோழபுரம் பகுதியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி ரூ.7,000 கோடி செலவில் 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யத் திட்டமிட்டு, கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றைத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைத்துள்ளது. இந் நிறுவனத்திற்குத் தேவைப்படும் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்க, மைய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேலும், ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்து, அனல்மின் நிலையம் ஒன்றினைத் தனியார் அல்லது கூட்டுத் துறையில் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மைய அரசின் திட்டங்கள்**

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்காக மைய அரசின் முதலீடு 1969-ஆம் ஆண்டில் 10 விழுக்காடாக இருந்தது, 1989-ஆம் ஆண்டில் 5.21 விழுக்காடாகக் குறைந்துவிட்டது. எனவே, மைய அரசு முதலீடு இம் மாநிலத்தில் மேலும் உயர்ந்திட இந்த அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

தென்னக எரிவாயு குழாய்த் திட்டம் (Southern Gas Grid) நெய்வேலி பழுப்பு நிலக்கரி விரிவாக்கத் திட்டம், எண்ணூர் துணைத் துறைமுகத் திட்டம் ஆகியவற்றை விரைவில் செயல்படுத்த, மைய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## புதிய அறிவிப்புகள்

**புதிய கிரானைட் கொள்கை (New Granite Policy)**

அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து, பல்வேறு வண்ண கிரானைட் பாறைகளை, வெட்டி எடுப்பதற்கான குத்தகை உரிமையை, தற்போது மெருகு ஊட்டும் தொழிற் கூடத்தை நிறுவியுள்ளவர்களுக்கும், மெருகு ஊட்டும் தொழிற் கூடத்தை, இரண்டாண்டுக் கால அளவிற்குள் துவக்கத் திட்டத்தை வகுத்து உள்ளவர்களுக்கும், வழங்கப்படுவதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. இவ்வுரிமைகள் மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர் மூலம் அளிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பட்டா நிலங்களில் கிரானைட் பாறைகளை வெட்டி எடுப்பதற்காக அனுமதி, மெருகூட்டும் தொழிற்கூடம் உள்ளவர்களுக்கும், இரண்டாண்டுக் காலத்திற்குள் இத்தொழிலைத் துவக்கத் திட்டமிட்டுள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இத்தொழிலைத் துவக்க திட்டமிட்டுள்ளவர்களுக்கு முதலில் உறுதிக் கடிதம் (Letter of Commitment) வழங்கப்படுகிறது. இவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டவர்களுக்கு, தொழிற் கூடத்தை நிறுவிய பின், முறையான குத்தகை உரிமம் வழங்கப்படுகிறது.

அரசு புறம்போக்கு நிலங்களில், கிரானைட் கற்கள் முறையாக வெட்டி எடுக்கப்படவில்லை என்பதும், இவ்வாறு வெட்டி எடுக்கும் கற்களைப் பணி நிறைவு பெற்ற கற்களாக உருவாக்குவதில், அதிக சேதாரம் ஏற்படுகிறது என்பதும், இதனல் நமக்குக் கிடைக்க வேண்டிய அந்நியச் செலாவணி வருவாய் குறைந்துவிடுகிறது என்பதும், அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. தமிழகத்தில் கிடைக்கும் பல்வேறு வண்ண கிரானைட்டைச் சிறப்பாக

(41—ஆம் பக்கம் பார்க்க)

# திருக்கோயில்களில் சிலை பாதுகாப்பு நடவடிக்கைகள்

## மாண்புமிகு முதல்வர் அறிக்கை

**மா**ண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், டாக்டர் குமாரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திரு. ஆர். நடேசன், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு. சி. ஞானசேகரன், திரு. பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்களில் நடைபெற்றுள்ள சிலை உடைப்புகள் தொடர்பாகவும், திருட்டுகள் தொடர்பாகவும் விவாதிக்க வேண்டுமென்று 6 சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இவை அனைத்தும் ஒரே பொருள் தொடர்பானவை என்பதால், என்னுடைய பதிலினை ஒட்டுமொத்தமாக அளிக்க விரும்புகிறேன்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கங்கைகொண்டான் அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயிலில், கடந்த 4.2.1992 அன்று இரவு, திருடர்கள் ஒரு குழுவாகச் சென்று, கோபுரத்தின் வடக்கே உள்ள மதில் சுவர் வழியாகக் கயிறு கட்டி உள்ளே நுழைந்து, சுவாமி சன்னதியின் அருகே இருந்த விநாயகர் சிலையைப் பீடத்தில் இருந்து அகற்றியுள்ளனர். கர்ப்பக் கிரகக் கதவின் பூட்டினை உடைத்து, 5 அடி உயரமுள்ள அருள்மிகு ஆனந்தவல்லியம்மன் கல் திருமேனியை உடைத்து, பீடத்திலிருந்து அப்புறப் படுத்தியுள்ளனர். அதே கோயிலில், 4 அடி உயரமுள்ள துவார பாலகர் கற்சிலையையும், ஒரு அடி உயரமுள்ள நந்தீஸ்வரர் கற்சிலையையும், 2 அடி உயரமுள்ள சிறிய விநாயகர் சிலையையும், 3 அடி உயரமுள்ள மற்றுமொரு சிலையையும் பீடங்களிலிருந்து அகற்றியுள்ளனர். மேலும் 2½ அடி உயரமுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி சிலையை உடைத்துள்ளனர்.

அம்மன் சன்னதியில் இருந்த உண்டியலின் வெளிப் பூட்டை உடைத்துள்ளனர். ஆனால் உண்டியலின் உள் பூட்டுத் திடமாக இருந்தமையால், அதனைத் திறக்க முடியவில்லை. எனவே, உண்டியல் பணம் களவு போகவில்லை. இந்த நிகழ்ச்சி காவல் துறையினருக்குத் தெரிவிக்கப் பட்டவுடன், கங்கைகொண்டான் காவல் நிலையக் குற்ற எண்.46/92-இல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல்துறையினர், கைரேகை நிபுணர், மற்றும் புகைப்பட வல்லுநரை அனுப்பி வைத்துப் புலன் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் திருக்கோயில், ஊரைவிட்டுத் தள்ளி, தனியாக உள்ள நிலையில் இவ்வாறு திருட்டு முயற்சிகள் நடந்துள்ளன. அதுமட்டுமின்றி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் மற்றும்



சிதம்பரனார் மாவட்டங்களில், அடிக்கடி சிலை உடைப்பு மற்றும் களவு நடைபெற்று வருவதால், ஒவ்வொரு திருக்கோயிலிலும் இரவுக் காவல் பணியைத் தீவிரப்படுத்தவும், இரவுக் காவலர்கள் இல்லாத திருக்கோயில்களின் இதரப் பணியாளர் களில் ஒருவரை, இரவுக் காவல் பணி செய்திட நியமிக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உடைக்கப்பட்ட அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் சிலைக்குப் பதில், புதிய சிலை விக்கிரகத்தினை விரைவில் செய்து வைக்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படிச் சம்ப வங்கள் தொடர்ந்து நடைபெறாவண்ணம் தடுத்து நிறுத்த, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறும், அதன் மூலம் பொது மக்கள் மனதில் நம்பிக்கை தோற்றுவிக்குமாறும், தக்க அறிவுரைகள், காவல் துறையினருக்கும், இந்து அறநிலையத் துறையினருக்கும் வழங்கப் பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

கடந்த 14.2.1992 அன்று, திருநெல்வேலியில் உள்ள அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் இருந்த, சுமார் 750 கிராம் எடையுள்ள வெள்ளி பிரம்ம வளையத்தை, யாரோ திருடிச் சென்று விட்டனர். உள்ளூர்க் காவல்துறையினர் தீவிரப் புலன் விசாரணை செய்து, அக்கோயிலில் பணி புரியும் இரண்டு அர்ச்சகர்களைக் கைது செய்து, களவாடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குற்றாலத்தில் உள்ள செண்பகாதேவி அம்மன் ஆலயத்தினுள், சில அடையாளம் தெரியாத நபர்கள், 17.3,1992 அன்று இரவு, பூட்டை உடைத்து உள்ளே புகுந்து, ரூபாய் 800 மதிப் புள்ள, வெள்ளி மற்றும் பித்தளைப் பொருட் களைக் களவாடியுள்ளனர். இது குறித்தும் காவல் துறையினர் வழக்குப் பதிந்து, தீவிரப் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

திருட்டு சம்பந்தமாகத் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் - ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர், 2 தலைமைக் காவலர்கள் மற்றும் 4 காவலர்கள் அடங்கிய தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

புலனாய்வில் உள்ள சிலைத் திருட்டு வழக் குகள், மாநிலக் குற்றப்பிரிவின் சிலைத் திருட்டுத் தனிப் பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டு, ஒரு காவல்துறைக் கண்காணிப்பாளரின் தலைமையில், தீவிரப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இத்தகைய குற்றங்கள் நடவாமல் தடுக்கவும், நடந்துவிட்ட குற்றங்களை விரைவில் கண்டுபிடிக்க வும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம சுப்பு அவர்கள் பேசுகிறபோது, தருமபுரி மாவட் டத்தில் ஒரு கோயிலில் பணிபுரிந்த காவலர் கொலை செய்யப்பட்டது பற்றி இங்கே குறிப் பிட்டுப் பேசினார்.



ஆசை

● ஆண்டுகள் செல்லச் செல்ல, ஒவ்வொருவரும் முதுமைப் பருவம் அடைகின்றனர். ஆனால், ஆசை மட்டும் எப்போதும் இளமையாய் இருக்கின்றது.

- அண்ணல் காந்தியடிகள்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், கோவில் திருட்டு மற்றும் சிலை உடைப்பு பற்றிக் குறிப்பிட்டு, கோவில்களைப் பாதுகாக்கத் தெரி வித்த அனைத்துக் கருத்துக்களும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நமது கலாச் சாரப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும், கலைப் பொக்கிஷங்களாகத் திகழும் நமது திருக்கோவில் களையும், அவற்றின் உடைமைகளையும் பாது காப்பதே, எங்கள் அரசின் தார்மீகக் கடமை என்பதை, நான் ஏற்கெனவே இம்மாமன்றத்திற் கும் தமிழக மக்களுக்கும் தெரிவித்துள்ளேன்.

சமீப காலமாக நடைபெற்றுவரும் கோவில் திருட்டுகளையும், சிலை உடைப்புகளையும், நான் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுதான் வரு கிறேன். இதனை முற்றிலுமாகத் தடுத்து நிறுத்த, நிரந்தரமாக ஒரு சிறப்பு ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது, மிகவும் அவசியம் என்று கருது கிறேன். இந்தச் சிறப்பு ஏற்பாட்டினைக் குறித்து, விரைவில் ஆய்ந்து முடிவு செய்யப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம சுப்பு அவர்களும், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் பேசுகின்றபோது - அரசியல் காரணங் களுக்காக இந்தக் கோவில் திருட்டுச் சம்பவங்கள் திட்டமிட்ட செயல்களாக இருக்குமோ என்ற ஐயப் பாட்டினை இங்கே தெரிவித்தார்கள். இதுவும் அரசின் பரிசீலினையில் இருக்கிறது; நான் ஏற் கெனவே சொன்னதுபோல இத்தகைய கோவில் திருட்டுகள், சிலை உடைப்புகள், கோவில்களில் கொலை போன்ற குற்றங்களை முற்றிலுமாகத் தடுப்பதற்கு ஒரு நிரந்தர ஏற்பாட்டினை நான் இப்போது உருவாக்கிக் கொண்டு வருகிறேன். இதனைப்பற்றித் தீவிரமாக ஆராய்ந்து வருகிறேன். எனவே, அதைப்பற்றிய விவரங்களை என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

**- மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2.4.92 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.**






# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் போக்குவரத்துக் கழகத் தொடக்க விழா

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக்கழகத்தொடக்கவிழா 31.3.'92 அன்று காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. புதிய போக்குவரத்துக் கழகத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழக அரசுத் தலைமைக் கொறடா திரு. கா.ப.பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் புதிய போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், ''பெரியார் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களிலிருந்து 639 பேருந்துகளைப் பிரித்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் என்ற புதிய போக்குவரத்துக் கழகம், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த 639 பேருந்துகள், 587 வழித்தடங்களில் இயக்கப்பட இருக்கின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் தான் சிறப்பாகச் செயல்படுகின்றன. காஞ்சிபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்குப் பேருந்து ஒன்று விடப்படும். பெரிய கோயில்கள் உள்ள அனைத்து ஊர்களுக்கும் பேருந்துகள் விடப்படும்'' என்று கூறினார்.

எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தின் முதல் பேருந்து காஞ்சிபுரத்திலிருந்து திருத்தணிக்கு விடப்பட்டது. இப்பேருந்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இயக்கி வைத்தார். விழாவுக்கு, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே.ஞானதேசிகன், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலை வகித்தார். அரசு போக்குவரத்துத் துறைச் செயலர் திரு. ஆர்.சந்தானம், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு. ம.கா.சுப்ரமணியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழாவில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழா தொடங்குவதற்கு முன்பாக, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக இன்னிசைக் குழுவின் மெல்லிசை நடைபெற்றது.

—இரா.இராஜசேகரன்



# டாக்டர் அம்பேத்கர் வாழ்விலே

- எஸ். பழனியப்பன்

ராம்ஜி சக்பால் - பீமாபாய் தம்பதிகளுக்குப் பொருட்செல்வத்தில் பஞ்சம் இருந்ததோ இல்லையோ, மக்கட்செல்வத்தில் பஞ்சமில்லை. ஏற்கெனவே பதின்மூன்று பிள்ளைகளின் பெற்றோராக இருந்த அவர்கள், 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினான்காம் தேதி, பதினான்காவதாக ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தார்கள். பஞ்சபாண்டவர்களில் இரண்டாவது சகோதரனான பீமன் பெயர் வைக்கப் பட்டது அக்குழந்தைக்கு.

அந்தக் குழந்தைதான் 'இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை' என்று பிற்காலத்தில் அவனி போற்ற வளர்ந்த டாக்டர் அம்பேத்கர் ஆவார்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றதுமே தபோலி என்ற ஊருக்குக் குடும்பத்தோடு குடிபெயர்ந்தார் ராம்ஜி சக்பால். ஓய்வூதியத்தைக் கொண்டே அந்தப் பெரிய குடும்பத்தை நடத்துவது எளிதாக இல்லை. தன் வயதுக்கேற்றபடி ஏதேனும் ஒரு வேலை கிடைத்தால் செய்யலாம் என்று முடிவு செய்தார். தேடினார். கிடைத்தது.

சதாரா என்ற இடத்தில் இருந்த இராணுவக் குடியிருப்பில்தான் அவருக்கு ஒரு வேலை கிடைத்திருந்தது.

சிறுவனான அம்பேத்கருக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் மகாபாரதம், இராமாயணம் தொடர்பான கதைகளைச் சொல்லுவார் தந்தை; கபீர் தாசரின் பாடல்களைக் கனிவோடு கற்பிப்பார்.

தபோலியில் அவர்கள் குடும்பம் இருந்தது. ராம்ஜி சக்பாலோ சதாராவில் வேலை பார்த்து வந்தார். நாளடைவில் அவர் அங்கேயே தங்கும்படி ஆகிவிட்டது.

அம்பேத்கரும், அவர் சகோதரர் அனந்தராவும் எப்போதாவது தந்தையைப் பார்க்க சதாரா வந்து போவது வழக்கம். முன்கூட்டியே தாம் வருவது பற்றி அவர்கள் தந்தைக்குத் தகவல் தெரிவித்து விடுவார்கள். புகைவண்டி நிலைத்திற்கு வந்து காத்திருந்து பிள்ளைகளை அழைத்துப் போவார், அவர்.

அப்படியொரு நாள் கடிதம் எழுதிவிட்டு, அவர்கள் தபோலியை விட்டுக் கிளம்பினார்கள். அவர்களுடைய கடிதம் சக்பாலுக்குக் குறித்த நாளுக்கு முன்கூட்டியே கிடைத்திராததால், சதாரா புகைவண்டி நிலையத்தில் அவர் வந்து காத்திருக்கவில்லை.

ரயிலை விட்டு இறங்கிய அம்பேத்கரும் அவருடைய சகோதரரும், அங்கே தமது தந்தையைக் காணாததால், செய்வதறியாது கலங்கிப் போய் நின்றார்கள். விஷயமறிந்த ரயில்வே ஊழியர் ஒருவர், வாடகைக்கு ஒரு வண்டியை அமர்த்தி, அவர்களைக் கிராமத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

போகிற வழியில்தான் வண்டியோட்டிக்கு அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. உடனே பதறிப் போய், வசைபாடியபடி வண்டியை விட்டுக் கீழே குதித்தான் வண்டியோட்டி, திடீரென்று அந்த வண்டியைக் குடைசாய்த்து அவர்களைக் கீழே உருட்டிவிட்டான்.

அவனுடைய சாதிவெறி, அந்தச் சிறுவர்களைக் கதிகலங்கச் செய்துவிட்டது. இருந்தாலும் பாதிவழிக்கு மேல் பயணம் போவதுதான் எப்படி? அவனுடைய கோபம் தீரும் வரை பொறுத்துக் கொண்டிருந்தார் ஆனந்தராவ். பிறகு மெலிதான குரலில், பேசியதைப்போல் இரண்டு பங்கு வண்டிக்கூலி தருவதாகச் சொல்லி, தம்மை அழைத்துப் போகும்படி கெஞ்சினார். பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்றதும், மனம் மாறி விட்டான் வண்டியோட்டி.

ஆனால், அவர்கள் இருவரையுமே தனது வண்டியை ஓட்டிப் போகும்படி சொல்லிவிட்டான். வண்டிக்குப் பின்னால் அவன் கடைசிவரை நடந்தே சென்றான்.

செல்லும் வழியில் தாகம் எடுத்தபோதெல்லாம் அவன் ஆங்காங்கே தண்ணீர் வாங்கிக் குடித்தான். நீண்டதூரப் பயணம் ஆகையால், ஆனந்தராவும், அம்பேத்கரும் தாகத்தால் தவித்தார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று கூறி, எவருமே தண்ணீர் கொடுக்க மறுத்துவிட்டார்கள். கடுமையான நாவறட்சியுடனேயே கடைசி வரை தாகத்தோடு ஊர்போய்ச் சேர்ந்தார்கள் அவர்கள்.

சதாராவில் இருந்த உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார் அம்பேத்கர். சதாரா பள்ளிக்கூடம்தான், அவருக்கு அறிவுச்சுடர் கொளுத்தும் ஆரம்பக் கூடமாக இருந்தது.

'சாதி மதங்களைப் பாரோம்' என்ற கொள்கையின் முதல் வித்து அங்கேதான் அவர் பண்பட்ட மன தில் அழுத்தமாக ஊன்றப்பட்டது. அனைவரும் சமம் என்ற உணர்வுக்கு அஸ்திவாரம் போடப்பட்ட இடமே அதுதான்.

அரும்புப் பருவத்தில், தொடக் கக் கல்வி பயின்ற காலத்திலேயே வகுப்பறையில் அவர் ஆசிரியரா லும், மாணவர்களாலும் உதாசீனப் படுத்தப்பட்டதுண்டு. தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறி, வகுப்பறையில் அவரைத் தனியே ஒதுக்கி உட்கார வைத்திருந்தார்கள்; அதுவும் வெறுந்தரையில்!

வகுப்பறையில் இருந்த தண்ணீர் பானையில் அவர் தண்ணீர் குடிக்கக் கூடாது; யாராவது தூர நின்று ஊற்றுவார்கள்; இவர் கையேந்திக் குடிப்பார். மற்ற பிள்ளைகளோடு சேர்ந்தாற் போல் உட்கார்ந்து சாப் பிடக் கூடாது. சக மாணவர்களோடு சேர்ந்து விளையாடக் கூடாது என் றெல்லாம் கட்டுப்பாடு இருந்தது!

அதே நிலைமைதான் சதாரா உயர்நிலைப் பள்ளியிலும் தொடர்ந் தது. மனிதருக்கு மனிதர் இப்படி ஒரு பேதம் கொண்டிருப்பது தேவை தானா என்ற கேள்வி அம்பேத்கரின் பிஞ்சு நெஞ்சைப் பிசைந்தது. ஆசிரி யர்கள் அவர் நோட்டுப் புத்தகத்தை வாங்கித் திருத்தக் கூட வெறுத் தார்கள் என்றால் அவர் மனநிலை எப்படியிருக்கும்?

கள்ளி வயிற்றில் அகில் பிறக் கும்; உப்புக் கடலில் உயர்முத்தும் விளையும் என்பதுபோல, சாதி வெறி பிடித்தலைந்த உயர் வகுப் பாரிடையிலும் அத்தகைய மூர்க்க குணம் நீங்கிய சிலர் இருப்பதும் உண்டு. அப்படிப்பட்ட பிராமண ஆசிரியர் ஒருவர் அந்த உயர்நிலைப் பள்ளியில் இருந்தார். அவருடைய பெயர் அம்பேத்கர்.

நமது அம்பேத்கர், எவர் எப்படி நடத்திய போதிலும் அதைப்பற்றி யெல்லாம் கவலைப்படாமல் படிப்பே குறியாக இருந்தார். அந்த வகுப்பி லேயே முதல் மாணவனாகவும் விளங்கினார்.



அண்ணல் அம்பேத்கரின் 102-வது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்தார் (14-4-1992).

சதாரா பள்ளியில் அவர் சமஸ் கிருதம் படிக்க முடியாது என்ற தடை விதிக்கப்பட்டது. அது தெய்வ மொழி என்பதால் அப்படியாம்! இதனால் பாரசீக மொழி படிக்க லானார் அம்பேத்கர். ஆனால், வெளியே தனியாசிரியர் மூலம் சமஸ்கிருதம் படிக்கவும் அவர் தவறவில்லை.

இதனால் எல்லாம் ஆசிரியர் அம்பேத்கர், அவர்மேல் மிகுந்த அன்பு காட்டலானார். பாறையில் ஈரம் கண்ட செடி போல அந்த அன்பு கண்டு இன்னும் ஊக்கத் தோடு படித்து வரலானார் நம் அம்பேத்கர்.

ஒருநாள் காலை நேரம். அடை மழை பெய்து கொண்டிருந்தது. எப்படியும் பள்ளிக்கூடம் போயே ஆக வேண்டும் என்ற உறுதியோடு புறப்பட்டார் அம்பேத்கர். அந்தத் தெருவிலிருந்த இரண்டொரு சிறு வர்கள் இந்த மழையில் எப்படிப் போவது என்று நின்று விட்டனர். அவர்களிடம் பந்தயம் கட்டிவிட்டு, அந்த அடைமழையிலும்கூட பள்ளிக் கூடம் வந்து சேர்ந்தார் அம்பேத்கர்.

தெப்பலாக நனைந்தபடி பள்ளிக் கூடம் வந்து சேர்ந்த அவரைப் பார்த்ததும் மனம் நொந்து போனார் ஆசிரியர் அம்பேத்கர். பரிவோடு சிறுவன் அம்பேத்கரை அழைத்துத் தனது துண்டால் துவட்டி விட்டார். மாற்றுத் துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்தார். இது மட்டு மல்ல; தனக்காக எடுத்துவைத்திருந்த சாப்பாட்டை அவருக்கும் தனக்கு மாகப் பங்கிட்டுக் கொண்டு சாப் பிட்டார்.

அந்த ஒரு நாள் மட்டுமல்ல; பெரும்பாலான நாட்களில் சிறுவன் அம்பேத்கருக்கு அந்த ஆசிரியரே உணவைப் பரிந்தூட்டுவது தொடர்ந் தது.

ஆசிரியர் அம்பேத்கர் அத்துடன் நின்று விடவில்லை. பீமராவ் என்று இருந்த அவர் பெயரோடு தன் பெயரையும் இணைத்து 'பீமராவ் அம்பேத்கர்' என்றே மாற்றிவிட்டார். பள்ளிக்கூட வருகைப் பதிவேடு முதலிய ஆவணங்களிலெல்லாம் கூட அப்படியே பெயர் எழுதிப் பதிவு செய்தார்.

அன்றைய தினம் மாற்றம் செய்யப்பட்ட அம்பேத்கர் என்ற அந்தப் பெயர் பிற்காலத்தில் இந்திய வரலாற்றில் இடம் பெறப்போகிறது என்பது அப்போதெல்லாம் அந்த ஆசிரியருக்குத் தெரிந்திருக்காது!

1907-இல் பம்பாயில் உள்ள எல்பின்ஸ்டன் மெட்ரிகுலேஷன் தேர்வில் மிக நல்ல மதிப்பெண்கள் பெற்று முதல் மாணவனாகத் தேர்ச்சியடைந்தார். அம்பேத்கர். அது வரை அந்தப் பகுதியில் அப்படி வேறெந்த வகுப்பு மாணவனுமே இப்படிப் படித்துத் தேறியதில்லை!

ஆகையால், அவருக்குப் பாராட்டு விழாவே கூட அங்கே நடத்தப்பட்டது.

பாராட்டு விழாவிற்கு எஸ்.கே.போலே தலைமை வகித்தார். கிருஷ்ணராவ், அர்ஜுன் கெலுஸ்கர் போன்ற சிறந்த கல்வியாளர்களெல்லாம் அம்பேத்கரைப் பாராட்டிப் பேசினார்கள். விழா முடிவில் அம்பேத்கருக்குக் 'கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாறு' என்ற புத்தகத்தை அன்பளிப்பாக வழங்கினார் கெலுஸ்கர்.

பிற்காலத்தில் அம்பேத்கர் புத்த மதத்தில் சேர, அந்த நூலே முதல் காரணம் என்றும் கூறுவதுண்டு.

பால்ய விவாகம் அப்போதெல்லாம் சர்வ சாதாரணமாக நாடெங்கும் நடந்து கொண்டிருந்தது. ஆகையால், அம்பேத்கர் படித்துக் கொண்டிருக்கும்போதே அதாவது 14 வயதிலேயே அவருக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்யப்பட்டது.

பிக்குவலாங்கர் என்பவரின் ஒன்பது வயது மகள், ராமி என்கிற ரமாபாய் என்ற சிறுமியையே அவர் மணந்தார்.

தீண்டத்தகாத குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், பம்பாயில் எந்தத் திருமண மண்டபத்திலும் அவர்கள் திருமணம் அனுமதிக்கப்படவில்லை. அதனால், பைகுல் மார்க்கெட்டில் இருந்த ஒரு தகரக் கொட்டகையில் - அதுவும், இரவு நேரத்திலேயே அந்தத் திருமணம் நடந்தது.

திருமணம் ஆகிவிட்டதால் அம்பேத்கரின் படிப்புத் தடைப்பட்டதா என்றால், அதுதான் இல்லை. எப்போதும்போல் ஊக்கத்துடன் படித்து வந்தார், அவர்.

சில காலத்திற்குப் பிறகு - அரசியலில் ஈடுபட்டு தான் ஒரு மேல் சபை உறுப்பினர் ஆகிவிட்டபோதிலும் - மேல்சாதியினர் எனப்படுவோருக்கு மனிதத் தன்மை உண்டாக்குவதில் அவருக்கு ஏற்பட்டிருந்த போர்க்குணம் அப்படியே இருந்தது.

'மகாடு' குடிநீர்க் குளத்தில் அரிசனங்கள் தண்ணீர் எடுப்பது பற்றி அறிவிப்பொன்று வெளியிட்டார் அம்பேத்கர். மகாடில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் அவருடைய ஆலோசனையின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டது. 1927-ஆம் ஆண்டு மார்ச் 20-ஆம் தேதி நடைபெற்ற அக்கூட்டத்திற்கு மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களைச் சேர்ந்த அரிசன மக்களெல்லாம் மாபெரும் எதிர்பார்ப்புடன் ஒன்று திரண்டு வந்திருந்தார்கள்.

அப்படி வந்தவர்களுக்கும் அங்கே குடிக்கத் தண்ணீர் கிடைக்கவிலை; விலை கொடுத்தே தண்ணீர் வாங்கிச் சாப்பிடும் நிலைமையிருந்தது.

அம்பேத்கர் தலைமையில் நடைபெற்ற கூட்ட முடிவில், மகாடில் இருந்த சௌடார் குளத்தில் எல்லோருமாக இறங்கித் தண்ணீர் எடுப்பதாக முடிவாயிற்று.

மாபெரும் மக்கள் கூட்டத்தோடு அம்பேத்கர் அங்கு சென்றார். வாழ்த்து முழக்கம் பூமியை அதிரச் செய்ய, அவரே முதன் முதலாக அக்குளத்தில் இறங்கினார். முழங்

**சுயமரியாதை இயக்கத் தலைவர் பட்டிவீரன்பட்டி டபிள்யூ பி.ஏ. சவுந்திர பாண்டியனார் திருவுருவச் சிலையினை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையில் திறந்து வைத்தார் (14-4-1992).**



கால் அளவு ஆழத்தில் நின்று தண்ணீரை அள்ளிக் குடித்தார். அதன் பிறகு, மகிழ்வுடன் அரிசன மக்களெல்லாம் அக்குளத்தில் இறங்கித் தண்ணீர் எடுக்கலாயினர்.

ஒரு சமயம் அம்பேத்கரின் மனைவி உடல்நலம் குன்றியது. பந்தார்பூரில் உள்ள கோயிலுக்குப் போய் சாமி கும்பிட ஆசைப்பட்டார் அந்தப் பெண்மணி.

அம்பேத்கரோ அன்பு மனையாளை அந்தக் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். தீண்டத்தகாத இனத்தார் என்பதால், அங்கே அவர்கள் உள்ளேபோய் தெய்வத்தைத் தரிசிக்க அனுமதி மறுக்கப்பட்டது. அம்பேத்கர் எவ்வளவோ வாதாடிப் பார்த்தார், பயனில்லை.

அந்த அம்மையார் வெளியே நின்றே கடவுள் வணக்கம் செலுத்தினார்; கலங்கிய கண்களோடு தன் கணவனைப் பார்த்தார்.

மனைவியின் கண்களைத் துடைத்து விட்ட அம்பேத்கர் - 'கவலைப் படாதே கூடிய சீக்கிரம் நானே இந்த பந்தார்பூர் கோயில் போல ஒரு கோயிலைக் கட்டுகிறேன். அங்கே நீ கடவுள் சன்னிதானத்திலேயே சுதந்திரமாகப் போய் மனமார சாமி கும்பிட்டுக் கொள்ளலாம், வா' என்று சமாதானப்படுத்தினார்.

ஆனால், அவரது அன்பு மனையாள் திருமதி ரமாபாய் அதுவரை காத்திருக்கவில்லை. 1935-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாளன்று இறந்து போய்விட்டார். இந்துமத முறைப்படியே அன்னாரின் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன.

'அறிவு பெறப் படியுங்கள்; அமைப்புரீதியில் ஒன்று படுங்கள்; உரிமைக்குப் போராட ஒருபோதும் அஞ்சாதீர்கள். (Educate....... Organise ...... and Agitate......)'

'நான் எப்போதும் உங்களோடிருக்கிறேன்; அதேபோலவே நீங்கள் எப்போதும் என்னோடிருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. (I shall always be with you; as I know, You will be with me)...'

- இப்படிப்பட்ட சொற்றொடர்கள், அண்ணல் அம்பேத்கரின் சொற்பொழிவுகளில் அடிக்கடி இடம் பெறுபவைகளாக இருந்தன.



ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாள் முழுவதும் மாணவன் போலவே கற்க வேண்டும். தனக்கென்று ஒரு நூல் நிலையம் வைத்திருக்க வேண்டும். தன்னைச் சுற்றிலும் உள்ள வறியவர்களுக்கு உதவ வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் பண்பாடுள்ள குடிமகனாக இருக்க வேண்டும். மனிதனைப் பகுத்தறிவு உள்ளவனாக மாற்றுவது எப்படி என்பதுதான் சமுதாயத்தின் முக்கிய சிந்தனையாக இருக்க வேண்டும்.

— அம்பேத்கர்

பம்பாய் தொகுதியில் நின்று பெரு வெற்றிபெற்று, பாராளுமன்றத்திற்குள் வந்து உட்கார்ந்தார் அம்பேத்கர்.

சட்ட நுணுக்கங்களால் பெரும் புகழ் பெற்றிருந்த டாக்டர் அம்பேத்கரைச் சட்ட அமைச்சராக்கலாமா என்ற கருத்து மகாத்மா காந்தி அடிகளோடு கலந்து பேசப்பட்டது. பெரிய மனதுடன் அவர் சம்மதம் தெரிவித்தார். அதன்பின் - சர்தார் வல்லபாய் படேல், எஸ்.கே. பட்டீல் இருவராலும் இந்த விஷயம் டாக்டர் அம்பேத்கருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு காந்தியார்மீதும் காங்கிரஸ் கட்சி மீதும் இருந்த வெறுப்புணர்ச்சி அவருடைய மனதை விட்டு விலகியது. அமைச்சர் பொறுப்பேற்க ஒப்புதல் அளித்தார்.

சட்டமேதை அம்பேத்கர், 1947-ஆம் ஆண்டு ஜூலையில் சட்ட அமைச்சராக்கப்பட்டார்.

அப்போது இந்துமகா சபைத் தலைவராக இருந்த டாக்டர் ஷியாம் பிரகாஷ் முகர்ஜியும் அமைச்சர் ஆனார்.

ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி நள்ளிரவில், நம் இந்திய நாட்டின் அடிமை இருள் விலகியது; சுதந்திரச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டு ஒளி வீசியது. 29-ஆம் தேதி கூடிய அரசியல் நிர்ணய சபையில் அரசியல் சட்ட முன்வரைவுக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவின் தலைவராக டாக்டர் அம்பேத்கர் நியமிக்கப்பட்டார்.

சர். அல்லாடி கிருஷ்ணசாமி, சர். பி.என். ராவ், சர். கோபாலசாமி ஐயங்கார், டாக்டர் கே.எம். முன்ஷி, பி.எல். மிட்டர், டி.பி. கெய்தான் ஆகியோர் அக்குழுவில் அங்கம் வகித்தார்கள்.

பிறகு - மிட்டர் மறைவுக்குப் பின் அவர் இடத்தில் மாதவராவும் கெய்தான் மறைவுக்குப் பின்பு அவர் இடத்தில் டி.டி. கிருஷ்ணமாச்சாரியும் நியமிக்கப்பட்டார்கள்.

1949-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம் நாளன்று பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டு இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

'இந்திய அரசியல் சட்டம் இணையற்ற வகையில் உருவாக்கப்பட டாக்டர் அம்பேத்கர் மேற்கொண்ட முழுமுயற்சியே காரணம். உலக நாடுகளிலெல்லாம் உள்ள அரசியல் சட்டங்கள் இதற்கு எந்த வகையிலும் ஒப்பாக முடியாது. நீக்குப் போக்கற்ற நிலையில் அது அமைந்திருக்கிறது...' என்றெல்லாம் பார்லிமெண்டிலேயே பாராட்டிப் பேசினார் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார்.

## எழுத்தாளர் அம்பேத்கர்

அம்பேத்கர் 1915-இல் 'பழங்கால இந்திய வர்த்தகம்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதி எம்.ஏ., பட்டம் பெற்றார்.

1916-ஆம் ஆண்டு மே மாதத்தில் மனித தத்துவம் பற்றி நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், 'இந்தியாவில் சாதிகள், அவற்றின் செயல் முறை, தொடக்கம் மற்றும் வளர்ச்சி' என்பவை பற்றி விளக்கமான ஒரு கட்டுரையை அளித்தார்.

1916-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெறுவதற்கு, 'இந்தியாவில் தேசிய லாபப் பங்கீடு' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை வரைந்தார். அதனையே விரிவுபடுத்தி, 'இந்தியாவின் சாம்ராஜ்ய, மாகாண பொருளாதார பரிணாமம்' என்ற தலைப்பில் வெளியிட்டார்.

1921-இல் ஜூன் மாதத்தில், 'பிரிட்டிஷ் இந்தியாவில் மத்திய நிதியை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளித்தல்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து எம்.எஸ்ஸி., பட்டம் பெற்றார்.

1922-ஆம் ஆண்டு அக்டோபரில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் 'ரூபாயின் பிரச்சினை' என்ற கட்டுரையை வழங்கினார். அதற்காக 'டாக்டர் ஆஃப் சயின்ஸ்' என்ற பட்டத்தைப் பெற்றார். அந்தக் கட்டுரை 1923-ஆம் ஆண்டு டிசம்பரில் இலண்டனில் உள்ள 'கிங் அண்டு சன்' பதிப்பகத்தாரால் நூலாக வெளியிடப் பெற்றது. -

3.4.1927-இல் 'பகிஷ்கிரிட் பாரத்' என்ற மாதமிருமுறை இதழை மராத்தியில் வெளியிட்டார்.

'புத்தரும் அவருடைய தர்மமும்' என்ற நூலை எழுதினார். அதில் புத்தமதச் சாரத்தை விளக்கமாக வரைந்துள்ளார்.

'சாதிகள் ஒழிப்பு' என்ற தம் நூலில் அவர் சமூகம் பகுத்தறிவின் அடிப்படையில்தான் அமைய வேண்டுமே தவிர, சாதி அடிப்படையின் பரம்பரை வழக்கத்தை அனுசரித்து அமைதல் கூடாது என்பதை விளக்கி இருக்கிறார்.

1920-இல் 'மூக் நாயக்' என்ற கிழமை இதழ் தொடங்கினார். 'மூக் நாயக்' என்ற சொல்லுக்கு 'ஊமையர் தலைவன்' என்று பொருள். தாழ்த்தப்பட்டோரின் உரிமைக் குரலாக அவ்விதழ் வெளிவந்தது.

அம்பேத்கரின் நூல்கள் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை நன்கு அலசின. அவருடைய நூல்களில் உண்மைகள் ஆதாரங்களோடு விளக்கப்பட்டன. அவரது நடையில் எளிமையும் தெளிவும் இணைந்திருந்தன. தம் கருத்தைக் கற்போர் நெஞ்சில் அழுத்தமாகப் பதியும் வண்ணம் எழுதும் ஆற்றல் அவருக்கிருந்தது. தம்முடைய எழுத்தாற்றலைக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டு எழுதாமல், சமுதாய சீர்திருத்தத்துக்காகவும், அரசியல் பொருளாதார விளக்கத்துக்காகவும், மக்களை எழுச்சி அடையச் செய்வதற்காகவுமே அவர் எழுதினார்.

ஒதுக்கப்பட்ட இந்தியா, மக்கள், சமத்துவம் என்ற பெயர் கொண்ட பத்திரிகைகளையும் அவர் நடத்தினார்.

**- திரு. பூவை அமுதன் எழுதிய 'அரும்பெருந் தலைவர் அம்பேத்கர்' என்னும் நூலிலிருந்து.**

இப்போதும்கூட, அந்த அரசியல் சட்டத்தை, காலத்தை வென்றதாக நாம் கருதலாம்.

1948 ஏப்ரல் மாதத்தில்தான் டாக்டர் சபீதா கபீர் - அம்பேத்கர் திருமணம் நடைபெற்றது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் டாக்டர் அம்பேத்கரின் 56-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

1951-ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ஆம் நாளன்று, தமது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துவிட்டார் டாக்டர் அம்பேத்கர். தாழ்த்தப்பட்டோருக்கு அரசு உதவியாக இல்லை என்ற குறை அவருக்கு இருந்ததும் அந்த விலகலுக்கோர் காரணம். பிறகு வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே அவர் நீடித்தார்.

1951-ஆம் ஆண்டே 'பாரதீய புத்த ஜனசங்கம்' என்றோர் அமைப்பை உருவாக்கியிருந்தார் அம்பேத்கர்.

1956-ஆம் ஆண்டு அக்டோபர் 14-ஆம் நாளன்று, நாகபுரியில் மிகப் பெரிய அளவில் பௌத்தர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த நாளை நேபாள அரசு விடுமுறை நாளாகக் கடைப்பிடித்தது.

டாக்டர் அம்பேத்கர், தனது மனைவியோடு அங்கு வந்து சேர்ந்தார். வெள்ளைக் கோட்டுப் பட்டு வேட்டியுமாக வந்த அவர், புத்த பிக்குகளால் இன்முகத்தோடு வரவேற்கப்பட்டார். அவர்களோடு ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாகப் பலபேர் வந்திருந்தார்கள்.

முதன்மை புத்தபிக்கான சந்திரமணியும், மற்றும் நால்வரும் அதற்கான சடங்குகளை நடத்தினார்கள். அவர்கள் முன்னால், அண்ணல் அம்பேத்கரும் அவரது துணைவியாரும் வணங்கி நின்றனர். சந்திரமணி கூறும் புத்தமத உறுதிமொழிகளைத் திரும்பச் சொல்லுமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

'கொலைத் தொழில் புரிவதில்லை; பொய் பேசுவதில்லை; திருடுவதில்லை; பாலுறவில் திளைப்பதில்லை; குடிப்பதில்லை...' என்று தொடங்கி 22 உறுதிமொழிகளை எடுத்துக் கொண்டு தலை வணங்கினார்கள் அவர்கள். 'இந்து மதத்திலிருந்து விலகி டாக்டர் அம்பேத்கர் புத்தமதத்தில் சேர்ந்து விட்டார்' என்று அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

ஒரு முக்கிய விஷயமாய் பம்பாய்க்குப் போகவேண்டியிருந்தது. 1956 டிசம்பர் 14-ஆம் தேதி டில்லியிலிருந்து புறப்படத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், அதற்கு முன்பாகவே அவரது இறுதிப் பயணம் இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

டிசம்பர் ஆறாம் தேதியன்று அதிகாலை நேரம். பறவைகள் சோககீதம் இசைத்தன. டாக்டர் அம்பேத்கரின் துணைவியார், கண்ணைக் கசக்கியபடி எழுந்தார். 7 மணிக்குக் கணவனை எழுப்பினார். அவர் உடலில் எந்தவித அசைவும் இல்லாதிருப்பது கண்டு திடுக்கிட்டார்.

ஆம்; அந்தச் சட்ட மேதையின் 66 வயது உடல் மட்டுமே படுக்கையில் கிடந்தது. உயிர் உடலைவிட்டுப் பிரிந்திருந்தது; உறக்கத்திலேயே அவருக்கு மரணம் சம்பவித்திருந்தது!

# பெரியார் மாவட்டம் குடிநீர்த் திட்டப் பணிகள்



கொங்கு மண்டலத்தின் ஒரு பகுதியான பெரியார் மாவட்டம் செழிப்பின் பிறப்பிடமாகவும், வளத்தின் தோற்றமாகவும், இருந்த நிலை மாறி, இம்மாவட்டத்தில் நிலத்தடி நீர்வளம் தற்போது குறைய ஆரம்பித்து பெரும்பாலான கிராமங்களில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. இப்பிரச்சினைகளைத் தீர்க்க மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் முனைப்புடன் செயல்படுகின்றன.

கடந்த ஒரு மாதமாக, பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரா.கண்ணன் அவர்கள் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து, குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், ஆழ்குழாய்க் கிணறு இல்லாத இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், உத்தரவிட்டு தற்போது அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரே நாளில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களைச் சுற்றிப்பார்த்து, கிராம மக்களின் தாகம் தீர்க்க அரும் பணியை மேற்கொண்டார்.

நடப்பாண்டில் (1992-93) மட்டும் ரூ.27.53 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப் படவுள்ளன. காங்கேயம், அம்மாப்பேட்டை, சென்னிமலை, மொடக்குறிச்சி, நம்பியூர், சத்தி, கோபி, ஈரோடு, பவானி, பெருந்துறை ஆகிய பகுதிகள் இத்திட்டத்தினால் பயன் அடைவதோடு, இப்பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை இத்திட்டத்தின் மூலம் தீர்வு காணப் படவுள்ளது.

விவசாயிகள் முன்பு கால்நடைகள் வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டிய பகுதியான காங்கேயம், வெள்ளக்கோயில், தாராபுரம் பகுதிகளில் இன்று குடிநீர் கூட மக்களுக்குப் பிரச்சினையாக இருப்பதை அறிந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 22.1.92 அன்று காங்கேயம் வருகையின்போது ரூ.20.43 கோடி செலவில் இப்பகுதிக்கான குடிநீர்த் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, இப்பகுதி மக்களின் இதயங்களைக் குளிர வைத்தார்.

இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்ற ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைக் காங்கேயத்தில் அமைக்கவுள்ளதாக அண்மையில் பெரியார் மாவட்டத்திற்கு வருகை புரிந்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பணிகளைப் பார்வையிட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாக இயக்குநர் திரு. வி.கே.சுப்புராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் மட்டும் இம்மாவட்டத்தில் உள்ள சில ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.2.80 கோடி செலவில் 276 கைப்பம்புகளும், 53 விசைப்பம்புகளும் போடப்பட்டுள்ளன. இதனால் பெரியார் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையில் இருந்து விடுதலை பெற்றன.

குடிதண்ணீர் விரிவாக்கத் திட்டத்தின் கீழ், ஈரோடு நகரில் ஒரு நாளைக்கு ரூ.85 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர் நகர மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால், அந்நிலை மாறி தற்போது ஒரு நாளைக்கு 165-180 இலட்சம் லிட்டர் விநியோகம் செய்யப்படுகிறது.

அரசு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் இடங்களின் அருகாமையில் தனியார் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மின்விசைப் பம்புகள் மூலம் தண்ணீர் எடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் எச்சரித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் கோடைக் கால வறட்சியைப் போக்கிடும் விதத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு மட்டும் இம்மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.1 இலட்சமும், புதிதாக 75 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திட அரசு அனுமதி அளித்துள்ளன. இதற்கான தொடக்கப் பணிகள் செயல்படத் தொடங்கி விட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். ●

# தமிழ்நாட்டின்

# போக்குவரத்துக் கழகங்களுக்கு

# ஏழு தேசிய விருதுகள்

சாலைப் போக்குவரத்தில் மிகச் சிறந்த உற்பத்தித் திறன், உற்பத்திச் செயல் திறன், கிராமப்புறப் போக்குவரத்துச் சேவை, எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றிற்காக அகில இந்திய அளவில் வழங்கப்படும் விருதுகளில் இதுவரை எந்த மாநிலமும் புரியாத மாபெரும் சாதனையைத் தமிழக போக்குவரத்துக் கழகங்களான அன்னை சத்யா, சோழன், பட்டுக்கோட்டை அழகிரி, இராணி மங்கம்மாள் ஆகிய போக்குவரத்துக் கழகங்கள் ஏழு விருதுகளைப் பெற்று முதன்மை இடம் பெற்றுள்ளன.

2.4.'92 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற தேசிய விருதுகளைப் பார்வையிட்டு, இந்தச் சாதனைக்கான மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களையும், போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்களையும் பாராட்டி, இனி வருங்காலங்களில் தொடர்ந்து மக்கட் பணிகளில் ஈடுபட்டு இதுபோன்று மென்மேலும் சிறப்புகளைப் பெற வேண்டுமென்று வாழ்த்தினார்.

### தேசிய உற்பத்தித் திறன் குழுவின் விருதுகள்

| | | |
|---|---|---|
| 1. தேசிய உற்பத்தித் திறன் குழுவின் விருது | கிராமப்புறப் பயணிகள் சேவையில் சாலைப் போக்குவரத்துத் துறையில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் |

## சென்னை நேரு ஸ்டேடியம் ரூ.30 கோடி செலவில் புதுப்பிக்கப்படுகிறது

பத்தாவது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டியை, சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நேரு விளையாட்டு அரங்கத்தைப் பன்னாட்டுத்தரம் உள்ளதாக மேம்படுத்தும் நோக்கத்தோடு புதுப்பிக்கவும், புதுமையாக்கவும் திட்டமிடப்பட்டு, இதற்காகும் உத்தேசச் செலவு சுமார் 30 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு 5 கோடி ரூபாய் வழங்குமாறு மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கேட்டுள்ளார்.

நேரு அரங்கத்தைப் புதுப்பிக்க மத்திய அரசு உடனடியாக ரூ.2 கோடி வழங்கியுள்ளது. மாநில அரசு ரூ. 5 கோடி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை வள்ளல்கள் மற்றும் விளையாட்டை விரும்பும் மேன்மக்கள் ஆகியோரிடமிருந்து நன்கொடையாகப் பெறப்படும்.

நேரு விளையாட்டு அரங்கைப் புதுப்பிக்கவும், புதுமையாக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த பன்னாட்டுக் கால்பந்துப் போட்டி 1993-ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெறும்.

—இந்தத் தகவலை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் சட்டப் பேரவையில் தெரிவித்தார் (1.4.'92).

| | | | |
|---|---|---|---|
| | | உற்பத்திச் செயல் திறனுக்காக முதல் இடம் | |
| 2. | " | " " இரண்டாம் இடம் | இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் |

## மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் பேரவையின் விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 3. | மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் பேரவையின் விருது | ஒரு லிட்டர் டீசலுக்கு மிக அதிக தூரம் செலுத்திய நகரப் பேருந்துகளுக்கான விருது முதல் இடம் | சோழன் போக்குவரத்துக் கழகம் |
| 4. | " | " பேருந்துகளின் செயல்திறனில் அதிகபட்ச முன்னேற்றம் - முதல் இடம் | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் |
| 5. | " | " பேருந்துகளின் உற்பத்தித் திறனில் அதிகபட்ச செயல்திறன் - முதல் இடம் | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் |

## எரிபொருள் சேமிப்பு ஆராய்ச்சிப் பேரவையின் விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 6. | எரிபொருள் சேமிப்பு ஆராய்ச்சிப் பேரவையின் விருது | ஒரு லிட்டர் டீசலில் அதிக தூரம் செலுத்தியதில் அதிகபட்ச முன்னேற்றம் - முதல் இடம் | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் |
| 7. | " | " " இரண்டாம் இடம் | அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் |

★ எவ்வகையான துன்பங்களையும் கண்டு கொதித் தெழுவோரே மனிதாபிமானம் கொண்ட மக்க ளாவர். யார் துன்பப்படுகிறார்கள் என்பதைக் கவனியாமல், மனச்சாட்சி கொண்ட ஒவ்வொரு வரும் அத்துன்பப்படுவோருக்குத் துணை நின்று அவரை விடுவிக்க வேண்டும்.



★ பொருள் ஆதாயத்தைவிட சுயமரியாதை மிக முக்கியமானதாகும். நம்முடைய போராட்டம் கௌரவத்திற்கும், சுயமரியாதைக்குமான போராட்டம்; பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமான போராட்டம் அல்ல.

# நூல் நயம்

### மழலை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர்

**ஆசிரியர்: பின்னலூர் மு. விவேகானந்தன்**
**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க்டவுன்,
சென்னை-3.

பக்கம்:120 விலை:ரூ.28/-

எளிமையும் இனிமையும் தமிழ் என நிகண்டு விளக்குகிறது. இந்த இரண்டு இயல்புகளும் இயல்பிலே அமையப் பெற்றவர் கவிஞர் பி.வி.கிரி. படைப்பாளன் இயல்புகள் படைப்புகளிலே ஊடுருவி நிற்பது வாழ்க்கை. அந்த வகையில், கவிஞர் கிரியின் குழந்தைப் பாடல்களில் எளிமையும் இனிமையும் நிறைந்து நிற்கின்றன என்பது வாசக அனுபவம். அத்தகைய கவிஞரின் அருமையான படைப்புகளை அவர் வாழுங்காலத்திலே ஆய்வு செய்வதும், அதை அரிய நூலாக வடிப்பதும் போற்றத்தக்கவை.

'மழலை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர்' என்னும் அழகிய தலைப்பில் பின்னலூர் மு.விவேகானந்தன் எழுதியுள்ள இந்நூல், ஏழு தலைப்புகளில் கவிஞர் பி.வி.கிரியின் பல துறைப் பணிகளையும் பரக்கப் பேசுகிறது. கவிஞர், எழுத்தாளர், குழந்தை எழுத்தாளர், இதழியலாளர், நாடக ஆசிரியர் என்ற வகைகளில் பி.வி.கிரி பெற்றுள்ள இடத்தை இந்நூலில் உறுதிப்படுத்துகிறது. நீரோட்டமான நடையில் நிகழ்காலத்தை வரலாறாக்கும் தொடர்பணியில் ஈடுபட்டுள்ள நூலாசிரியர் விவேகானந்தனுக்கு இது இன்னொரு வெற்றிப்படி.

சி.எல்.எஸ்.நிறுவனத்தின் வெளியீடாக மலர்ந்துள்ள இந்நூலின் அச்சும், வடிவமும் மெச்சும்படி உள்ளன.

இலக்கிய வரலாற்றில் இதுபோன்ற முயற்சி ஒரு மைல்கல்.

—இளந்தேவன்.

### முதுமையிலும் இன்பம்

**ஆசிரியர்: வ.செ.நடராசன்**
**(மூப்பியல் மருத்துவ நிபுணர்)**
**வெளியீடு:**
சக்தி பதிப்பகம்
17, 17-வது தெரு, Q பிளாக்,
அண்ணாநகர், சென்னை-600 040.

பக்கம்:200 விலை:ரூ.18/-

முதுமை என்பது தவிர்க்க முடியாதது. இளமை என்பது கடந்து செல்வது. இளமையில் தெம்பிருக்கும்; முதுமையில் சோர்வு அடுக்கும். நோய்கள் பற்றும்; நலவாழ்வு குன்றும்; இது இயல்பு. முயன்றால் முதுமையை வெற்றி கொள்ள முடியும். முதுமையை வெல்வது எப்படி? முதுமையிலும் இளமை உணர்வுடன் திகழ்வது எவ்வாறு? இவற்றிற்குரிய விளக்கத்தை இந்நூல் வழங்குகிறது.

நூலாசிரியர், மூப்பியல் மருத்துவத் துறையில் பணியாற்றித் தான் பெற்றிருக்கும் அனுபவத்தை இந்நூலின் வாயிலாக, படிப்போருக்குப் பரிமாறியிருக்கிறார். முதுமையில் ஏற்படுகிற நோய்களையும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய வழிமுறைகளையும் எடுத்துக் கூறியிருக்கிறார். மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்னும் முதுமொழியை நாமறிவோம். மூத்தோர்க்குச் சொல்லும் வார்த்தையும் அமிர்தம் என்னும் புதுமொழியை இந்நூல் உணர்த்துகிறது. இந்நூலில் சொல்லப்பட்டுள்ளபடி, முதியவர்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டால் முதுமையை எளிதில் வெல்லலாம். இது சிறந்ததொரு வழிகாட்டி நூலாகத் திகழ்கிறது. எளிய நடை-உயர்ந்த பதிப்பு-தரமான தாள் + விளக்கப் படங்கள் - ஆகியவை இந்நூலின் சிறப்பம்சங்கள்.

—தமிழ்ப்பித்தன்

### மரபில் பூத்த மலர்கள்

**ஆசிரியர்:**
முனைவர்-நெல்லை. ந. சொக்கலிங்கம்
**வெளியிட்டோர்:**
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004.

பக்கம்:112 விலை:ரூ.14/-

சங்க இலக்கியத்திலிருந்து இந்தக் காலப் புதுக்கவிதை வரை பழந்தமிழ் மரபு எங்கெல்லாம் எவ்வாறெல்லாம் ஆழமாகக் காலூன்றியிருக்கிறது என்கிற பாங்கு இனிய - எளிய தமிழில் ஆய்வு செய்யப்பட்டுள்ள கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது; இதிலுள்ள எட்டுக் கட்டுரைகளும் வெட்டிவைத்த செங்கரும்புத் துண்டுகளாக இனிப்பவை; மெய்ப்பாடுகள் எட்டின் எடுத்துக்காட்டாய்த் திகழ்பவை.

திருக்குறள், புறநானூறு, இராமாயணம், நந்திக் கலம்பகம், அங்கதப் பாடல்கள் ஆகியவற்றிலிருந்து - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் குறுங்காவியங்கள் உட்பட இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டிருப்பதே நூலாசிரியரின் தமிழ்ப் புலமை, இலக்கியத்திறன் ஆகியவற்றை நமக்குணர்த்துகிறது.

தமிழிலக்கிய ஆர்வலர்களால் இந்த நூல் பெரிதும் வரவேற்றுப் பாராட்டப் படும் என்று எதிர்பார்க்கலாம்.

- 'சோழராஜா'

### நெற்றியில் ஓர் எரிமலை.

**ஆசிரியர்: கவிஞர் பல்லவன்**
**வெளியீடு:**
குமணன் பதிப்பகம்,
29, திருவள்ளுவர் நகர்,
திருக்கழுக்குன்றம்-603109

பக்கம்:114 விலை:ரூ.15/-

எழுச்சியூட்டும் உணர்ச்சிக் கவிதைகளின் உருவாக்கமே இக்கவிதைத் தொகுப்பு. முதல் கவிதையே (உயர் தமிழே, உயிர் தமிழே!) நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. நூலில் தென்றலும் வீசுகிறது., புயலும் வீசுகிறது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, 'சரித்திர நூலில் வாழ்வேன்!' என்னும் ஒரு பாடலே போதும் இத்தொகுப்புக்கு. தமிழ் மணம் கமழும் இந்நூலில் சமுதாயக் களை களைக் களைந்திடவும் வழி வகுக்கிறார் கவிஞர்.

கவிதை என்பது என்ன?

'கவிதை என்பது எழுத்தல்ல-அது கரைந்து போகும் மெழுகல்ல. கவிதை குருதிப் புனலாகும்-இருட்காட்டை அழிக்கும் அனலாகும்!' என்கிறார் கவிஞர். அருமையான கவிதை மாலை. அனைவரும் சூட்டிக் கொள்ளலாம்.

—மறைமலை.

### இராமாயணரத்தினங்கள்

**ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்**
**வெளியீடு:**
ஓரி நிலையம்
3/37, சத்தியமூர்த்தி நகர்
நந்தனம், சென்னை-600 035

விலை: ரூ.30 பக்கம்: 278

புராண இதிகாசங்கள் நம் பண்டைய செல்வங்கள். காலத்தால் அழிக்க முடியாத கருப்பொருள்கள். இராமாயணம் அவற்றுள் ஒன்று. அதை எளிய இனிய நடையில் தனக்கே உரிய பாணியில் எழுதியுள்ளார் ஆசிரியர். 109 தலைப்புகளில், இரத்தினச் சுருக்கமாக வரையப் பட்டிருக்கிறது இந்த 'இராமாயண ரத்தினங்கள்.

- பி.வி. கிரி.



# கல்வி சிறந்த தமிழ்நாடு

பள்ளிக் கல்வித்துறையில் 'ஏ' பிரிவு ஆசிரியர்களுக்கும் மற்றும் முன்னாள் மாவட்டக் கழகப் பள்ளிகளைச் சார்ந்த 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கும் இடையில் சில பிரச்சினைகள் 1978-ஆம் முதற்கொண்டு தீர்க்கப்படாமல் நிலுவையாக உள்ளன. அதன் விளைவாக, பள்ளிக் கல்வித்துறையில் 712 மேற்பார்வையாளர்கள் போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தன.

மேற்கண்ட 712 பதவிகளை நிரப்புவதற்கு ஏதுவாக உச்ச நீதி மன்றத்தில் அரசு இடைக்கால உத்தரவு பெற்று முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் தலைமை ஆசிரியர் முதலான பதவிகளை நிரப்பியது.

பெண்களுக்கான அரசுத் தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு முதல்வராகப் பெண்கள் தொழில்நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் பெண் ஆசிரியர்களைக் கொண்ட தனி பணிமூப்புப் பட்டியலிலிருந்து நியமனம் செய்யப்படுவார்கள் எனக் கொள்கை முடிவெடுத்துள்ளது.

பள்ளிகளில் அறிவியல் கல்வியை வளர்ப்பதற்காக மைய அரசிடமிருந்து ரூ.5.00 கோடி மானியமாகப் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினால் பயன்பெற உள்ள பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 1,306 ஆகும்.

எம்.ஈ., எம்.எஸ்., மற்றும் பி.எச்டி. போன்ற தொழில்நுட்பப் பட்டமேற்படிப்புக் கல்விக்காக நமது மாணவர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்வதைத் தவிர்க்க, அவர்களுக்கு இங்கேயே அந்த வசதிகள் ஏற்படுத்தப்படும்.

பதினொன்றாம் வகுப்பின் முடிவில் மாவட்ட அளவில் பொதுத் தேர்வு நடத்த அரசு தீர்மானித்துள்ளது. இது அடுத்த கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்படும்.

பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் தங்கள் பணிநிலையில் உள்ள சில குறைபாடுகள் குறித்து அவ்வப்போது அரசிற்கு விண்ணப்பித்துள்ளன. ஆசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமானதாக இருந்ததால் அரசு அந்தக் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து அதை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆசிரியர்களிடம் மனநிறைவு ஏற்பட்டால்தான் கல்வியின் தரத்தை மேம்படுத்த உதவும் என்பதால் ஆசிரியர் நலத்திட்டங்கள் சில அறிவிக்கப்படுகின்றன.

உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வுக்கு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுடன் 2:5:2 என்ற விகிதத்தில் கருதப்படுவர்.

குறைந்தபட்சக் கல்வித் தகுதிக்கு மேல் உயர்கல்வித் தகுதியுடைய பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படும்.

ஈரோட்டில் சேரன் போக்குவரத்துக் கழகம் நடத்தி வரும் சொந்த நிதி பொறியியற் கல்லூரியைப் போன்று ஆசிரியர் நலநிதியிலிருந்து சொந்த நிதி பொறியியற் கல்லூரி ஒன்று தொடங்கப்பெறும். இதில் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு 50 சதவிகிதம் இடம் ஒதுக்கப்பெறும்.

மத்திய அரசு நிறுவியுள்ள நவோதயப் பள்ளிகளில் தாய் மொழியில் எட்டாம் வகுப்பு வரையிலும், ஆங்கில மொழியில் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும் பயில்வதற்குக் கிராமப்புறங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர் தங்கிப் பயிலவும் அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், உபகரணங்கள் மற்றும் உதவிகளைச் செய்யவும் இவ்வரசு எண்ணியுள்ளது. இந்தப் பள்ளிகளில் இந்தி போதனா மொழியாக இருக்காது.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ.2.4 கோடி தொடராச் செலவினத்தில் ஜவகர் நவோதயப் பள்ளிகள் துவக்கப்படும்.

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழி போதனா முறைக்குத் தொடர்ந்து கோரிக்கை இருந்து வருகிறது. இதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. இவ்வகுப்புகளில் சேரும் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக் கட்டணம் செலுத்த வேண்டும். அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வி முறை வகுப்புகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும் அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட வகுப்புகளில் சேரும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் அதிகப்படியான கட்டணத்தைக் கொண்டு அப்பள்ளிகளில் கூடுதலாக நியமிக்கப்படும்

ஆசிரியர்களின் ஊதியத்தைச் சரி செய்யவேண்டும்.

பேச்சு வழக்கு ஆங்கிலம் உட்பட அம்மொழியில் மாணவர்களின் திறனை மேம்படுத்த தற்போது கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் உள்ள மண்டல ஆங்கில மொழிப் பயிற்சி மையங்களை வலுப்படுத்தி மேலும் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படும்.

வேலூர் அரசு பாலிடெக்னிக் வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் தந்தை பெரியார் அரசுப் பொறியியற் கல்லூரி தொழிற்கல்வி வசதி குறைந்த தர்மபுரி மாவட்டம் பர்கூருக்கும் கிருஷ்ணகிரிக்கும் இடையில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி மாற்றப்படும்.

கல்வித்துறையானது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தும், எனவே, கல்வித்துறையின் பெயர், கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை என்று மாற்றம் செய்யப்படும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு, சூரிய சக்தியைப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான சிறப்பு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும். இந்நிலையத்தை அமைக்க அரசு தொடக்க மானியமாக ரூ.10 இலட்சம் வழங்கும்.

கிராமப்புற மக்களுக்குச் சாதாரணமான முறையில் குடிநீர் வழங்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. எனவே, கடல்நீரைச் சூரிய சக்தி மூலம் குடிநீராக்குவது ஒன்றுதான் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று அரசு கருதுகிறது. தற்போதுள்ள தொழில்நுட்ப வசதிகளுக்கு இடையில் கடல்நீரைக் குடிநீரக்குவதால் அரசுக்கு மிகுந்த செலவு ஏற்படும். எனவே, சூரிய சக்தி மூலம் கடல்நீரைக் குடிநீராக்கக் குறைந்த செலவில் திட்டமிட்டுத் திட்டம் நிர்மாணம் செய்யும் அறிவியல் வல்லுநர்களுக்கு ரூ.10 இலட்சம் சன்மானம் அளிக்க அரசு மகிழ்ச்சியுடன் முன்வருகிறது.

பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்தி அதன் இலக்கினை அடைய வேண்டுமாயின் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களின் தரத்தை மற்றும் திறத்தை உயர்த்தவேண்டும் என்பதை அரசு அறிந்தே உள்ளது. எனவே, இடைநிலை ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் பின்பற்றப்படும் முறைகளுக்குத் திருத்தங்கள் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. எனவே, இனிமேல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ள அனைத்து நபர்களுக்கும் மாவட்ட அளவில் வடிகட்டும் முறை (Screening Test) நடத்தப்படும். அதில் எவர் குறைந்தபட்சம் 50 சதவிகித மதிப்பெண் பெறுகிறார்களோ அவர்கள் ஒரு குழுவால் நேர்முகமாகத் தேர்வு செய்யப்பட்டு இடைநிலை ஆசிரியர் பதவிக்குப் பொருத்தமானவர்களை அக்குழு தேர்வு செய்யும்.

புதிய பாடத் திட்டத்தில் தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்வதற்காக ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் புதிய பாடத் திட்டத்தில் போதிய பயிற்சி அளிக்கப்படும்.

தற்போது தொகுப்பூதியம் பெற்று வரும் ஒரு நேர மற்றும் இருநேரத் தொழிற்பயிற்சி ஆசிரியர்களின் நீண்டகாலக் கோரிக்கையான முறையான ஊதிய விகிதத்தில் ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசால் ஆய்வு செய்யப்பட்டு, பின்வருமாறு முடிவு செய்யப்பட்டுள்ளது:-

(அ) முழுத் தகுதி வாய்ந்த 587 இரு நேரப் பகுதி தொழிற் பயிற்சி ஆசிரியர்கள் பள்ளி உதவியாளர்கள் பணியிடத்திற்குரிய முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள்.

(ஆ) மீதமுள்ள 450 முழுத் தகுதி பெறாத இரு பகுதி நேர தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் பணியில் ஈர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(இ) முழுத் தகுதி வாய்ந்த ஒரு பகுதி நேரத் தொழிற் பயிற்சி ஆசிரியர்கள் தற்போதுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்குக் கொண்டுவரப்படுவார்கள்.



(ஈ) மீதமுள்ள முழுத் தகுதி பெறாத ஒரு பகுதி நேரத் தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் இனிமேல் ஏற்படும் காலிப் பணியிடங்களில் ஈர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தற்பொழுது, 324 விரிவுரையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அரசுக் கல்லூரிகளில் பணி புரிகிறார்கள். இவர்களில் 242 பேர் எம்ஃபில் மற்றும் பி.எச்டி கல்வித் தகுதிகளைக் கொண்டிருப்பதால் இவர்கள் பல்கலைக் கழக மானியக் குழு விதிகளின்படி 'எழுத்துத் தேர்விலிருந்து' விலக்களிக்கப்படுகின்றனர். எனினும், இவர்கள் ஆசிரியர் தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு காலியாகவுள்ள இடங்களில் பணியிலமர்த்தப்படுவர்.

மற்ற ஆசிரியர்கள் 'எழுத்தறிவுத் தேர்வு' எழுதி ஆசிரியர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

தொடக்கப் பள்ளிகளில் 1-லிருந்து 3-ஆம் வகுப்பு வரை கட்டாயமாகப் பாஸ் போடும் திட்டத்தை மாற்றித் தேர்வுகள் நடத்தப்படும்.

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களில், தகுதி வாய்ந்தவர்களின் பணி விதிகளின்படி படிப்படியாகக் காலியிடங்கள் ஏற்படும் போது, அவற்றில் முழு நேர ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர்.

நடப்பு ஆண்டில் உருவாக்கப்படும் புதிய ஆசிரியர் பணியிடங்கள் பல்வேறு தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படும்:-

(அ) ஆசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்படாத, புதியதாகத் திறக்கப்பட்ட பள்ளிகளுக்கு மேலும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(ஆ) ஓர் ஆசிரியர் பள்ளிகளுக்கு மேலும் ஓர் ஆசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்படும்.

(இ) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், மாநகராட்சி, நகராட்சி, நகரியம் மற்றும் பயிற்சி நிறுவனப் பள்ளிகள் என்ற வரிசைக் கிரமத்தில் பணியிடங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.



**★ பிறந்தவன் சாவான் என்பது இயற்கை. அதைக் கண்டு நான் பயப்படவா போகின்றேன்? ஆனால், சீரிய இலட்சியமாகிய சுயமரியாதையை மேலும் வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அதுதான் மனித வாழ்விற்கே சிறப்பாகும். நாம் அடிமைகள் அன்று; நாம் போர்வீரர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். சுயமரியாதை இல்லாமல், நாட்டுப் பற்று இல்லாமல் பற்றின்றி வாழ்வதைவிடச் சாவதே ஒரு வீரனுக்கு உகந்த வழியாகும்.**

(ஈ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் தளர்த்தப்படும்.

எட்டாம் வகுப்பைப் படிப்படியாக உயர்நிலைப் பள்ளிகளோடு இணைத்து எட்டாம் வகுப்புக்குக் கல்வியியல் பட்டம் (B.Ed.) படித்த ஆசிரியர்களைப் படிப்படியாக நியமித்தல். இதனால் கல்வியின் தரம் உயர வாய்ப்புள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குப் புதியதாகக் கட்டடம் கட்டப்படுவதோ அல்லது ஏற்கெனவே உள்ள கட்டடங்களைப் பராமரிப்பதோ ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும்.

கீழ்த்திசை நாடுகளில் உள்ளதைப்போல மாணவர்களிடையே நாட்டுப்பற்று (Patriotism) வளர்ப்பதற்கு உண்டான பாடல்கள் அறிமுகப்படுத்தப்படும். HUDCO நிறுவனத்திடமிருந்து சென்ற நிதியாண்டு 1991-92-இல் 64 பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 225 இலட்சம் கடன் பெற்று அரசு பங்குத் தொகையாக ரூ.75 இலட்சம் செலவழிக்கப்பட்டது. அதே போன்று நடப்பாண்டிலும் 64 பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

459 ஓராசிரியர் பள்ளிகளை 3 ஆசிரியர் பள்ளிகளாகவும், 6,545 ஈராசிரியர் பள்ளிகளை 3 ஆசிரியர் பள்ளிகளாகவும் மாற்ற கரும்பலகைத் திட்டத்தின் கீழ் மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் அதுவும் பெண்கள் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை இழந்த நிலையில், 15 வயதிற்கு மேற்பட்டோர், பள்ளி இறுதித் தேர்வுச் சான்றுக்குச் சமமானதொரு படிப்பைத் தொடரும் வாய்ப்பளிக்கும் வகையில், பள்ளிசாராக் கல்வி முறையை அடிப்படையாகக் கொண்ட பள்ளி ஒன்று மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் நடத்திச் சான்றுகள் வழங்கப்பட்டு வந்தது; இது 1989-90 முதல் நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் மேற்கொண்டு பலர் பயன் பெற்றுத் தகுதியை உயர்த்திக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, அத்தகையோர் வசதிக்காக இப்பள்ளி மறுபடியும் வரும் கல்வி யாண்டு 1992-93-லிருந்து துவக்கப்படும்.

தனியார் துறையில் புதிதாகத் தொடங்கும் கல்வி நிறுவனங்கட்கு-பள்ளிகள், கல்லூரிகளுக்கு இனிமேல் நிதி உதவி கிடையாது.

அங்கீகாரம் மட்டும் அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு, துவக்கப்படும் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் தேவையான இடங்களில், தேவைகளைப் பொறுத்து வழங்கப்படும்.

இந்த நிலை, சிறுபான்மை, பெரும்பான்மை ஆகிய இரு பாலருக்கும் பொருந்தும்.

**- மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தில் 1.4.92-2.4.92 ஆகிய நாட்களில் அறிவித்தவற்றிலிருந்து.**



# கோயில்களும் பழந்தமிழர் பண்பாடும்

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் மக்கள் ஓலை, களிமண் போன்ற பொருட்களால் கோயில் கட்டி இறைவனை வழிபட்டனர் என்று சங்க இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. ஆனால், கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே, என்றும் அழியாத கல் கொண்டு கோயில் கட்டும் பழக்கத்தைத் தமிழகத்தில் பல்லவர்கள் அறிமுகப்படுத்தி, அதைச் சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள் போன்ற அரச வம்சத்தினர் விரிவுபடுத்திக் கையாண்டனர்.

இத்தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் மட்டுமல்லாமல் அவர்கள் படையெடுத்துச் சென்று வெற்றி கண்ட அண்டை நாடுகளிலும் கட்டடக் கலையின் நுணுக்கங்களுடன் கோயில் கட்டி இறைவனை வழிபட்டனர். இக்கோயில்கள் அக்காலத்தில் இறைவனை வழிபட மட்டும் பயன்படாமல், அக்கால அரசியல், சமுதாய, பொருளாதார மற்றும் பண்பாட்டின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன. ஆகவே, பழந்தமிழரின் பண்பாட்டில் கோயில்களின் பங்கைப் பற்றி ஆராய்வோம்.

**அரசியல்**

பழந்தமிழ் நாட்டில் கோயில்கள் அக்கால அரசியலின் தலைமைச் செயலகம் போல் செயல்பட்டன. கோயில்களில் அரசன் தங்கியிருக்கவும், அவன் அமைச்சு நடத்த அவையும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.


**டாக்டர் சி. செல்வராஜ்,**
வரலாற்றுத் துறை விரிவுரையாளர்
நே.நி. கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம்
கன்னியாகுமரி மாவட்டம்-629 165


அந்த அவையில் அரசன் அவ்வப்போது அமர்ந்து நாட்டு நிர்வாகங்களைக் கவனிப்பது வழக்கம். அக்கால அரசர்களுக்கு ஆலோசனை கூற ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இக்குழுக்கள் கோயில் வராந்தாவில் கூடி நாட்டில் உள்ள பிரச்சினைகளை விவாதம் பண்ணி, தகுந்த ஆலோசனைகளை அரசனுக்கு வழங்கி வந்தன. இது மட்டுமல்லாமல் அரசில் பல்வேறு நடவடிக்கைகள், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், பல்வேறு சலுகைகள் போன்றவைகளைக் கோவிலிலிருந்தே அரசன் அறிவித்தான்.

மேலும் அவ்வரசர்கள் வெளியிட்டுள்ள அரசு ஆணைகள் கோயில் சுவர்களில் மக்களின் பார்வைக்கு வசதியாகச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளைப் பழந்தமிழ் அரசர்கள் கட்டிய அனைத்துக் கோயில்களிலும் இன்றும் காணலாம்.

இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் சுவர்களில் அவ்வரசன் வெளியிட்டுள்ள அரசு ஆணைகள் செதுக்கி வைத்திருக்கும் பாங்கு, பார்ப்போரைக் களிப்புறச் செய்கிறது. மேலும் இக்கல்வெட்டுகளில் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சிகள், வெளிநாட்டுப் படையெடுப்புகள், அவற்றின் வெற்றி தோல்விகள், போரின் முடிவில் கவரப்பட்ட செல்வங்கள், போரின் விளைவுகள் போன்றவற்

## பொன்மொழிகள்

எப்போதும் தொண்டு செய்வ தற்குத் தயாராக இரு. அதற்குரிய சந்தர்ப்பம் எதையும் தவற விட்டு விடாதே. சாதனை படைக்கச்சமயம் போதாது என்று குறை கூறாதே. எப்போதும் அடக்கமாகவும் எளிமை யாகவும் இருக்கப் பழகிக் கொள்.

*— சுவாமி சிவானந்தர்.*

உண்மையே உள்ளத் தூய்மையை உண்டாக்கும். உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர்நாடி.

நல்ல நம்பிக்கையின்றி நல்ல அறிவு உண்டாகாது. நல்ல அறி வின்றி நல்ல ஒழுக்கம் உண்டாகாது.

*— மகாவீரர்.*

றையும் பொறித்து வைத்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல், அரசனே அக்காலத்தில் தலைமை நீதிபதி யாகவும், நீதி அரசனாகவும் செயல் பட்டான். கோவிலிலுள்ள அறை யிலேயே நீதிமன்றம் அமைக்கப் பட்டு, ஆண்டவன் முன் குற்றவாளி களை விசாரித்து, முறையான தண் டனைகள் வழங்கப்பட்டதாகப் பழந் தமிழ்க் கோயில் கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன. இவைகளைப் பார்க்கும்போது, அக்காலக் கோயில்கள் இறைவனை வழிபட மட்டும் பயன்படாமல் ஆட்சி செய் யும் அரசனின் தலைமைச் செயலக மாகவும், நீதி வழங்கும் நீதிமன்ற மாகவும் செயல்பட்டன என்று நன்கு புலனாகிறது.

### பொருளாதாரம்

பழந்தமிழர்களின் ஆட்சிக் காலத்தில் ஆலயங்கள் ஆட்சி செய்யும் அரசனின் துணைக் கருவூல மாகச் செயல்பட்டன. அக்காலத்தில் மக்கள் கோயிலுக்குத் தானங்கள் செய்வதைப் பெரும் பேறாகவும், தாங்கள் செய்த பாவத்திலிருந்து விடுதலை கிடைக்க உதவும் என்றும் வீடு பேறு அடைய உதவும் என்றும் நம்பினார்கள்.

ஆகவே, அவ்வப்போது அரசர்கள், அதிகாரிகள் மற்றும் பொது மக் களும் கோயில்களுக்குத் தானமாக ஏராளமான நிலங்கள் மற்றும் பொன், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களைத் தானமாக வழங்கினர். இவ்வாறு தானமளிக் கப்பட்ட நிலங்களைக் கோயில் நிர் வாகிகள் குத்தகைக்கு விடுவதால் கிடைக்கும் வருமானம் மற்றும் நன் கொடையால் கிடைக்கும் வருமானம் போன்றவைகளால், கோயில்கள் பெரும் செல்வத்துடன் காணப் பட்டன.

வெளி நாட்டுடன் போரிட்டு வெற்றியுடன் திரும்பும்போது, தான் போரிட்ட நாட்டிலிருந்து ஏராள மான விலையுயர்ந்த பொருட்களைக் கவர்ந்து வருவதைப் பழந்தமிழர்கள் தம் மரபாகக் கடைபிடித்தனர். அப்பொருட்களைத் தமிழ் அரசர்கள் தாம் கட்டிய கோயில்களில் சேமித்து வைத்துப் பாதுகாத்தனர். மேலும் அப்படி கோயிலில் வைக்கும்போது, அப்பொருட்கள் எல்லாம் கோயிலுக் குக் கொடுக்கப்பட்டன. அவற்றின் பெயர், எடை போன்றவைகளைப் பட்டியல் போட்டு அரசன் தன் கையில் வைத்துக் கொண்டான்.

உதாரணமாக முதலாம் இராஜ ராஜ சோழன் தான் சேர, பாண்டிய, சாளுக்கிய நாட்டின் மீது போரிட்டு வெற்றியுடன் திரும்பும்போது கொண்டு வந்த பொருட்களை எல்லாம், தான் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவூலத் தில் வைத்துப் பாதுகாத்ததாக அக் கோயில் கல்வெட்டுகள் கூறுகின் றன. கல்வெட்டின் கூற்றுப்படி ஏராளமான அளவு தங்கம், தங்க ஆபரணங்கள், தங்க மலர்கள், முத்து, பவளம் மற்றும் வீட்டு உப யோகப் பொருட்கள் உட்பட ஏராள மான பொருட்கள் கொடையளிக்கப் பட்டுள்ளன. இதைப்போல் முதலாம் இராஜேந்திர சோழன் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்து வெற்றி யுடன் திரும்பியபோது ஒருக்கட்டு தங்க மலர்களைக் கொண்டு வந்து தஞ்சைப் பெரிய கோயில்லுக்குத் தானமாகக் கொடுத்துள்ளான். இதே போல் இவ்வரசன் கடாரத்தின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும் பியபோது, அங்கிருந்து கொள்ளை யடித்துக் கொண்டு வந்த செல்வங் களைத்தான் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய சிவன் கோயி லுக்குத் தானமாகக் கொடுத்துள்ளான்.

அவ்வாறே, தமிழ் அரசர்கள் தாங்கள் போரில் வெற்றியடைந்து தாய் நாடு திரும்பியதும், வெற்றிக்கு உதவிய இறைவனுக்கு நன்றி தெரி விக்கும் முறையாகத் தாம் கொண்டு வந்த பொருட்களைத் துலாபாரம் (தனது எடைக்கு நிகராகப் பொன் நிறுத்துக் கொடுத்தல்) செய்து கோயிலுக்குத் தானமாகச் செய்து கொடுத்தனர். இவ்வாறு செய்தால் தங்கள் எதிரி நாட்டில் போரிடும் போது கொல்லப்பட்ட ஏராள வீரர்கள் மற்றும் யானை, குதிரை போன்ற விலங்குகளிலிருந்தும் தனக்குப் பாவ மன்னிப்புக் கிடைக் கும் என்றும், வீடு பேறு அடைய உதவும் என்றும் நம்பினர்.

உதாரணமாக முதலாம் இராஜேந்திரன் வட நாட்டின் மீது படையெடுத்துத் திரும்பி வந்ததும், தஞ்சைப் பெரிய கோயிலுக்குத் துலாபாரம் செய்து கொடுத்தான் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. இதைப் போல் பாண்டிய நாட்டிலும் அரசன் ஜடாவர்மன்



சுந்தர பாண்டியன் தான் ஹொய்சள நாட்டின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியதும் சிதம்பரம் மற்றும் ஸ்ரீரங்கம் சிவன் கோயிலுக்குத் துலாபாரம் செய்து கொடுத்ததாக அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் சோழ அரசர்கள் சில சமயங்களில் தாங்கள் இவ்வாறு கொண்டுவந்த செல்வத்தினால் சிதம்பரம் நடராசர் கோயிலுக்குத் தங்கத்தால் கூரை வேய்ந்தனர் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வாறு பழந்தமிழ் அரசர்கள் தாங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட செல்வத்தில் பெரும்பகுதி கோயிலுக்குப் பல வழிகளில் போய்ச் சேர்ந்ததால், அக்காலக் கோயில்கள் மிகவும் செல்வத்துடன் காணப்பட்டன. இச்செல்வம் நாட்டில் செல்வமாகவும் அரசனின் ஒரு துணைக் கருவூலமாகவும் செயல்பட்டன. அச்செல்வத்தைக் கொண்டு அரசன் பல சமுதாய, மற்றும் பண்பாட்டுப் பணிகளைச் செய்தான்.

மேலும் கோயில்களுக்கு அரசன் முதல் சர்தாரண ஏழை வரை தானமாக நிலங்களும், பொன்னும், பொருளும் வாரி வழங்குவதால் அக்காலக் கோயில்கள் பெரும் செல்வச் செழிப்புடன் காணப்பட்டன. இந்தக் கோயில் நிலங்களைப் பராமரிக்கவும், விவசாயம் செய்யவும், கோயிலைச் சுத்தம் செய்யவும், கோவிலுக்கு வேண்டிய பொருட்களைப் படைக்கவும், மற்றும் பணிவிடைகள் செய்யவும் ஏராளமானவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர் இவர்கள் காலை முதல் மாலை வரை கோயில் நிலத்தால் உழைத்து, கோயில் வருமானத்தில் ஊதியமும் பெற்றனர். ஆகையால் கோயில்கள் அக்காலத்தில் பலரை ஆண்டு முழுவதும் வேலையில் அமர்த்தும் அமைப்பாகவே செயல்பட்டது.

**கல்வி**

பழந்தமிழர்கள் கல்வியின் சிறப்பினை நன்கு உணர்ந்திருந்தனர். எனவே பல கல்விக் கூடங்களை ஏற்படுத்திப் படிக்க வசதிகள் பல செய்து கொடுத்தனர். அவைகள் கட்டிகா, மதா, சாலை என்று அழைக்கப்பட்டு கோயில்களுடனே செயல்பட்டன. இவைகளை நிர்வகிக்க ஆகும் செலவு மற்றும் பராமரிப்பு எல்லாவற்றையும் கோயில்களே ஏற்றிருந்தன. இக்கல்லூரிகளில் வட மொழியில் பயிற்றுவிக்கப்பட்டு, மதம், விஞ்ஞானம், வானவியல், சோதிடயியல் போன்றவைகள் போதிக்கப்பட்டன.



உதாரணமாக - கும்பகோணம் இராஜேஸ்வரசுவாமி கோயிலில் பரகேசரிவர்மன் என்கிற அரசன் கி.பி.959-இல் கல்வி பயிற்றுவிக்கக் கல்விச் சாலை ஒன்றைக் கட்டி, கல்வி கற்பிக்க ஏற்பாடு பண்ணியதாக அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

இதேபோல் எண்ணாயிரம் என்னும் ஊரில் உள்ள சிவன் கோயிலில் மிகப் பெரிய வேதக் கல்லூரியொன்றும் செயல்பட்டதாகச் சொல்லப்படுகிறது; இதைக் குறிக்கும் கல்வெட்டில் ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களின் பராமரிப்புப் போன்ற விவரங்கள் யாவும் தெளிவாக உள்ளன.

அக்காலக் கோயில்களில் தொழில் கல்விக்கெனத் தனிப்பட்ட கல்லூரிகள் செயல்பட்டதாகக் காண்கிறோம். வீர இராஜேந்திர சோழனின் திருமுக்கூடல் கல்வெட்டு, அவ்வூர் சிவன் கோயிலில் மருத்துவக் கல்லூரி ஒன்று செயல்பட்டதாகக் கூறுகிறது. இக்கல்வெட்டின் கூற்றுப்படி அதில் சுமார் 340 மாணவர்கள் பயின்றதாகவும் அவர்களுக்கு நிதி உதவி, இலவச உணவு, உடை போன்றவைகள் அளிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், இம்மாணவர்களின் சோதனைப் பயிற்சிக்கு வேண்டி ஒரு பெரிய மருத்துவமனை அக்கோயிலோடு இணைந்து செயல்பட்டதாகவும் இதற்குத் தேவையான மருத்துவ வசதிகள் இருந்ததாகவும் செவிலியர் மற்றும் உதவியாளர் போன்றவர்கள் அங்கே வேலை செய்ததாகவும் அவர்களின் மாதச் சம்பளம், சலுகைகள் போன்ற விவரங்கள் அனைத்தும் அக்கோயில் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன.

இவைகளைப் போன்று திருவொற்றியூர், திருத்தணி, திருவெறும்பூர் போன்ற ஊர்களில் அமைந்துள்ள கோயில்களிலும், கல்விச் சாலைகள் செயல்பட்டதாக அந்த ஊர் கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**கலை வளர்ச்சி**

பழந்தமிழரின் கோயில்கள் கலையின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன. இவர்கள் கட்டிய கோயில்கள் திராவிடர் கோயில் கட்டடக் கலையின் சின்னங்களாகத் திகழ்கின்றன. இக்கோயில்கள் கம்பீரமான தோற்றம், உயரமான கோபுரம், அர்த்த மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம், போன்ற பல பிரிவுகளைக் கொண்டது. கோயிலைச் சுற்றிலும் மதில் சுவர்கள் கட்டப்பட்டிருக்கும்.

முதலாம் இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் தென்னிந்தியக் கட்டடக் கலையின் சின்னமாய்த் திகழ்கிறது. மேலும் இக்கோயில்களின் சிற்பக் கலைகள் சிறந்து விளங்குகின்றன. வெண்கலம், செம்பு, வெள்ளி, கல், தங்கம் ஆகியவற்றில் சிற்பிகள் தங்களது திறனை வெளிப்படுத்தி மிகச் சிறந்த சிற்பங்களை அமைத்துள்ளனர். இச்சிற்பங்களில் இறைவனின் திருவுருவங்கள் பல்வேறு கோணங்களில் அழகுடனும் உயிரோட்டத்துடனும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சோழர்கள் தம் கோயில்களின் கருவறைச் சுவர்களில், அழகான ஓவியங்கள் தீட்டி தங்கள் கலைத் திறனை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த ஓவியங்கள் இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றின் செய்தியைச் சித்திரிப்பவைகளாய் உள்ளன. தஞ்சை, திருமயம், மாமண்டூர், நார்த்தாமலை, சித்தன்ன வாசல், மலையப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள சோழர் ஓவியங்கள் என்றும் காண்பதற்கு வியப்பாக உள்ளன. இவைகளின் மூலம் அக்காலத் தமிழ் மக்களின் பண்பாடு, நடை, உடை, பாவணைகள், அணிகலன்கள், தலை அலங்காரம், சமயம், வாழ்க்கை முறை முதலியவற்றை அறிய முடிகிறது.

**இசை**

சோழ அரசர்கள் இசையைப் போற்றி வளர்த்தனர். கோயில்களில் முக்கியமான விழாக்கள் நடைபெறும் போது இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன. சோழர் காலத்தில் இசைக் கருவிகள், நரம்புக் கருவிகள், தோல் கருவிகள் போன்ற பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்பட்டன. மேலும் இவற்றுடன் 23 வகைப் பண்களும் பயன்படுத்தப்பட்டன. தமிழர் கோயில்கள் இசையின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. கோயில்களில் இசை வல்லுநர்கள் பரம்பரை பரம்பரையாகப் பணியில் அமர்த்தப்பட்டனர். அவர்கள் யாகங்கள் செய்யும். போதும், விழாக்களின் போதும் பல்வேறு இசைக் கருவிகளை இசைத்து விழாவினைச் சிறப்புறச் செய்தனர்.

---

★ **மனத்தில் மாக, மதவெறி, சாதி, சுயநலம், ஆணவம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போதுதான் நம்நாடு முன்னேறும்!**

**— அறிஞர் அண்ணா**

---

**கூத்து**

தமிழகத்தில் சங்க காலம் முதலாகவே - அதாவது தொன்று தொட்டே இக்கலை சிறந்து விளங்குகிறது. சிலப்பதிகாரம் 11 வகைக் கூத்துக்களைக் கூறுகிறது. சோழர்கள் காலத்தில் தேவரடியார் என்னும் சிறப்புமிக்க பெண்கள் இறைவனுக்குத் தொண்டு செய்ய அர்ப்பணிக்கப்பட்டனர். இவர்கள் ஆடல், பாடல் மற்றும் ஏனைய கலைகளில் சிறந்து விளங்கினர். இவர்கள் கோயில்களில் தங்கியிருந்து அவ்வப்போது ஆடல், பாடல் போன்ற கலைகளைச் செய்து காட்டினர். சோழ அரசர்கள், குறிப்பாக முதலாம் இராஜராஜ சோழன் அரியணை ஏறியபோது இக்கலைக்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டது. அவன் தனது போர் வெற்றியின் சிறப்பினைப் பாராட்டும் வண்ணம், தஞ்சையில் பிரகதீஸ்வரர் கோயில் கட்டி சுமார் 400 தேவரடியார்களைக் கொண்டு வந்து சேர்த்து, அக்கலைக்குப் பெரிதும் மெருகூட்டினான்.

இதேபோல் திருவாரூர் தியாகராசர் கோயில், திருவானைக்கா கோயில் போன்றவைகளில் தேவரடியார்கள் ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கி அக்கலையைச் சிறப்பித்தமையை அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. பரவை நாச்சியார், நங்கை பரவை போன்ற தலைசிறந்த கலைஞர்கள் இக்கலையில் சிறந்து விளங்கியதாகச் சோழர் காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர்கள் காலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்து, தரையைப் பெருக்கி, சாணியால் மெழுகி, பூக்களால் மாலை தொடுத்து, விளக்கேற்றி இறைவனை வணங்கினர். இக்கலை, சங்க காலத்தில் தமிழகத்தில் அறிமுகமாகி சோழர், பாண்டியர் காலத்தில் சிறப்புற்று, பின்னர் அண்டை நாடுகளிலும் பரவியது.

**ஒருமைப்பாட்டின் சின்னம்**

பழந்தமிழர்கள் கோயில்கள் நாட்டின் ஒருமைப்பாட்டின் சின்னமாய் விளங்கின. இக்கோயில்களில் அவ்வப்போது விழாக்களும், கூத்துகளும், ஆராதனைகளும் நடைபெறுவதாய் உள்ளது. இவைகளில் மக்கள் சாதி, மத, எல்லைகளைக் கடந்து பங்கேற்று இறைவனை வழிபடல் மட்டுமல்லாமல் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் கண்டு ரசித்தனர். மக்கள் தாங்கள் வேறுபாடுகளை மறந்து, ஒரே இடத்தில் அவ்வப்போது கூடி ஆண்டவனை வழிபட்டதாலும் கலை நிகழ்ச்சிகளை ரசித்ததாலும் ஒருவகை சகோதர மனப்பான்மை வளரக் கோயில்கள் பெரிதும் உதவின.

மேற்கூறிய கருத்துக்களை ஆராயும் போது கோயில்கள் பழந்தமிழ் மக்களின் வாழ்வில் பெரும்பங்கு பெற்றிருந்தமை தெரிகிறது. இவைகள் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டின் உறைவிடமாகவும் பலதரப்பட்ட மக்களை அணைக்கும் ஒருவகைப் பாலமாகவும் செயல்பட்டன என்பது உண்மை.

தற்போது இக்கோயில்கள் பல தன் பழைய செல்வாக்கினை இழந்து, கலையிழந்து, ஆதரிப்பாரின்றிப் பொலிவிழந்து காணப்படுகின்றன. தமிழகத்தின் பாரம்பரியத்தையும், அதன் புனிதப் பண்பாட்டையும் பேணிக்காக்க எண்ணும் ஒவ்வொருவரும் இச்செல்வங்களை அழியாது பேணிக்காப்பது தலையாய கடமையாகும்.



# தமிழகத்தில் மீனவர்

## நல்வாழ்வுத் திட்டங்கள்

**மீன்** துறையின் குறிக்கோள்களில் ஒன்று மீனவர் சமுதாயத்தின் சமூகப் பொருளாதார முன்னேற்றமாகும். இதற்காகக் கீழ்க்கண்ட திட்டங்கள் மீன் துறையின் மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

- இலவச வீடுகள்
- மீனவர் குழுக் காப்புறுதி
- சேமிப்பு மற்றும் நிவாரணம்
- மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலிவாக்குதல்
- சாலை வசதி
- சமூகக் கூடங்கள்
- புயல் பாதுகாப்பு இல்லங்கள்

இவை தவிர, மீனவர் மேம்பாட்டிற்காகவும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும், கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

- கட்டுமரம், வள்ளம், படகுகள் மற்றும் வலைகள் வாங்க மானியம் அளித்தல்
- வெளிப் பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரம் வாங்க மானியம் அளித்தல்.
- விசைப் படகுகளுக்கான டீசல் மீதான ஆயத் தீர்வையைக் குறைத்தல்.
- தேசிய நல்வாழ்வு நிதித் திட்டம்.
- ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம்
- மீனவர் பயிற்சி
- மீனவ மகளிர் முன்னேற்றத் திட்டம்.

### இலவச வீடுகள்

சென்ற 15 ஆண்டுகளாகத் தமிழக அரசு இலவசமாக மீனவர்களுக்குச் சுமார் 180 கடலோர மீனவ கிராமங்களில் சுமார் 13,000 கான்கிரீட் வீடுகள் கட்டி வழங்கியுள்ளது. இன்னும் சுமார் 5,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தற்போது தமிழக அரசு இத்திட்டத்தினை விரைவாக்கி அதிக வீடுகளைக் கட்டி பெரும்பாலான மீனவக் குடும்பங்கள் தங்களுக்குச் சொந்தமான வீடுகள் பெறுவதற்காக ஆண்டு ஒன்றுக்கு 3,000 வீடுகள் கட்ட ஒப்பளித்து வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் இலவச வீடு பெற விரும்பும் கடல் மீனவர்

- கூட்டுறவுச் சங்கங்கத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். தவிர,
- வீடு ஒன்றுக்கு சுமார் மூன்று சென்ட் பரப்பளவு மனையைத் துறையிடம் ஒப்படைக்கப் பட வேண்டும். இம்மனை கடற்கரையிலிருந்து 300/500 மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருக்க வேண்டும்.

### குழுக் காப்புறுதி

இத்திட்டத்தின் கீழ், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகவுள்ள சுமார் 1.67 இலட்சம் மீனவர்கள் இறப்பு மற்றும் விபத்துக்காகக் காப்பீடு செய்யப்படுகின்றனர். ஒவ்வொரு மீனவருக்கும் இதற்காக ஆண்டுத் தவணையாக ரூ.9 மத்திய, மாநில அரசுகளால் பகிர்ந்து செலுத்தப்படுகிறது. மீனவரிடமிருந்து எத்தொகையும் வசூலிக்கப்படுவதில்லை.

விபத்தினால் மீனவர் இறந்தால் அல்லது முழு ஊனமுற்றால் அவரது குடும்பத்திற்கு அல்லது

அவருக்கு ரூ.21,000 காப்புறுதித் தொகை வழங்கப்படுகிறது. விபத்தினால் பகுதி ஊனமுறும் மீனவருக்கு ரூ.10,500 நிவாரணமாக வழங்கப் படுகிறது.

இதுவரை 902 மீனவக் குடும்பங்கள் அல்லது மீனவர்களுக்கு ரூ.127 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

### காப்புறுதி பெற நிபந்தனைகள்

1. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கத்தில் உறுப்பின ராக இருக்க வேண்டும்.
2. வயது 18-லிருந்து 65 வரை இருக்க வேண்டும்.

### காப்புறுதி பெற அளிக்க வேண்டிய முக்கிய சான்றுகள்:

1. விபத்தில் இறந்த ஊனமுற்றவர் பெயர்.
2. கூட்டுறவுச் சங்கத்தினருக்கான சான்று.
3. வாரிசுதாரரின் பெயர் மற்றும் வாரிசுச் சான்று.
4. காவல்துறையின் முதல் தகவல் அறிக்கை.
5. பிரேதப் பரிசோதனைச் சான்று.

### சேமிப்பு மற்றும் நிவாரணம்

மீன் பிடிப்பு மந்தமாகவுள்ள காலங்களில் அல்லல்படும் கடல் மீனவர் துயர்துடைக்க அரசு மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தில் கூட்டுறவுச் சங்க உறுப்பினராகவுள்ள மீனவர் ஒவ்வொரு வரும் மாதம் ரூ.10 வீதம் ஒன்பது மாதங்கள் செலுத்தி, இத்தொகைக்கு ரூ.180-ஐ அம்மீனவர் மாதம் ரூ.60 வீதம் மூன்று மாதங்களுக்கு அரசிட மிருந்து பெறலாம். இத்திட்டத்தினால் ஆண் டொன்றுக்குச் சுமார் 58,000 மீனவர்கள் பயன டைந்து வருகின்றனர்.

1991-92-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தில் மாற்றம் செய்து மீனவரிடமிருந்து மாதம், ரூ.45 வீதம் எட்டு மாதங்கள் வசூலித்து இத்தொகை யுடன் மத்திய, மாநில அரசுகளால் ரூ.720 அளிக்கப்படுவதுடன் சேர்ந்து மொத்தத் தொகை யான ரூ.1,080 மாதம் ரூ.270 வீதம் மீன் பிடிப்புக் காலமல்லாத நான்கு மாதங்களில் மீன வருக்கு வழங்க உத்தேசித்துள்ளது.

### மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலிவாக்குதல்

தமிழ்நாட்டில் தற்போது 645 பதிவுபெற்ற மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 1,52,013 மீனவர்கள் உறுப்பினர்களாகவுள் ளனர். மீனவர்கள் தங்களின் மேம்பாட்டுக்கான வழிமுறைகளைக் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பெற நல்ல வாய்ப்புள்ளது.

உறுப்பினர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் விநியோகம் செய்யவும், நியாயவிலைக் கடைகள் மூலம் பொது விநியோகம் மேற்கொள்ளவும், நீர்நிலைகளில் மீன்பிடி உரிமம் பெறவும், நிதி நிலைப் பற்றாக்குறையால் இடைத் தரகர்களின் பிடியில் சிக்கும் நிலையைப் போக்கவும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள் மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து அதிக நிதியுதவி பெறும் வகையில் கடன் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக ஒரு வருடத்திற்கு ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கத்திடமிருந்து அதிக நிதியுதவி பெறும் வகையில் கடன் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக ஒரு வருடத்திற்கு ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கத்திற்கு ரூ.25,000 அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு சிறந்த 10 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஒரு இலட்சம் பங்கு மூலதன உதவி வழங்கப் படவுள்ளது.

### சாலை வசதி

கடலோரப் பகுதியிலுள்ள மீனவர் கிராமங் களிலிருந்து மீன்களைச் சந்தைக்கு எடுத்துச் செல் வதற்கு வசதியாக இணைப்புச் சாலைகள் தேவைப் படுகின்றன. சுமார் ரூ.300 இலட்சம் செலவில் 113 இணைப்புச் சாலைகளுக்கு நிதி ஒப்பளித்து வழங்கப்பட்டதில், இதுவரை 110 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### புயல் பாதுகாப்பு இல்லங்கள்

புயல் அபாயமுள்ள மாவட்டங்களில், மீன வர்கள் பாதுகாப்பிற்காகக் கடற்கரையோரப் பகுதியில் 108 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.



## அரசின் மானிய உதவிகள்

| இனம் | மீனவர் பங்கு விகிதம் | வங்கிக் கடன் விகிதம் | மான்ய விகிதம் | அதிக பட்ச மான்யம் (ரூபாய்) |
|---|---|---|---|---|
| கட்டுமரமும் வலையும் | 20% | 60% | 20% | 3,000 |
| வலை | 20% | 60% | 20% | 500 |
| விசைப்படகு | 20% | 60% | 20% | 1,00,000 |
| 18' பிளைவுட் படகு | 20% | 60% | 20% | 20,000 |
| வள்ளம் | 20% | 60% | 20% | 12,000 |
| வெளிப்பொருத்தும் இயந்திரம் | — | 50% | 50% | 7,500 |

### ஆயத்தீர்வையைக் குறைத்தல்

விசைப் படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் டீசல் எரி எண்ணெய் மீதான ஆயத் தீர்வைக் குறைத்திடும் திட்டத்தின்கீழ், செலவினத்தை 80:20 விகிதத்தில் மத்திய, மாநில அரசுகள் ஏற்றுள்ளன. 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான மீன்பிடி விசைப்படகுகளுக்கு வாங்கப்படும் டீசல் விசைப்படகுகளுக்கு லிட்டர் ஒன்றுக்கு 35 காசு வரிகுறைப்பு செய்யப்படுகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

### தேசிய நல்வாழ்வு நிதித் திட்டம்

மத்திய அரசிடமிருந்து 50 சதவிகித மானியம் பெற்று கடலோர மீனவக் கிராமங்களைத் தேர்ந் தெடுத்து, அங்குள்ள மீனவர்களுக்கு வீடுகள், சமுதாயக் கூடம், குடிநீர் வசதி, கூட்டுறவு வளர்ச் சிக்காக ஆதார நிதி (சீட்டு மணி) போன்றவற்றை வழங்கக் கூடிய திட்டம் தொடர்ந்து இவ்வாண் டிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தமிழகத்தில் கீழ்க்கண்ட 10 மீனவக் கிரா மங்கள் மாதிரிக் கிராமங்களாக உருவாக்கப் படுகின்றன.

| ஒப்பளிக்கப்பட்ட ஆண்டு | கிராமத்தின் பெயர் |
|---|---|
| 1987-88 | வள்ளவிளை |
| | இரட்சன்யபுரம் |
| | கீழ்த் தோட்டம் |
| | டி.வி.எஸ். பேட்டை |
| | நயினார் குப்பம் |
| 1989-90 | சாவடிக் குப்பம் |
| | கூனிமேடு |
| | கோபாலப்பட்டினம் |
| | காரங்காடு |
| | இரளிபுத்தன்துறை |
| 1990-91 | 10 கிராமங்கள் |

தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாதவையாகும். ஆனால், இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

—விவேகானந்தர்

# வாழ்க்கைத்தரம் உயர....

### ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம்

மீனவர் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களிடையே சிக்கனம், சேமிப்பு வழக்கத்தை ஏற்படுத்தவும், மீன் உற்பத்தி யைப் பெருக்கவும் விற்பனை முறையை ஒழுங்கு படுத்தி மீனவர்களின் பொருளாதார வசதிகளைப் பெருக்குவதற்கும் கடலோர மீனள ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மீன்பிடி சாதனங்கள் குளிர்ப்பதனப் பெட்டிகள், வெளிப்பொருத்தும் மற்றும் உள் பொருத்தும் இயந்திரங்கள், கண்ணாடி இழைப்படகுகள் ஆகியவை வழங்கப்படும். இத்திட்டம் ஆறு கடலோர மாவட்டங்களான செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., காயிதே மில்லத், தஞ்சை, இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 34 கிராமங்களிலுள்ள 27 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 4.6 இலட்சம் மீனவர் நலன் கருதி வரும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயலாக் கப்படும். இத்திட்ட மதிப்பீடு ரூ.10.72 கோடியாகும்.

### மீனவர் பயிற்சி

விசைப்படகினை இயக்குவதற்கும், இயந்திரங்களைப் பராமரிப்பதற்கும் மற்றும் நவீன மீன்பிடி கருவிகளை இயக்குவதற்கும் மீனவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காகத் தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இத்துடன் மூன்று மீனவர் பயிற்சி நிலையங்களில், சிறு தரக்கம்மியர் பயிற்சியும் அளிக்கப் படுகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் 50-60 மாணவர் களுக்கு 10 மாதக் காலத்திற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### மீனவ மகளிர் முன்னேற்றத் திட்டம்

தற்போது தமிழ்நாட்டில் 62 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இச்சங்கங்களின் மூலம் மீனவ மகளிருக்குக் கூடுதலான வருவாய் ஈட்டவும், கல்வி அறிவினை மேம்படுத்தவும் கீழ்க் கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- மீனவ மகளிர் மீன் விற்பனை செய்வதற்குக் கடனுதவி பெற ஏற்பாடு செய்தல்.
- கைவினைப் பொருட்கள் செய்வதற்குப் பயிற்சி அளித்தல், சுயவேலை வாய்ப்பு.
- மீனவ மகளிரே நியாயவிலைக் கடைகள் மூலம் தேவை யான பொருட்களை விற்பனை செய்தல்.
- மருத்துவ வசதி அளித்தல்.
- முதியோர் கல்வித் திட்டம்.
- குழந்தைகள் காப்பகம் பராமரித்தல்.
- மீனவ மகளிரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது.
- மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்க ஊக்கு வித்தல்.

## மாணவர் பக்கம்




## உலக அதிசயங்கள்:

### பிரமிட் கோபுரம்

பிரமிட் கோபுரம் பற்றி நீங்கள் பாடப் புத்தகங்களில் படித்திருப்பீர்கள்.

எகிப்து நாட்டில் இன்றும் காட்சி யளிக்கும் இந்தப் பிரமிட் உலக அதிசயங் களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இவை, அக்கால மன்னர் களின் உடல்களை அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகளாகும்.

பிரமிட் கோபுரத்தின் கீழ்த்தளம், சதுரமாக அல்லாமல், பலகோணங் களில் கட்டப்பட்டிருக்கும். மேல்பாகம், கோபுரம் போல் குறுகிக் காட்சியளிக்கும்.

இவற்றுள் கி.மு. 2700 ஆண்டு களுக்கு முன் கட்டப்பட்ட ஒரு பிரமிட், 481 அடி உயரம் கொண்டதாகும்.

## சரித்திரம் படைப்போம்

ஆன்றோர் வாக்கு அருள்வாக்கு;
அதன்படி நடந்தால் நலம்சேர்க்கும்!
சான்றோர் வகுத்த வழியினிலே
சரித்திரம் படைப்போம் உலகினிலே!

உண்மை அன்பு ஒழுக்கமென
உயரிய பண்புகள் அனைத்திலுமே
கண்ணாய் இருந்து காத்திடுவோம்;
கூாசினி போற்ற வாழ்ந்திடுவோம்!

பரிவு பாசம் பந்தமுடன்
பழக நாளும் பழகிடுவோம்;
விரிந்து பரந்த மனதுடனே
விருட்ச மாகத் திகழ்ந்திடுவோம்!

விலங்கும் நாமும் ஒன்றாமோ?
வேறு பாடு வேண்டாமோ?
நிலைத்து நிற்கும் வழியினிலே
நெஞ்சை நிமிர்த்தி நடை பயில்வோம்!

—கவிஞர் அ. சுப்பையன்



## விளையும் பயிர்:

சென்னை அண்ணாநகர் மேற்கு, எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி- இளநிலைக் கல்லூரியில், எல்.கே.ஜி. படிக்கும் மாணவன் ஏ. வினோத் கிஷோர்.

இம்மாணவன், நூற்றுப்பத்துத் திருக்குறளை எப்படிக் கேட்டாலும் சொல்கிறான். சின்னஞ்சிறு வய திலேயே ஆற்றல்மிக்க இந்த இளைஞ ருக்கு ஊக்கந் தந்தவர்கள் கல்லூரி முதல்வர் திரு. ஜே.டி. ஜான்சன், தமிழாசிரியர் திரு. சி. வெற்றி வேல், வகுப்பாசிரியை திருமதி ரோஸி கிரேசியஸ்.

# வளமான வாழ்வுக்கு

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

உரங்கள்






**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

VIJAY
MADRAS FERTILIZERS

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்

மணலி, சென்னை 600 068

தேசீய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343



# திரைப்பட மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

## சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் புகழாரம்!

இந்தியத் திரைப்பட மறுமலர்ச்சிக்கு வித்திட்டு தான் வாழும் காலத்திலேயே ஒரு சகாப்தத்தை உருவாக்கிய பெருமை திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர் திரு. சத்யஜித்ரே அவர்களையே சாரும். தன்னுடைய 40 ஆண்டுக் காலத் திரைப்பட அனுபவத்தின் மூலம் இந்தியத் திரைப்படச் சரித்திரத்தில் ஒரு இமாலயச் சாதனையைப் படைத்தவர் அவர்.

பழமையிலேயே ஊறிப்போயிருந்த இந்தியத் திரைப்படத் துறைக்குத் தனது புரட்சிகரமான திரைப்படங்களால் புத்துணர்வையும் புதிய எழுச்சியையும் கொடுத்து நம் நாட்டில் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்குப் புதிய பரிமாணங்களை வழங்கியவர். வாழ்க்கையில் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளைக் கூட, கலை நுட்பத்துடன் சித்திரித்துத் திரை உலகில் தனக்கென ஓர் உயர்ந்த இடத்தைப் பிடித்தவர். திரைத்துறையைச் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, வெற்றியின் எல்லைகளைத் தொட்டு அவர் நிகழ்த்திய சாதனைகள் திரைப்பட உலகினர் என்றென்றும் கற்று உணர வேண்டிய கலைக் களஞ்சியம் ஆகும்.

தன்னுடைய முதல் படமான 'பதர் பாஞ்சாலி' (Pather Panchali) முதல், விரைவில் வெளியிடப்பட உள்ள 'அகன்டுக்' (Agantuk) படம் வரை பல்வேறு திரைக்காவியங்களை உருவாக்கி, தனது தனித்தன்மையை அனைத்திலும் பதித்துத் திரைத் துறைத் திறனாய்வாளர்களின் கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு வெற்றிவாகைகளைச் சூடிய விற்பன்னர் அவர். திரைப்படத் துறையில் அவர் புரிந்துள்ள மகத்தான சாதனைகளால் இன்று திரைப்படத் துறையின் வளர்ச்சியைத் திறனாய்வு செய்பவர்கள் 'சத்யஜித்ரேவிற்கு முன் - சத்யஜித்ரேவிற்குப் பின்' என்று இரு கால கட்டங்களாகப் பிரித்து ஆய்வு செய்யுமளவிற்கு அவர் உயர்ந்து விளங்குகிறார்.

திரையுலகில் நம்பிக்கையோடு நுழையும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இவரது அனுபவம் ஓர் அகராதி. இந்திய நாட்டின் கலையுலகப் பெருமைகளை முதன் முதலாக உலக அளவில் அறிமுகப்படுத்திய பெருமையும், சிறப்பும் திரு. சத்யஜித்ரே அவர்களையே சாரும். தனது திரையுலக அனுபவத்தால் விரிந்து பரந்து ஆல மரமாய் வியாபித்துள்ள இவர் புதியவர்களுக்குப் புகலிடம் கொடுக்கும் நிழலாகவும், திரை உலகில் ஏற்கெனவே தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்து வருகிறார்.

திரு. சத்யஜித்ரே அவர்கள் திரைப்படத் துறைக்கு மட்டுமே சொந்தமானவர் அல்லர். தான் ஈடுபட்ட துறைகளில் எல்லாம் தலைசிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாமல், தனக்கே உரித்தான முத்திரையையும் அவற்றில் அவர் பதித்தார். அவர் குழந்தைகளுக்காக எழுதிய வங்க மொழி நூல்கள், மேற்கு வங்கத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவை. அவர் ஓவியத்திலும், இசையிலும், சிற்பக் கலையிலும் தனது புகழ் முத்திரையைப் பதித்தவர்.

இவ்வாறு பல்வேறு சிறப்புகளைப் பெற்று பல்துறை விற்பன்னராகத் திகழும் திரு. சத்யஜித்ரே அவர்களுக்கு அண்மையில் இந்திய அரசு நமது நாட்டின் மிகப்பெரிய விருதான 'பாரத ரத்னா' விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது. தற்போது American Academy of Motion Pictures, Arts and Sciences என்ற அமைப்பு, திரை உலகின் மிக உயர்ந்த அரிய விருதான OSCAR AWARD- ஐ திரைப்படத் துறையில் அவர் வாழ்நாள் முழுவதும் புரிந்த சாதனைகளுக்காக திரு. சத்யஜித்ரே அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்த விருதினைப் பெறும் முதல் இந்தியரும் இவரே. இந்த விருது தொடங்கப்பட்ட நாள் முதல் கடந்த 80 ஆண்டுகால வரலாற்றில் உலகிலேயே இவரையும் சேர்த்து 6 சான்றோர்களுக்குத்தான் இந்த உயர்ந்த விருதினைப் பெறுகின்ற பெருமை கிடைத்துள்ளது. அந்த வரிசையில் திரு. சத்யஜித்ரே அவர்கள் இடம் பெற்று நமது நாட்டின் பெயரையும் புகழையும் உலகளவில் உயர்த்தியுள்ளார். இந்த விருதினைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி, பெருமை அடைவது ஒவ்வொரு இந்தியரின் கடமை ஆகும்.

திரு. சத்யஜித்ரே அவர்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய பெருமையினைப் பாராட்ட நமது மாமன்றமும் மகிழ்ச்சியோடு முன் வந்துள்ளது. அந்த வகையில் இம்மாமன்றத்தின் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் திரு. சத்யஜித்ரே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், தற்போது உடல் நலம் குன்றி இருக்கும் அவர் விரைவில் பூரண குணமடைந்து - இன்னும் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து மென்மேலும் பல பெருமைகள் பெற்று இந்தியத் திரை உலகிற்கும், இந்தியத் திருநாட்டிற்கும் பல சிறப்புகளைச் சேர்க்க வேண்டுமென்று உளமார வாழ்த்துகிறது என்ற செய்தியினைப் பேரவையின் சார்பாக திரு. சத்யஜித்ரே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

# மதுவை மறப்பீர்!





மதுவினை அணைத்துக் கொண்டால்
மனைவியே விலகிப் போவாள்!
மதுமொழி மழலைச் செல்வம்
மறந்துமை விட்டுச் செல்லும்!
நதிவரும் நீராய் வந்த
நன்மைகள் வறண்டு போகும்!
சதிவலை உயிர்க்கும் பின்னும்
சிதைத்திடும் வாழ்வுச் சோலை!

முதலிலே அதைக்கு டிப்பீர்
முடிவிலே அதுகு டிக்கும்!
கதவிலே மறைவீர் முன்பு
கிடப்பீர்நீர் தெருவில் பின்பு!
இதமுடன் இருக்கும்! ஆனால்
ஈரலைத் தின்னும் நஞ்சு!
மதுவது மரணத் தொட்டில்
மறந்தாலோ மகிழ்ச்சிக் கட்டில்!

மக்களை மனைவி தம்மை
மாண்புடன் காப்ப தற்கும்
தக்கநல் இனிய வாழ்வைத்
தரணியிற் பெறுவ தற்கும்
கொக்குபோல் உயிர்ப்பி டிக்கக்
கருதிடும் மதுவை விட்டுப்
பக்குவ மடைவீர்; நல்ல
பண்புடன் நிமிர்ந்து வாழ்வீர்!

புலவர் வெற்றியழகன்



# வளரும் வேளாண்மை

**டாக்டர் சோலையப்பன் ஜெயராஜ்**
**துணைவேந்தர்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோயம்புத்தூர்**

நமது நாட்டில் பெரும்பாலான கிராம மக்கள் உழவுத் தொழிலை நம்பியே இருக்கின்றார்கள். வருகின்ற ஆண்டுகளிலும் இந்நிலையே நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

அறிவியல் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட, இலாபகரமான வணிக ரீதியிலான வேளாண்மையை நனவாக்கித் தந்த வேளாண்மை அறிவியலார்க்கும், விரிவாக்கப் பணியாளர்களுக்கும், தொழில் முனைவதில் பேரார்வம் கொண்ட உழவர் பெருமக்களுக்கும் நாம் நன்றிக் கடன்பட்டிருக்கின்றோம்.

உழவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், பண்ணை வருமானம் பெருகவும், நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிகளைச் செவ்வனே செய்து, பயனுள்ள தொழில்நுட்பங்களை முனைப்புடன் வழங்கி வருகின்றது.

அண்மைக் காலத்தில், வணிக ரீதியில் வேளாண்மைச் சார்புத் தொழில்களை இலாபகரமாகவும், எளிதாகவும் நடத்துவதற்குப் பல்வேறு தொழில்நுட்பங்களை நமது பல்கலைக்கழகம் கண்டுபிடித்து, கிராம மக்களை - குறிப்பாக கிராம இளைஞர்களை ஊக்குவித்து வருகின்றது. இதன் மூலமாக, வேளாண்மைக்குத் தேவையான அனைத்து இடுபொருள்களையும், தேவையான அளவு, கிராமங்களிலேயே உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இவ்வணிக ரீதியிலான முன்னோடி வேளாண்மையே நாளைய வேளாண்மை வளர்ச்சிக்கு வித்திட்டு, கிராமங்களின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**விதை உற்பத்தி**

நல்விதையே விளைச்சலின் மூல காரணி. உயர் விளைச்சல் பயிர் இரகங்களைப் பற்றி அறிந்தவுடன், உழவர்கள் தேடும் முதல் இடுபொருள் 'விதை'. விதை உற்பத்தி செய்வது, விதைகளை அறிவியல் முறைகளினால் நன்கு பக்குவப்படுத்துவது, விதை நேர்த்தி செய்வது - போன்றவை இலாபகரமான வேளாண் சார்புத் தொழில்களாகும். தரமான விதை உற்பத்தி செய்வது இலாபகரமான தொழில் மட்டுமல்ல - உழவர் பெருமக்களுக்கு நாம் ஆற்றுகின்ற மிகச் சிறந்த பணியுமாகும்.

விதைகளைப் பக்குவப்படுத்தத் தேவையான விதை தரம் பிரிக்கும் கருவி, விதை உலர்த்தி, விதை நேர்த்திக் கருவி, கடலை உடைக்கும் மற்றும் விதை தரம் பிரிக்கும் கருவி போன்றவைகளை, கிராமங்களில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகள் வாங்கி, பயிற்சிபெற்று, சுயவேலை வாய்ப்புகளைப் பெருக்கலாம். மேலும், விதை உற்பத்தியின் போது கிடைக்கும் உபபொருள்கள் குறிப்பாக, தக்காளி விதை எடுக்கும்போது கிடைக்கும் சாற்றினைக் கொண்டு, ஜாம், பழச்சாறு, போன்ற உணவுப் பொருள்கள் தயாரித்து, நல்ல இலாபமடையலாம்.

**செடிகள் உற்பத்தி**

பழச்செடிகள், காய்கறிச் செடிகள், மற்றும் நகர்ப்புறங்களில் வீடுகளில் அழகுக்காக வைக்கப்படும் பூச்செடிகள் முதலிய வற்றை, ஒட்டுக்கட்டுதல் மூலம் குறுகிய காலத்தில் அதிகமான மாஞ்செடிகளை உற்பத்தி செய்து, உயர்ந்த தரமான ஒட்டுமாங்கன்றுகளை உழவர்களுக்களித்துப் பயன்பெறலாம். திசு வளர்ச்சி முறை மூலம், வாழையில் ஒரு இளம் தண்டிலிருந்து இருபதுக்கும் மேற்பட்ட புதிய தரமான வாழைக்கன்றுகளை உற்பத்தி செய்யலாம். ஏலக்காய்ச் செடிகளையும் இம்முறையில் தயாரிக்கலாம்.

திசு வளர்ச்சி முறை மூலம் ஆர்க்கிட் எனப்படும் மிக அழகிய பூச்செடிகளை, இலைநுனி, வேர்நுனிகளிலிருந்து, குறைந்த காலத்தில் அதிக அளவில் வளர்க்க இயலும். இம்மாதிரியான பூச்செடி நாற்றுக்களை, கிராமங்களில் உற்பத்தி செய்து, நகரங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பி, அதிக இலாபமடையலாம்.

**பப்பெயின் தயாரித்தல்**

பப்பாளி, பொதுவாக பழமாகவே விற்கப்படுகின்றது. நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள கோ.2 மற்றும் கோ.5 ரகங்கள் அதிகப் பப்பெயின் கொடுக்கக் கூடியவை. கோ.5 பப்பாளி ஒரு எக்டேருக்கு 1,500 கிலோ பப்பெயின் தரவல்லது. ஒரு கிலோ பப்பெயின் சுமார் நூறு ரூபாய்க்கு விற்கலாம். இதனால், ஒரு எக்டருக்கு, மூன்று ஆண்டுகளில் 1.50 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும் வழி உள்ளது.

**நுண்ணுயிர் உர உற்பத்தி**

பயிர் வளர்ச்சிக்கு, முக்கியமாகத் தேவைப்படும் தழைச்சத்து , மணிச்சத்து போன்றவற்றை நாம் இரசாயன உரங்களாகவே இட்டு வருகின்றோம். இதனால் ஏற்படும் பணச் செலவைக் குறைக்கவும், மண்ணின் தரத்தைப் பாதுகாக்கவும் பல இயற்கை உரங்களை நமது வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து உள்ளது. இவற்றுள் அசோலா எனப்படும் ஒரு நீர்த்தாவரம், தண்ணீரிலேயே வளர்ந்து, தழைச்சத்து சேகரித்து, நெற்பயிருக்கு அளிக்கின்றது. நன்கு வளர்ந்த அசோலா 30 முதல் 40 கிலோ வரை தழைச்சத்தினைச் சேகரித்து அளிக்கும் திறனுடையது. இதுபோலவே, அசோஸ்பைரில்லம் மற்றும் ரைசோபியம் எனப்படும் நுண்ணுயிர்களும் காற்றிலுள்ள தழைச்சத்தினைச் சேகரித்து, பலவிதமான பயிர்களுக்குக் கொடுக்கும் திறன் பெற்றவை. இந்த இயற்கை உரங்களையும் தயாரித்து, வினியோகித்துப் பயன்பெறலாம்.

**உணவுக் காளான் உற்பத்தி**

நகரங்களில், காளான் ஒரு சிறந்த புரதச்சத்துள்ள உணவுப் பொருளாக இப்போது விற்கப்படுகின்றது. காளான் உற்பத்தி செய்தல் மற்றும் காளான் விதை உற்பத்தி செய்தல் மிகவும் எளியது. இதனைத் தயாரிக்க, வேளாண் கழிவுப் பொருள்களான வைக்கோல், கழிவுப் பஞ்சு, மக்காச்சோளக் கதிர், சக்கைத்தூள்

## சட்டமன்றத்தில்...

உள்ளாட்சி அமைப்புகளில் சிறப்பாகப் பணி யாற்றுபவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றும் பணிகளை அதன் பொறுப்பிலே உள்ள வர்கள் ஆர்வத்தோடும், சிறப்பாகவும் செய்தல், மக்களிடையே ஏற்படும் இன வேறுபாடுகளைக் களைவது, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேவை யான நிலம், கட்டடங்கள் ஆகியவற்றை நன் கொடையாகப் பெறுவது போன்றவற்றில் ஆர்வம் காட்டுதல் ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்படும் அலுவலர்கள், ஊழியர்கள் ஒவ்வொரு மட்டத் திலும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

போன்றவையே போதுமானது. காளான் வளர்க்க அதிக இடவசதியும் தேவை யில்லை. காளான் வளர்த்தல், காளான் விதை தயாரிக்கும் முறை பற்றியும், நமது வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், ஒவ்வொரு மாதமும் 5-ஆம் தேதி பயிற்சி அளித்து வருகின்றோம். இப்பயிற்சிக்குக் கட்டணம் ஏதுமில்லை.

**கம்போஸ்ட் உரம் தயாரித்தல்**

தென்னை மரங்கள் அதிகமாக உள்ள கோவை, தஞ்சை, மதுரை போன்ற மாவட்டங்களில் தென்னை நார்த் தொழிற் சாலைகள் அதிகமாக உள்ளன. இவற்றில் இருந்து கழிவுப் பொருளாக வெளிவரும் தென்னை நார் மஞ்சு எளிதில் மக்கு வதில்லை. இதனை நாம் இத்தொழிற் சாலைக்கு அருகில் சாலை ஓரங்களில் மலைபோல் குவித்து வைத்திருப்பதைப் பார்க்கலாம்.

இந்தத் தென்னை நார் மஞ்சினை மக்க வைத்து உரமாக நெல், கடலை, போன்ற பயிர்களுக்கு இடும் முறை ஒன்றினை, நமது வேளாண்மைப் பல் கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது. இதனை, தொழில் அளவில் பெருக்கி, உரமாக உழவர்களுக்கு அளித்துப் பயன் பெறலாம். இதனைத் தயாரிக்க, ஒரு டன் நார்க்கழிவிற்கு 5 கிலோ யூரியாவும், 5 புட்டிகள் புளுரோட்டஸ் உணவுக் காளான் வித்து மட்டுமே தேவை. இதனை இடுவதால் களர் நிலங்களைச் சீர்திருத்த முடியும். இதேபோல, கரும்புச் சோகைகளையும் கம்போஸ்ட் செய்ய முடியும்.

**காய்கறி, பழங்களைப் பதனப்படுத்துதல்**

வேளாண் விளைபொருள்கள் ஒரே சமயத்தில் அதிக அளவில் கிடைப்பதால் சரியான விலை கிடைப்பதில்லை. இதனைத் தவிர்க்க, எளிதில் அழுகிக் கெடக்கூடிய பொருட்களான பழங்கள், காய்கறி களைப் பக்குவப்படுத்தி, நீண்ட நாட்கள் கெடாமல் வைத்திருந்து, நல்ல விலைக்கு விற்று இலாபமடையலாம். பல்கலைக் கழக உணவு மற்றும் சத்துத்துறையில், மகளிருக்கென்றே பழச்சாறு தயாரித்தல், உலர்ந்த பழங்கள் தயாரித்தல், ஊறுகாய், கெச்செப், ஜாம், ஜெல்லி போன்ற வற்றைத் தயாரிப்பதில் பயிற்சிகள் அளித்து வருகின்றோம். இவைகளைத் தயாரிக்க அதிக விலையுள்ள கருவிகள் தேவை இல்லை. இது ஒன்றுக்கு மூன்று மடங்கு அதிக இலாபம் தரக்கூடிய சிறந்த வேளாண் சார்ந்த தொழிலாகும். வீட்டிலிருந்த படியே தயாரித்து, விற்று, இலாபம் அடையலாம்.

பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதனப்படுத்துவதற்கென்றே பல்கலைக் கழகத்தில் பல கருவிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. காய்கறி உலர்த்தி, விதையைப் பிரிக்கும் கருவி, பழங்களுக்கு மெழுகு தடவும் கருவி, பாட்டில்கள் அடைக்கும் கருவி போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்யலாம்.

**வாசனைத் திரவியங்கள் தயாரிப்பது**

தமிழ்நாடு பல வாசனைத் திரவியங்கள் உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயற்கைச் செடிகள் மற்றும் பூக்கள் உற்பத்தியில் சிறந்த இடம் வகிக்கின்றது. இதனால் நமது நாட்டிற்கு அதிக அந்நியச் செலாவணியும் கிடைக்கும். மல்லிகை மற்றும் முல்லைப் பூவிலிருந்து வாசனைச் சாந்து தயாரிக்கும் கருவி ஒன்று பல் கலைக்கழகத்தில் தயாரித்து வினியோகித் துள்ளோம். இக்கருவியினை, பூக்கள் அதிகமாக உற்பத்தியாகும் இடங்களில் நிறுவி, வாசனைச்சாந்து தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி அதிக இலாபமடையலாம்.

**பண்ணை இயந்திரங்கள் உற்பத்தி**

பல புதிய வேளாண் கருவிகள், குறிப்பாக உழவுக் கருவிகள், விதைக்கும் கருவிகள், அறுவடை இயந்திரம், மானா வாரியில் களை எடுக்கும் கருவி, கதிரடிக் கும் கருவிகள், உலர்த்திகள், பூச்சி மருந்து தெளிப்பான்கள் போன்றவை கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும், தகுந்த பணி மனைகள் இல்லாமையும், அதிக அளவில் இவை உற்பத்தி செய்யாததாலும், இவை அதிகமாக உழவர்களிடையே பரவ வில்லை. உழவர்களுக்கு இக்கருவிகளின் பயன்களை எடுத்துக்காட்டி, உற்பத்தி செய்து, வினியோகிப்பதன் மூலமும் அதிக வேலைவாய்ப்புள்ளது.

**பட்டுப்புழு வளர்ப்பு**

பட்டு உற்பத்திக்கு இவ்வாண்டு நமது அரசு அதிக முக்கியத்துவம் அளித்து உள்ளது. பட்டு உற்பத்தி செய்யும் முறைகள், முசுக்கொட்டைச் செடி பயிர் செய்யும் முறைகளில் பல்கலைக்கழகத் தின் தொடர்ச்சியாகப் பல பயிற்சிகள் இளைஞர்களுக்கு அளித்து வருகின் றோம். மிகவும் குறைந்த நிலமும், குறைந்த தண்ணீர் வசதியும் உள்ள உழவர்களுக் குப் பட்டுப்புழு வளர்த்தல், மிகவும் சிறந்த, தொடர்ந்து வருமானம் தரக்கூடிய தொழிலாகும்.

**தேனி வளர்ப்பு**

கிராம மகளிர்களுக்கு வீட்டுத் தோட்டங் களில், எளிதில் பராமரித்து குடும்பத் திற்கு வருமானம் கொடுக்கக்கூடிய ஒரு உபதொழில் தேனீ வளர்ப்பாகும். தேன் கூடு தயாரித்தல், வளர்த்தல், தேன் சேகரித்தல், தேனீயைத் தாக்கும் பூச்சி களிலிருந்து பாதுகாத்தல் போன்றவற்றில் பல பயிற்சிகள் அளித்து வருகின்றோம். இப்பயிற்சியில் கிராம இளைஞர்களும் பங்கு பெற்றுப் பயன்பெறலாம்.

**தாவரமுறையில் பயிர்ப் பாதுகாப்பு**

நாம் சாகுபடி செய்யும் பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த, பூச்சி மற்றும் நோய்க் கொல்லி மருந்துகளையே இதுநாள்வரை உபயோகித்து வந்தோம். இப்பொழுது, தாவரப் பொருட்களைக் கொண்டே இவற்றினைக் கட்டுப்படுத்தும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வேப்பெண்ணை

# சட்ட மன்றத்தில்...

## அழகு சென்னை - ரூ. 1,250 கோடித் திட்டம்

சென்னை மாநகரை அழகுபடுத்துவதற்காக ரூ.1,250 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். அதன் முதல் கட்டமாக, சாலைகள், பாலங்கள், அடுக்கு மாடி வாகனம் நிறுத்தும் இடம், போக்குவரத்து மேம்பாடு, மழைநீர் வடிகால்கள், தெரு விளக்குகள், கால்நடைகளை அகற்றுதல் போன்ற பணிகள் இந்த ஆண்டில் தொடங்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

சென்னை மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் 24 மணி நேரத்துக்குள் குப்பைகளை அகற்றும் ஏற்பாடு நடப்பு ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும். இதற்காகக் கூடுதல் ஊர்திகள் வாங்க நடப்பு ஆண்டில் தமிழ்நாடுநகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நிதிஉதவி பெற்று ரூ.8 கோடி செலவிடப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

## தமிழ்நாட்டில் 'பாசுமதி' நெல்

பஞ்சாபில் உற்பத்தியாகும் பாசுமதி நெல் போன்ற வாசனை நெல் தமிழ்நாட்டிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது தஞ்சை மாவட்டம் ஆடுதுறையிலுள்ள அரிசி ஆராய்ச்சி நிறுவனம் புதிதாகக் கண்டுபிடித்துள்ள இந்த வாசனை ரக நெல்லுக்கு மாண்புமிகு முதல்வரின் அனுமதியைப் பெற்று 'ஜெ.ஜெ' எனப் பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

## கைத்தறிக் கிராமம்

நெசவாளர்கள் அதிகம் வசிக்கும் கிராமங்களை அரசு தத்தெடுத்து, மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் வளாகம் என்ற கிராமம் கைத்தறிக் கிராமமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு ரூ.25 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

## கைத்தறி நெசவாளர்களுக்கு வங்கி

கைத்தறி நெசவாளர்கள் நலனுக்காக தனியே கூட்டுறவு வங்கி ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. கூட்டுறவு அமைப்புகளிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நிதி வசதிகள் உடனுக்குடன் கிடைத்திட தனியாக மாநில மற்றும் வட்டார வங்கிகளை அமைக்க முடிவு செய்து, இதற்கான அனுமதியைப் பெற ரிசர்வ் வங்கிக்கு, கைத்தறித் துறையின் சார்பில் கடிதம் எழுதும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார் என மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

---

மற்றும் வேப்பங்கொட்டையில் பூச்சி எதிர்க்கும் திறன், பூச்சி உண்ணுவதைத் தவிர்க்கும் திறன், பூச்சி வளர்வதைக் கட்டுப்படுத்தும் திறன், முட்டையிடும் திறன் குறைத்தல் போன்ற பல சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன. எனவே, வேப்ப மரத்தின் இலைத்தூள், எண்ணெய், பருப்புத்தூள் போன்றவை பூச்சி மற்றும் நோய்க்கட்டுப்பாட்டில் சிறப்பிடம் வகிக்கின்றன. எனவே, வேம்பிலிருந்து புதிய மருந்துகளை வேப்ப விதைச்சாறு, வேப்பெண்ணைய் எமலிசல் போன்றவற்றை வணிக ரீதியில் தயாரித்து, புதிய தொழில்களைத் தொடங்கப் பல வழிமுறைகள் உள்ளன.

### உயிரியல் முறைப் பயிர்ப் பாதுகாப்பு

பயிர்ப் பாதுகாப்பு பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகிப்பதால், பூச்சிகளில் இம்மருந்திற்கு எதிர்ப்புத்திறன் உண்டாவதுடன், சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கப்படுகின்றது. இதனைத் தவிர்க்க, எளியமுறையில் புரடீனியா வெட்டுப்புழு மற்றும் ஹீலியோதிஸ் பச்சைப் புழுவினைக் கட்டுப்படுத்த நமது பல்கலைக் கழகம் புதிய வழிமுறையினைக் கண்டுபிடித்துள்ளது. இம்முறை மூலம் வைரஸ் நச்சுயிரிகளைத் தயாரித்து, இப்புழுக்களை அழிக்கலாம். இந்நச்சுயிரிகளை வணிக அளவில் தயாரித்து விற்பனை செய்ய நல்ல வாய்ப்புகள் உள்ளன. கரும்புத் தண்டுப் புழுக்கள், பருத்திக் காய்ப் புழுக்கள், தென்னைக் கருத்தலைப் புழுக்கள் போன்றவற்றை அழிக்க ஒட்டுண்ணிகளையும், வெள்ளை ஈ, அசுவினி மற்றும் அந்துப் பூச்சிகளின் முட்டைகளை அழிக்க பொறிவண்டு ஊன் உண்ணிகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம். அதேபோல, பல பயிர்களைத் தாக்கும் வேர் அழுகல் நோயைத் தடுக்கும் நன்மை செய்யும் பூசணத்தை உற்பத்தி செய்து விதை நேர்த்தி செய்யப் பயன்படுத்தலாம்.

### வேளாண்மைக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தும் தொழில்கள்

வேளாண்மையில் நமக்குக் கிடைக்கும் கழிவுப் பொருள்களான வாழை மட்டை, பருத்திமார், கரும்புச்சக்கை, பப்பாளித் தண்டு போன்றவற்றை உபயோகித்து காகித அட்டைகள் எழுதும் பலகைகள், அலுவலக ஏடுகள், அஞ்சல் உறைகள் போன்றவற்றைத் தயாரிக்கலாம். இது போன்ற வேளாண் கழிவுப் பொருள்களிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ளது. இத்தொழிற்கூடத்தில், மாணவ மாணவியர்களுக்கு காகித அட்டைகள் தயாரிக்கும் முறைகள் பற்றிய பயிற்சியளித்துத் தாங்களாகத் தொழில் துவங்கத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கி வருகின்றோம்.

இவை போன்றே, நெல் உமியிலிருந்து சிமெண்ட் செய்யும் தொழில்நுட்பமும், தேங்காய் ஓடுகளிலிருந்து ஊட்டமேற்றிய கரி, நெல் வைக்கோலை உபயோகித்து சிமெண்ட் கூரைகள் தயாரிக்கும் முறைகளையும் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து உள்ளது.

இவைபோன்ற வேளாண்மை சார்பு உடைய தொழில் முறைகளைக் கிராமங்களிலேயே நடத்தலாம். பண்ணை வருமானத்தைப் பெருக்கலாம். வீட்டிலுள்ள அனைவருக்கும் வேலைவாய்ப்பளிக்கலாம். இம்முறையில் அமையப் பெற்ற வணிக வேளாண்மையே வருங்கால வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. ●

# 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும்

# தொழில் பொருட்காட்சி நிறைவு விழா



**18-**வது அகில இந்தியச் சுற்றுலாத் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா, சென்னைத் தீவுத் திடலில் 9.4.1992 அன்று நடைபெற்றது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில், மேதகு ஆளுநர், திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றிப் பரிசுகள் வழங்கினார்.

செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திப் பேசுகையில், இவ்வாண்டு இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சிக்குச் சுமார் 15 இலட்சம் மக்கள் வருகை புரிந்திருப்பதாகவும், இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 4 இலட்சம் கூடுதலாகும் என்றும் குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசுகையில், 'இவ்வாண்டு ஜனவரி மாதம் 6-ஆம் நாள், மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்தப் பொருட்காட்சி மூலம் ரூபாய் ஒரு கோடி வருமானம் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டு வருமானத்தை விட ரூ.10 இலட்சம் கூடுதலாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கியது எல்லாமே சிறப்படையும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். 1988 ஒரு ஆண்டைத் தவிர, 1974 முதல் தொடர்ந்து இந்தப் பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. (வறட்சியின் காரணமாக 1988-இல் பொருட்காட்சி நடத்தப்படவில்லை) இந்தப் பொருட்காட்சியில் பங்கு கொண்ட அனைத்துத் துறைகளும் தங்கள் முத்திரைகளைப் பதித்திருக்கின்றன' என்று கூறினார்.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் நிறைவு விழாப் பேருரையாற்றுகையில், 'இந்த 18-வது அகில இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி தமிழகத்தின் தொன்மையையும், பண்பாட்டையும், பொருளாதார வளர்ச்சியையும் விளக்கும் வகையில் அமைக்கப்பட்டு இருந்தது.

இங்கு அமைக்கப்பட்ட பொருட்காட்சி தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் வகையில் கேரளா, பாண்டிச்சேரி, மத்தியப் பிரதேசம், குஜராத், பீகார், இமாசலப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர் மாநிலங்கள் உட்பட 35 மாநில அரசுத்துறை நிறுவனங்களும், 16 பிற மாநிலச் சுற்றுலாத் துறைகளும், மத்திய அரசுத் துறைகளும் பங்கேற்றுள்ளன.

'விசிட் இந்தியா' ஆண்டான 1991-இல் சென்னைக்கு வருகை புரிந்த அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1990-ஆம் ஆண்டைக் காட்டிலும் 13.19 சதவிகிதம் கூடுதல். இதைப்போல 1990-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1991-இல் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்த உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 15.05 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. அகில இந்திய அளவில் 1991-இல் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், தமிழ்நாட்டில் உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது' என்று கூறினார்.

பின்னர், இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியில் கலந்து கொண்ட சிறந்த அரங்குகளுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் பரிசுகள் வழங்கினார். சிறந்த மாநில அரசுத் துறைகளுக்கான முதல் பரிசு குடும்ப நல்வாழ்வுத் துறைக்கும், இரண்டாம் பரிசு கதர் வாரியத்துக்கும், மூன்றாம் பரிசு தொழில் துறைக்கும் வழங்கப்பட்டது. சிறந்த அரசுத் துறை நிறுவனங்களுக்கான முதல் பரிசு போக்குவரத்து நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசு சென்னை பெருநகர் வளர்ச்சிக் கழகத்திற்கும், மூன்றாம் பரிசு சென்னை மாநகராட்சிக்கும் வழங்கப்பட்டது.

முன்னதாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ப.சிவகாமி, இ.ஆ.ப. அவர்கள் அறிக்கை வாசித்தார். விழா முடிவில் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு.எஸ்.மச்சேந்திரநாதன், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு: ஜே. சந்திரன்.**



# கண் பாதுகாப்புக்குச் சில யோசனைகள்

கண்களில் ஏற்படும் காயம் பார்வையை மிகவும் பாதித்துவிடும். ஒரு சாதாரணமான காயம் கூட சரியாகக் கவனிக்கப்படாவிட்டால் அது கண்களைப் பாதித்து பார்வையை இழக்கச் செய்யும்.

உடம்பில் காயம் ஏற்பட்டால் அது அந்தப் பாகத்தை மட்டும்தான் பாதிக்கும். மற்ற பகுதிகளைப் பாதிக்காது. ஆனால், கண்ணில் கருவிழியிலோ, உட்பகுதியிலோ ஏற்படும் தழும்பு, பார்வையை வெகுவாகப் பாதிக்கும். இந்தக் காயங்களை முழுமையாகக் குணப்படுத்த முடியாவிட்டாலும் இவை வெகுவாகத் தவிர்க்கக் கூடியவையே.

**காரணங்கள்:**

கண் பார்வையின்மை வெவ்வேறு காரணங்களினால் ஏற்படுகிறது. இதில் 5 முதல் 10 சதம் காயத்தால் வருகிறது. இது பெரும்பாலும் 10 வயதுக்கு உட்பட்டவர்களைத்தான் தாக்குகிறது. மருத்துவத் துறையின் வளர்ச்சியினால் இன்று குழந்தை பிறப்பின்போது வெவ்வேறு காரணங்களினால் ஏற்படும் கண் பார்வையின்மையை வெகுவாகத் தடுத்துவிடலாம். மிகவும் சாதாரணமாக ஏற்படும் காயங்களை இயற்கையே குணப்படுத்தி விடுகிறது. மிகவும் கூர்மையான பொருள்கள் காயங்களை ஏற்படுத்தி பார்வையைப் பாதிக்கின்றன.

இராமாயண, மகாபாரதத் தொலைக்காட்சித் தொடர்கள் பிரபலமானதால் குழந்தைகள் வில், அம்பு போன்ற பொருள்களால் விளையாடிக் கண் காயம் அடைவது அதிகரித்தது. அசுத்தமான துடைப்பத்தின் நுனியைக் கூராக்கி அம்பாக உபயோகிக்கிறவர்களைவிட அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள்தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்தப் பொருட்கள் மிகவும் நுண்ணிய கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை எடுத்துச் சென்று கண்ணில் சீழ் உண்டாக்குகின்றன. இதிலிருந்து மீள்வது கடினம்.

கூர்மையான பென்சில் நுனி (Graphite) கண்ணுக்குள் புகுந்தால் அது அங்கிருக்கும் திசுக்களைக் கொல்கிறது. சில சமயம் இது கருவிழிக்குள் ஊடுருவி லென்சைப் பாதித்து கண் புரை (Cataract) நோய்க்கு ஆளாக்குகிறது.

**பட்டாசு எப்படி பாதிக்கும்?**

பட்டாசு வெடிப்பதனால் வரும் காயங்கள் இரண்டு வகைப்படும். பட்டாசின் வெப்பத்தினால் ஏற்படுவது ஒன்று. இன்னொன்று, பட்டாசு வெடித்து அதில் வெளிப்படும் சிறு துகள்க்ள் கண்களைத் தாக்குவதால் ஏற்படுவது. சுண்ணாம்புத் தண்ணீர் கூடக் கண்களை மிகவும் பாதிக்கும். கடைகளில் சுண்ணாம்பு பாலித்தீன் பைகளில் விற்கப்படுகிறது. இதைக் கையில் வைத்து அழுத்தி விளையாடும்போது, அதில் உள்ள சுண்ணாம்பு கண்ணில் பட்டு எரிச்சலை ஏற்படுத்தும். இது முதலில் கண்ணின் ஓரத்தில் தங்கி பின்பு சிறிது சிறிதாகக் கண்ணின் உள்பாகத்திற்குச் சென்று பாதிப்பை ஏற்படுத்துகிறது. சீயக்காய்கூட இதே போல் கண்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இம்மாதிரி கண்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருள்களைக் கவனமாக உபயோகிக்க வேண்டும். குழந்தைகளுக்குத் தகுந்த அறிவுரை கூறினால் அவர்களுக்குக் கண்களைப் பாதுகாத்து கொள்ளும் பக்குவம் வரும். அவர்களைக் கூர்மையான குச்சி, கம்பி போன்றவைகளுடன் விளையாட அனுமதிக்கக் கூடாது. பென்சில், காம்பஸ், பட்டாசு ஆகியவற்றைக் கவனமாகக் கையாள வேண்டும். சீயக்காயோ, சுண்ணாம்போ கண்ணில் விழுந்தால் உடனே கண்ணை சுத்தமான தண்ணீரினால் கழுவி விட வேண்டும். கண்ணில் காயம் பட்டவுடன் உடனே கண் மருத்துவ நிபுணரைப் பார்ப்பது மிகவும் அவசியம். குழந்தைகளை வெறும் வயிற்றோடு கண் சிகிச்சை நிபுணரிடம் கூட்டி வந்தால் உடனே மயக்க மருந்து கொடுத்து முழுமையாகப் பரிசோதிக்கலாம். கண்களைக் கழுவி நுண்ணுயிர்களை நீக்கும் சிகிச்சையே சிறந்தது.

**கண்ணாடி இல்லாமல் 'வெல்டிங்' வேண்டாம்**

தொழிற்சாலை விபத்துகளினால் சில சமயம் கண் பார்வை பாதிக்கப்படுகிறது. பெரும்பாலும் கண்களைப் பாதுகாக்கும் முறைகளைத் தகுந்தபடி அனுசரிக்காததே இதற்குக் காரணம். இரும்புப் பொருட்களை வெட்டும் வேலை செய்பவர்கள் அவசியம் பாதுகாப்புக் கண்ணாடி அணிய வேண்டும். இல்லையென்றால் இரும்புத் துகள்கள் கண்ணில் விழுந்து மிகுந்த துன்பத்தை விளைவிக்கும். வெல்டிங் வேலை செய்பவர்கள் கண்ணாடி அணியாமல் வேலை செய்தால் பணி செய்து முடித்து சுமார் நான்கு மணி நேரம் கழித்து கடும் கண் வலியுடனும் எரிச்சலுடனும் அவதிப்படுவார்கள்.

பறந்து வந்து காயத்தை விளைவிக்கும் கூர்மையான பொருள்கள் கண்களைப் பெரிதும் பாதிக்கும். உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்தால்தான் பார்வையைக் காப்பாற்ற இயலும். அமிலங்கள், விஷவாயுக்கள் கண்களைத் தாக்கி காயம் உண்டாக்கலாம். அப்போது முதலுதவியாக உடனடியாகக் கண்களைச் சுத்தமான தண்ணீரினால் குறைந்தது 30 நிமிஷங்கள் கழுவவேண்டும். சாலை விபத்துகளில் கண்ணாடித் துண்டுகள் சில சமயம் கண்களுக்குள் ஊடுருவிவிடும்.

# சட்டமன்றத்தில்...

## திருச்சி, சேலம், நெல்லை-மாநகராட்சிகள் ஆகின்றன

திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்படுகின்றன.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகராட்சிப் பகுதிகளாக இணைந்து திருநெல்வேலி மாநகராட்சி இந்த ஆண்டில் அமைக்கப்படும். சேலம், திருச்சி நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. இந்த நகராட்சிகள் விரைவில் மாநகராட்சிகளாக உயர்த்தப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

## முதல்வர் பெயரில் அனைத்து மாவட்டங்களிலும் மாதிரி நகர்கள்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 'புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்' என்ற பெயரில் மாதிரி நகர்கள் இந்த ஆண்டில் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

சாதி, சமயமற்ற சமுதாயத்தினை அமைத்து, அனைத்து சமுதாயத்தினரும் சுமுக உறவோடு வாழ வழிவகுக்கும் 'புரட்சித் த்லைவி நகர்' என்ற புதுமை நிறைந்த மாதிரி நகர் ஒன்று தருமபுரி மர்வட்டம் பர்கூரில் உருவாக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுகாதார நல மையம், நூலகம், கரிம வாயுக்கலன், பள்ளிக் கூடங்கள், வணிக வளாக மையம், பூங்கா வசதி, இஸ்லாமியர், கிருத்துவர் ஆகியோருக்கான கோயில்கள் உள்ளிட்ட வசதிகள் ரூ.3 கோடி செலவில் அங்கு அமைக்கப்படுகின்றன. உயர் நோக்கம் கொண்டு உருவாக்கப்படும் இந்த நகரைப் போன்றே தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 'புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்' என்ற பெயரில் மாதிரி நகர்களை இந்த ஆண்டு அரசு உருவாக்கும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

## தமிழக நகரங்களில் திருமண மண்டபங்கள்

தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயரில் திருமண மண்டபங்கள் கட்டப்படும்.

விளையாட்டு அரங்கங்கள் இல்லாத நகரங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட்டு அவற்றிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயர் வைக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளான, பிப்ரவரி 24-ஆம் நாளன்று கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ளாட்சித்துறை சார்பில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குத் தங்கப்பதக்கங்களும் முதலமைச்சர் பெயரில் விருதுகளும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

## முதல்வர் பெயரில் மருத்துவ, பொறியியல் கல்லூரிகள்

உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஊழியர்களுக்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெயரில் ஒரு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் துவங்கப்படும். இக்கல்லூரிகளில் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்களின் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித அளவு இடங்கள் ஒதுக்கப்படும். இதில் துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இடங்கள் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

---

கிராமப்புறங்களில் வயல்களில் வேலை செய்யும்பொழுது கண்ணில் ஏற்படும் காயங்களில் பெரும்பாலும் காளான் ஊடுருவி பெரும் கேடு விளைவிக்கிறது. இதற்கு உடனே சிகிச்சை அளிக்காவிட்டால் கண் பார்வையை முற்றிலும் இழந்துவிட நேரிடும். களிமண், சேறு ஆகியவை படுவதாலும் கண் ரணமாகி விடுகிறது. கிராம மக்கள் பெரும்பாலும் தங்கள் அறியாமையால் பச்சிலை மருந்து, கோழி ரத்தம் ஆகியவற்றைக் கண்களில் விட்டு, கண் மிகவும் பழுதடைந்த பிறகே கண் மருத்துவத் திற்கு வருகிறார்கள்.

காயமடைந்த கண்களுக்குச் சிகிச்சையளிப்பதை மூன்று கட்டமாகப் பிரிக்கலாம். முதலில் அவசர முதல் உதவி அளிப்பது. இரண்டாவது அருகில் உள்ள சிறு மருத்துவமனையை அணுகி வைத்தியம் பெறுவது. மூன்றாம் கட்டம், பெரிய கண் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சிகிச்சை பெறுவது. இவை எல்லாவற்றையும் விட, கண்களைக் காயம் படாமல் பாதுகாப்பதே மிகச் சிறந்ததாகும்.

டாக்டர் கே. ஆனந்தக்கண்ணன்

—நன்றி 'தினமணி'

( 8 — ஆம் பக்கத் தொடர்ச்சி)

# தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவதே எங்களுடைய அரசின் நோக்கம்!

பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில், இப்போதுள்ள கிரானைட் கொள்கையை மாற்றுவது குறித்து, தீவிரமாக அரசு பரிசீலனை செய்தது. இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட கொள்கை முடிவுகளை அறிவிக்கின்றேன்.

1. இனிமேல், அரசு புறம்போக்கு நிலங்களில், உறுதிக் கடிதம் வழங்கப்பட்டவர்கள் தவிர, மற்ற நபர்களுக்குக் கிரானைட் குத்தகை வழங்கப்பட மாட்டாது; புது குத்தகைகள் இனிமேல், அரசுக்குச் சொந்தமான டாமின் நிறுவனம், மற்றும் அதன் கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

2. இனிமேல், பட்டா நிலங்களில் கிடைக்கும் விலை மதிப்புள்ள (Paradiso, Kashmir White) போன்ற சில குறிப்பிட்ட கிரானைட் கற்களை வெட்டியெடுப்பதற்கு வழங்கும் குத்தகையில் அரசு நிறுவனங்கள் அல்லது கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படும்.

3. பட்டா நிலங்களில் கிரானைட் வெட்டியெடுக்க அனுமதி பெறும் குத்தகைதாரர், தொழில் திட்டம் வைத்திருக்க வேண்டுமென்ற நிபந்தனை நீக்கப்படுகிறது.

4. பட்டா நிலமோ, அரசு புறம்போக்கு நிலமோ, எத்தகைய நிலத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கிரானைட் ஆனாலும், இனிமேல் கிரானைட் தொடர்பான அனைத்து வர்த்தகமும், அரசுக்குச் சொந்தமான 'TAMIN' நிறுவனம் மூலமாகத்தான் நடத்தப்படும். கிரானைட் வணிகமானது, பாதிக்கப்படாமலும், அதே நேரத்தில், இவ்வணிகம் பெருகுவதற்கு வகை செய்யும் நோக்கத்துடனும், வேண்டிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டு, விரைவில் அறிவிக்கப்படும்.

அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து கிரானைட் கற்களை வெட்டியெடுக்கவும், வெட்டியெடுக்கப்பட்ட கற்களை செய்முறைப்படுத்தவும், பல புது நிறுவனங்கள் கூட்டுத்துறையில் அமைக்கப்படுவதை அரசு வரவேற்கும்.

**பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டங்கள்**

தமிழகத்தில் ஏற்கெனவே 31 வட்டங்கள் மிகவும் பின்தங்கிய வட்டங்களாகவும், 76 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பட்டியலில், கோவை மாவட்டத்தில் அவினாசி, காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், சேலம் மாவட்டம் ராசிபுரம், புதுக்கோட்டை வட்டம், சிதம்பரனார் மாவட்டம் சாத்தான்குளம், மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை ஆகிய வட்டங்கள், பின்தங்கிய வட்டங்களின் பட்டியலில், இந்த ஆண்டு முதல் சேர்க்கப்படுகின்றன என்று அறிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த வட்டங்களும் அரசின் சலுகைகளை இனிப்பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் புதிய தொழிற்கூடங்கள்**

கோவை மாவட்டம் திருப்பூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்காகத் தனியார் தொழில் முனைவர்களால் வாங்கப்பட்ட நிலத்தில், தொழிற்பேட்டை அமைப்பதற்கான அடிப்படை வசதிகளைத் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் செய்துள்ளது. அத்தொழிற்பேட்டையில் தனியார் துறையில், பின்னல் ஆடை ஏற்றுமதி மின் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, அவைகள் செயல்பட்டு வருகின்றன.

இதேபோன்று இந்த ஆண்டு, இன்னும் 3 இடங்களில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவி கொண்டு, தனியார் தொழிற்பேட்டைகள் நிறுவப்படும். மதுரை மாவட்டம் வேடத்தகுளம், மற்றும் வல்லகுண்டு கிராமங்களில், பின்னலாடை தொழிற்பேட்டையும், பெரியார் மாவட்டத்தில் வடமுகம், காங்கேயம் பாளையம் கிராமத்தில் பல்தொழிற்பேட்டையும், சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லில் ஆட்டோ உதிரிப்பாகங்கள் தயாரிப்புத் தொழிற்பேட்டை ஒன்றும், தனியார் துறையில் நிறுவப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மின் உற்பத்திப் பெருக்கம்**

கூட்டுத் துறையில் ஜெயங்கொண்டபுரத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுத்து, அதன் மூலம் மின் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில், பிள்ளைப்பெருமாநல்லூரில், காவேரிப் படுகையில் கிடைக்கும் நிலவாயுவைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு முதலில் மின் உற்பத்திக்காக, நாளொன்றுக்கு 2 மில்லியன் கன மீட்டர் அளவு நில வாயுவை, மின் உற்பத்திக்காக நம் மாநிலத்திற்கு அளிப்பதாகக் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து இருந்தது. ஆனால், தற்போது, 0.25 மில்லியன் கன மீட்டர் நில வாயுவை மட்டுமே கொடுக்க முடியும் என்று கூறியுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, கூட்டுத் துறையில் பிள்ளைப் பெருமாநல்லூரில், PY-1 என்ற கடற்பகுதியில் சோதனைகள் மேற்கொண்டு, நிலவாயுவை எடுப்பதற்கும், அதனைக் கொண்டு மின் உற்பத்தி செய்வதற்கும், ஒருங்கிணைந்த முறையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க, இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**அயல்நாட்டு இந்தியர் மற்றும் வெளிநாட்டு முதலீடு**

அயல்நாடு வாழ் இந்தியர்கள், மற்றும் ஏனைய அயல் நாட்டினர்களின் முதலீடு, தமிழகத்தில் பெருகுவதற்குத் தீவிர முதலீடு ஊக்குவிப்பு இயக்கம் (Investment Campaign) மேற்கொள்ளப்படும். அரசுத்துறை அலுவலர்களும், தொழில் அதிபர்களும் அடங்கிய சிறப்புக் குழுவினை, அயல் நாடுகளுக்கு அனுப்பி, நமது மாநிலத்தில் தொழில் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளைக் கருத்தரங்கு, வீடியோ படக்காட்சி ஆகியவைகள் மூலம் விளக்கிக் கூறி, அயல்நாடுகளில் வாழும் இந்தியர்கள், நம் மாநிலத்தில் முதலீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மூடிய தொழிற்சாலைகளைத் திறக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளை, தொழிலாளர்களின் நலன் கருதி மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளை, இந்த அரசு எடுத்து வருகின்றது என்பதை, இந்த மாமன்றம் அறியும்.

சென்னையில் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனம் தற்போது திறக்கப்பட்டு, இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். அதேபோன்று, பின்னி மில்லைத் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, அதாவது 13.4.1992 அன்று திறப்பதற்கான நடவடிக்கைகளை, அரசு எடுத்துள்ளது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நான் நேரடியாக 4.2.1992 அன்று பின்னி மில் தொழிற் சங்கத்துடனும், அரசியல் கட்சித் தலைவர்களுடனும், பின்னி மில் நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர் நல ஆணையாளர், நிர்வாகம் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு முத்தரப்புக் குழுவினை அமைத்து, ஆலையைத் திறப்பதற்குச்

• ஒரு மனிதனை, அவன் செய்யும் தொழிலைக் கொண்டு மதிப்பிடுதல் கூடாது. ஆனால், அவன் தனது கடமையை எம்முறையில் செய்கிறான் என்பதை அறிந்து மதிப்பிடுவதே முறையானது.

- சுவாமி விவேகானந்தர்

சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தி அறிவுரைகள் வழங்கினேன். இவ்வாலையின் பதப்படுத்தும் நிலையத்தைப் புவனகிரிக்கு மாற்றுவதைத் தவிர்க்க முடியாது என்று எடுக்கப்பட்ட முடிவைத் தொழிற்சங்கமும் ஏற்றுக்கொண்டது. இதனால் புவனகிரிக்குச் சென்று பணி செய்ய விரும்பாதவர்களை, வேலையிலிருந்து நீக்கக்கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் மேம்பாட்டு வங்கியின் மூலம், நிதி உதவி பெறவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாலையில் பணியாற்றிய எல்லாத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகம், இவ்வாலையைத் திறக்கும் நாளன்று, ஒரு மாத ஊதியத்தைக் கருணைக் கொடையாக வழங்கவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனவே, தொழிற்சங்கம், நிர்வாகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், இவ்வாலை 13.4.1992 அன்று திறக்கப்படும்.

**மால்கோ (Malco)**

மேட்டூர் மால்கோ நிறுவனம் தற்போது மூடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. தொழிற்சங்கங்கள் இந்த ஆலையைத் திறந்து, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றன. அதன் தொடர்பாக அலுவலர்களுடனும், நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன்.

நிர்வாகம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, ஏறத்தாழ ரூ.25 கோடி மின்சாரக் கட்டணத்தை, பாக்கித் தொகையாக வைத்துள்ளது. அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை 'அலுமினியம் ரெகுலேசன் நிதி'-யிலிருந்து கட்டவும், மீதமுள்ள தொகையைத் தவணை முறையில் செலுத்துவதற்கும், நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இந்த நிறுவனத்திற்கு ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஒரு ரூபாய் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு சலுகைக் கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கவும், நான்கு ஆண்டுச் சலுகைக் காலம் முடிந்ததும், அப்போதைய கட்டண விகிதத்தின்படி மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் அரசு அனுமதி வழங்கி உள்ளது.

தற்போது MALCO நிறுவனம் உயர்ந்தபட்ச 'மின் சுமை'யின் (Maximum Demand) அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட, குறைந்தபட்ச மின் கட்டணம் செலுத்தி வருகிறது. அதை மாற்றி, 1.4.1991 முதல், எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறதோ அந்த அளவிற்கு மட்டும் மின் கட்டணம்

செலுத்த, இந்த அரசு சலுகை அளித்துள்ளது. மேலும், 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்தி வைக்கும் சலுகையையும் அளிக்க, அரசு முன் வந்துள்ளது. இந்தச் சலுகைகள் அனைத்தும், தொழிலாளர்களின் நலன் கருதியே, அரசு இந்த நிறுவனத்திற்கு அளிக்க முன் வந்துள்ளது. இவற்றைப் பயன்படுத்தி, மால்கோ நிறுவனம் அலுமினியத் தொழிற்சாலையை மூன்று மாத காலத்திற்குள் மீண்டும் திறந்து, அனைத்துத் தொழிலாளர்களுக்கும், முழுமையாகப் பணியினை அளிக்கும் நிலைமை உருவாகும், என்று நம்புகிறேன்.

### தொழில் - நிதி புனரமைப்புக் குழுமம்

தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமத்தினால் (Board of Industrial Finance and Reconstruction) புனரமைப்புச் செய்யப்படும் நலிவுற்ற நிறுவனங்களுக்குத் தற்பொழுது 3 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்தி வைத்துச்செலுத்தும் சலுகை, வழங்கப்பட்டு வருகிறது. இனிமேல் தகுதி வாய்ந்த நலிவுற்ற நிறவனங்களுக்கு, விற்பனை வரி ஒத்தி வைத்து செலுத்தும் சலுகை ஐந்து ஆண்டுகள் வரை வழங்கப்படும்.

### அரசு முதலீட்டைத் திரும்பப் பெறுதல் (Policy of Disinvestment)

நேரடி உற்பத்தியிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு, தனியார் துறைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதிலும், ஊக்கச் சலுகைகளை அறிவிப்பதிலும், அரசு கவனத்தைச் செலுத்தும் என ஏற்கெனவே இந்த அரசு அறிவித்துள்ளது.

இந்த அடிப்படையில் 9 கூட்டுத்துறை நிறுவனங்களில், தொழில் வளர்ச்சிக் கழகம் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெற, (Disinvestment) முடிவெடுத்துள்ளோம். மேலும் நான்கு கூட்டுத் துறை நிறுவனங்களில், செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெறும் நடவடிக்கை, முடிவடையும் தறுவாயில் உள்ளது. பொதுத் துறை நிறுவனங்களில் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெற, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும். முதல் கட்டமாக, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வெடி மருந்துக் கழகம் ஆகிய நிறுவனங்களைக், கூட்டுத் துறைக்கு மாற்றவும், பின் இந் நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில், அரசின் முதலீட்டைச் சிறிது சிறிதாகத் திரும்பப் பெறுவது எனவும் உத்தேசித்துள்ளோம். சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட், தமிழ்நாடு உப்பு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மெக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களைத், தனியார் துறைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

# அயல்நாடு வாழ் இந்தியர்கள்

# தமிழ்நாட்டில் தொழில் தொடங்க - தொழில் முதலீடு செய்ய வசதி!

### தீப்பெட்டித் தொழில்

முழுவதும் இயந்திர மயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளைத் தவிர, நம் நாட்டில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகள் முழுமையும், தமிழகத்தில் உள்ள சிறு தொழில், மற்றும் மிகச் சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்கண்ட மூன்று வகைத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு, தனித்தனியாக விதிக்கப்பட்டுள்ள இன்றைய ஆயத்தீர்வை முறை, சிறு மற்றும் மிகச் சிறு தீப்பெட்டி தொழிற்சாலைகளைப் பாதிக்கிறது.

தீப்பெட்டி, ஒவ்வொருவர் வீட்டிலும் உபயோகப்படுத்தப்படும் பொருளாக உள்ளது. இத்தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, சிறு மற்றும் மிகச் சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு, ஆயத்தீர்வையிலிருந்து முழு விலக்களிக்க, மத்திய அரசை நாட இருக்கிறேன். இச்சலுகையால் சிறு தொழிற்சாலைகள், பெரிய தொழிற்சாலைகளுடன் போட்டியிட்டுத் தங்களுடைய பொருட்களை விற்பனை செய்யும் வாய்ப்பினைப் பெறும்.

### புது நிறுவனங்கள்

இந்தியத் தொழில் கடன் மற்றும் தொழில் முதலீட்டுக் கழகத்தின் (Industrial Credit and Investment Corporation of India) ஆதரவுடன், சென்னையில் ஒரு நிர்வாகப் பயிற்சி நிலையம் (Institute of Management) அமைக்கவும், வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளுடன், ஏற்றுமதி ஊக்குவிப்பு நகர் ஒன்றை (Export City) கிழக்குக் கடற்கரையில் (East Coast) உருவாக்கவும், அரசு நடவடிக்கை எடுக்கும்.

### மோட்டார் வாகனத் தொழிற்சாலை

இந்தியாவில் முன்னணியில் உள்ள அசோக் லேலண்டு நிறுவனம், சுமார் ரூ.550 கோடி முதலீட்டில், ஓசூரில் மோட்டார் வாகனங்கள்

# தமிழ்நாடு வணிகர் நல வாரியம் மாற்றியமைக்கப்பட்டது.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான தமிழ்நாடு வணிகர் நல வாரியம், மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தலைவர் : **மாண்புமிகு முதலமைச்சர்**

துணைத்தலைவர் : **மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்**

**அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள்**

1. திரு. கே. மாயாண்டி, திருச்சி மாவட்ட வர்த்தகச் சபைத் தலைவர்.
2. திரு. ஆர். ஜெகதீசன், கோவை மாவட்டச் சிறுதொழில்கள் சங்கப் பொதுச் செயலாளர்.
3. திரு. ஆர். ரத்தினசாமி, மோட்டார் உதிரிப் பாகங்கள் விற்பனையாளர்கள் சங்க முன்னாள் தலைவர்.
4. திரு. ஒபுல் ரெட்டி, இந்துஸ்தான் வர்த்தகச் சபை.
5. திரு. வி.ஆர். முத்து, விருதுநகர் வர்த்தகர் கழக முன்னாள் செயலாளர்.
6. திரு. ஏ.ஆர். தாமோதரன், முன்னாள் எம்.எல்.சி - அகில இந்தியப் பெட்ரோலிய வர்த்தகக் குழுவின் கூட்டமைப்பு உறுப்பினர்.
7. திரு. டி. சாந்தகுமார், கீர்த்திலால் காளிதாஸ், வைர வியாபாரி, கோவை.

**உறுப்பினராக உள்ள அதிகாரிகள்**

1. செயலர், இந்து அறநிலையத்துறை.
2. செயலர், நிதித்துறை.
3. செயலர், தொழில் துறை.
4. செயலர், விவசாயத்துறை.
5. ஆணையர், வர்த்தக வரி.
6. இணை ஆணையர், வர்த்தக வரித்துறை, இவ்வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி யாகவும், செயலாளராகவும் செயல்படுவார்.

**வணிகர் நல வாரியம் வர்த்தக வரி ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்கும்.**

### தேசிய அறிவொளி இயக்கத்தில் பசும்பொன் மாவட்டம்

தேசிய அறிவொளி இயக்கத் திட்டத்தின்கீழ் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், 85 சதவிகிதம் எழுத்தறிவு பெற்று தேசிய அறிவொளி இயக்கத்திட்டத்தின்கீழ் மாநிலத்திலேயே முதன் மாவட்டமாகத் திகழ்கிறது.

### சிறுசேமிப்பு: தமிழ்நாடு சாதனை

1991-'92-ஆம் நிதியாண்டில் சிறுசேமிப்பு வாயிலாகத் தமிழகம் ரூ.500 கோடி திரட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட ரூ.100 கோடி அதிகமாகும்.

1991-'92-ஆம் ஆண்டுக்குச் சிறுசேமிப்பு வாயிலாக ரூ.500 கோடியைத் திரட்ட அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது.

முதன்முறையாக முதலீட்டாளர்களுக்கு 2.25 சதம் ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டது. முகவர்களுக்கும் பல சலுகைகள் அளிக்கப்பட்டன.

---

தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசை அணுகியுள்ளது. இத்தொழிற்சாலை நிறுவிட அடிப்படை வசதிகள், மற்றும் வேறுபல உதவிகளையும், சலுகைகளையும் அளித்திட Ashok Leyland அரசை வேண்டியுள்ளது. இது அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

இத்தொழிற்சாலை மிக விரைவில் அமைக்கப்படும் என்று நம்புகிறேன். இதனால் ஓசூரைச் சுற்றிலும் தொழில் வளர்ச்சி மேலும் பெருகும்.

மற்ற தொழில் அதிபர்களையும், இதுபோன்ற மிகப் பெருந் தொழில்களை, தமிழகத்தில் அமைக்க வரும்படி, இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக இந்த அரசு எல்லா உதவிகளையும் அளிக்கும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'டிட்கோ' நிறுவனம் ரூ.75 கோடி செலவில் அலுமினியம் உருட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினைத் தஞ்சாவூர் மாவட்டத்திலும், புதிதாகக் கூட்டுத் துறையில் நிறுவ உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரில் கூட்டுத் துறையில் பழங்கள் பதனிடும் ஆலை ஒன்றை நிறுவுவதற்காகச் சந்தை நிலவர ஆய்வு (Market Survey) தொழில்நுட்ப ஆய்வு போன்ற முதன்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் உற்பத்தித் திறன், ஆண்டொன்றிற்கு 10,000 டன்கள் ஆகும். இத்திட்டத்தின் முதலீடு ரூ.15 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களை விரைவில் செயல்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**- மாண்புமிகு முதல்வர் அவர்கள் 6.4.92 அன்று, தொழில் மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு அளித்த பதிலுரை.**



# தன்னை உயர்த்திய இசைக் கருவியின் பெருமையை உயர்த்தியவர்

### திரு. குன்னக்குடி வைத்தியநாதன் பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், தனது 25 ஆண்டுக் காலக் கலைச் சேவையைப் பூர்த்தி செய்தமையைப் பாராட்டும் முகத்தான், நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் பங்கேற்பதில், நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கலைத் துறையிலே ஈடுபட்டவர்களுக்கு, ஏதாவது ஒரு துறையில் சாதனை புரியவேண்டும் என்ற ஆர்வமும், அதனைத் தன்னுடைய கடுமையான உழைப்பினால், எப்படியும் அடைய முடியும் என்ற நம்பிக்கையும் பொதுவாக இருக்கும். தனது துறையில் புதிய உத்திகளைக் கையாண்டு, அதன் மூலம் மக்கள் மனதில் என்றென்றும் நிரந்தர இடம் பெற வேண்டும் என்ற தணியாத தாகம்தான், உண்மையான கலைஞர் ஒவ்வொருவருக்கும் இருக்கும்.

இந்த உண்மையைக் கலைத்துறையில் ஈடுபட்ட பல பெரியவர்கள் உலகிற்கு உணர்த்தி உள்ளனர்; சாதனை படைத்துள்ளனர். அந்தச் சாதனையாளர்களின் பட்டியலில், 25 ஆண்டுகள் சிறப்பான முறையில் கலைச் சேவை புரிந்து, நமது பாராட்டையெல்லாம் பெற்று, இடம் பெறுகிறார் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்.

இன்று இந்தியாவிலேயே, ''வயலின்'' என்று கூறினால், உடனடியாக அனைவருக்கும் நினைவு வரும் பெயர், ''குன்னக்குடி'' தன் கலைச் சேவையால், தான் பிறந்த மண்ணிற்கு நாள்தோறும் சிறப்புச் சேர்த்துக் கொண்டிருப்பவர், திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் என்றால், அது மிகையாகாது. ஏன், தன்னை உயர்த்திய இசைக் கருவியான வயலின், இன்று அவர் பெயரால் பெருமை அடைந்துள்ளது என்று கூறினால் கூட, எவராலும் மறுக்க முடியாது!

அவ்வகையில் தனக்கும், தனது திறமையால்தான் இயக்கும் இசைக் கருவிக்கும் புகழ் கிடைக்கும் அளவு, உயர்ந்துள்ள திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களுக்கு, இன்றைய விழாவில் 25 பொற்காசுகள் பதித்த வயலின் ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கியுள்ளது, சாலப் பொருந்தும். அதனை அவருக்கு வழங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

1935-ஆம் ஆண்டு, குன்னக்குடி என்ற சிறிய ஊரில் பிறந்த இவர், சிறு வயது முதலே கர்நாடக இசையிலும், கதாகாலட்சேபத்திலும் மிகுந்த ஆர்வத்தைக் காட்டினார். தனது 12 வயதிலேயே, கர்நாடக இசையில் தலை சிறந்த பாடகர்களான, திரு. அரியக்குடியார், திரு. செம்மங்குடியார், ஏன் - இன்றைய விழாத் தலைவர் திரு. மகாராஜபுரம் சந்தானம் போன்ற சான்றோர்களுடன் சென்று, பல கச்சேரிகளில் பங்கு கொண்டுள்ளார்.

தனது சிறு வயது முதலே இசை மீது மோகம் கொண்டு, இசை என்பது தனிப்பட்ட குழுவினருக்கு மட்டும் உரியது அல்ல; எல்லாப் பொது மக்களும் எளிதில் புரிந்து கொண்டு, இன்புற வேண்டியதே இசைக்கலை என்றும், எனவே சாதாரண மக்களும் ரசிக்கக்கூடிய வகையில், அதனை அமைக்கவேண்டுமென்று, தனக்கென ஒரு தனி பாணியை உருவாக்கிக் கொண்டவரும், அதில் தலைசிறந்து உயர்ந்தவரும்தான் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்.

வயலின் ஒரு கூட்டு இசைக் கருவி என்றாலும், முதன் முதலாக வயலினில் தனிக்கச்சேரி செய்து, சாதனை படைத்ததோடு, இதுவரை 780 பக்திப் பாடல்களுக்கு இசை அமைத்துள்ளவர் என்ற பெருமையும் இவரைச் சாரும்.

கலைத் துறையிலே எல்லா இடங்களையும் பார்த்துவிட வேண்டும் என்ற தணியாத எண்ணம் கொண்ட இவர், சில திரைப்படங்களுக்கு இசை அமைத்ததோடு, தானே இசையை மையமாகக்

கொண்ட ஒரு திரைப்படத்தையும் தனியே தயாரித்து வெளியிட்டார்.

பெரியவர் - சிறியவர்; ஆண் - பெண் என்ற பாகுபாடின்றி, அனைவரும் இவரது இசை நிகழ்ச்சிகளை இன்றும் ஆர்வத்துடன் கேட்கிறார்கள்.

கர்நாடக இசையையும் இவரால் திறமையாக வாசிக்க முடியும்; ஜனரஞ்சகமான இசையையும் இவரால் தர முடியும்; திரை இசையும் இவருக்குத் தாராளமாக வரும். எத்தகைய கூட்டத்தினரின் எதிர்பார்ப்புகளையும் முழுமையாகச் சிந்திக்கக்கூடிய ஒரு சிறந்த கலைஞர் உண்டென்றால் - அவர் குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்தான்!

இவரது வயலினில் இருந்து இசை மட்டுமல்ல; வார்த்தைகளே வரும். இசை விழாவில் மட்டுமன்றிப் பொது வாழ்விலும் ஈடுபட வேண்டும் என்ற தணியாத ஆர்வம் கொண்ட இவர், மழை பெய்யாது சென்னை நகர் குடிநீர்ப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டபொழுது, தனக்கே உரித்தான பாணியில், புழல் ஏரிக்குச் சென்று மேக ரஞ்சனி, ஜலார்ணவம் மற்றும் அம்ரிதவர்ஷிணி ஆகிய இராகங்களில் இரண்டு மணி நேரம் தொடர்ந்து வயலின் வாசித்து, வருண பகவானை வேண்டிய நிகழ்ச்சி, மக்களின் நலனில் இவர் கொண்டுள்ள அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

வயலின் சக்ரவர்த்தி என்றும், எழில் இசை ஏந்தல் என்றும், திரை இசை மன்னன் என்றும், கலை மாமணி என்றும் பல பட்டங்களைப் பெற்ற இவருக்கு, இன்று தங்க வயலின் வழங்கும் வாய்ப்பை எனக்கு அளித்த சபாக்களின் கூட்டமைப்பிற்கு, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனது 25 ஆண்டுக்காலக் கலை வாழ்வில், அவர் எத்தனையோ சவால்களைச் சந்தித்து, சாதனைகள் புரிந்து, இன்று நம் முன்னே வெள்ளி விழா நாயகனாகக் காட்சி அளிக்கின்றார்.

அவரது கலைப்பணி இன்னும் மென்மேலும் தொடர வேண்டும், வளர வேண்டும், குறைந்தது இன்னும் ஒரு 25 ஆண்டு காலத்திற்காவது, இவர் தன்னைக் கலைத் துறைக்கு அர்ப்பணித்துச் சேவை செய்யவேண்டும், என்ற என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சென்ற இடங்களில் எல்லாம் சீரும் சிறப்பும் பெறவேண்டும்; வயலின் இசைக்கு மேலும் புகழ் சேர்க்க வேண்டும், இனிவரும் வயலின் இசைக் கலைஞர்களுக்கு, இவர் ஓர் நிரந்தர வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

**—மாண்புமிகு முதல்வர் அவர்கள் 31.3.92 அன்று, வயலின் சக்ரவர்த்தி திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் 25 ஆண்டுக் காலக் கலைச் சேவையைப் பாராட்டி 'தங்க வயலின்' பரிசளித்து ஆற்றிய உரை.**



## இந்தியக் கலைச் செல்வங்கள்

**இந்தியக் கலைச் செல்வங்களாகக் கருதப்படும் அஜந்தா, எல்லோரா குகைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், ஜப்பானில் உள்ள வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதியமைப்புடன் 4,406 மில்லியன் யென் கடன் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 3,745 மில்லியன் ஜப்பானிய யென், அஜந்தா, எல்லோரா குகைகளைப் பாதுகாக்கவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படும். அது தவிர இக்குகைகளுக்கு அருகிலுள்ள அவுரங்காபாத் விமான நிலையம் நவீனமாக்கப்படும்.**

**அஜந்தா மற்றும் எல்லோரா குகைகளைப் பற்றி சுற்றுலாத்துறை கவர்ச்சிகரமான கையேடுகளை வெளியிட்டு, சுற்றுலாப் பயணியரைக் கவர்ந்திழுக்கப் பார்க்கிறது. அதேபோன்று பீகாரில் உள்ள புத்த கயாவில் சுற்றுலாவை வளர்ப்பதற்காக ஓட்டல்கள், குடிநீர், மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகள், தொலைத் தொடர்பு வசதி, சாலை வசதி முதலியவற்றை ஜப்பான் உதவியுடன் அரசு செய்து வருகிறது.**

## சட்டமன்றத்தில்...

### மேட்டூர் அணை ஜூன் 12-ஆம் தேதி திறப்பு

மேட்டூர் அணையிலிருந்து இவ்வாண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி பாசனத்துக்காகத் தண்ணீர் திறந்து விடப்படும். வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12-ஆம் தேதிதான் மேட்டூர் அணை திறக்கப்படும். ஆனால், பருவமழை தவறியதன் காரணமாகக் கடந்த 8 ஆண்டுகளாகக் குறித்த தேதியில் இவ்வணை திறக்கப்படவில்லை. இவ்வாண்டுதான் குறித்த தேதியில் மேட்டூர் அணை திறக்கப்படுகிறது என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார் (31.3.'92).

### காவிரி பாசனப் பகுதிகளை அதிகரிக்க 2 திட்டங்கள்

காவிரிப் பாசனப் பகுதிகளை அதிகப்படுத்த இரண்டு திட்டங்களை மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ளது. காவிரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் இத்திட்டத்தைத் தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தலாம். 250 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டமும், 500 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டமும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் ஏதாவது ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டால் காவிரி நீரை மேலும் அதிக இடங்களுக்குப் பாசனம் செய்யலாம் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.கண்ணப்பன் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (31.3.'92).



# ''நீதி வென்றது; நியாயம் வென்றது!''

## காவிரிப் பிரச்சினைத் தீர்ப்பு குறித்து முதல்வர் மகிழ்ச்சி

சட்டப்பேரவையில் 7.4.'92 அன்று கேள்வி நேரம் முடிந்ததும், வ.கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. ஜி.பழனிச்சாமி அவர்கள் எழுந்து, ஒரு பிரச்சினையை எழுப்பினார். அவர் கூறியதாவது:

''காவிரி டெல்டா பகுதியில் ஜூன் 12-ந் தேதி தண்ணீர் திறந்து விடுவதாக அறிவித்தது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு குறுவை சாகுபடி செய்யப் போகிறோம் என்ற நிலையில் மராமத்து வேலைகளை விவசாயிகள் தொடங்கிவிட்டார்கள்

ஏற்கெனவே வழங்கப்பட்ட நடுவர்மன்றத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கர்நாடக அரசின் கோரிக்கையை மறுத்ததோடு மட்டுமல்லாமல், 205 டி.எம்.சி. தண்ணீரைத் திரும்பவும் வழங்க வேண்டும் என்ற நல்ல தீர்ப்பையும் வழங்கியுள்ளனர்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் தீர்ப்பையொட்டி மத்திய அரசாங்கத்தை அணுகி இந்தத் தீர்ப்பை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் நல்ல செய்தியைச் சொல்ல வேண்டும்.

மேற்கண்டவாறு ஜி.பழனிச்சாமி கூறினார்.

இதற்குப் பதில் அளித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:-

இப்போது உறுப்பினர் குறிப்பிட்ட செய்தி உண்மையிலேயே தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியும், உவகையும் அளிக்கக்கூடிய செய்திதான். நீதி வென்றது, தர்மம் வென்றது, நியாயம் வென்றது என்று தான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கர்நாடகம் செய்திருந்த மனுவினைப் பரிசீலித்த பிறகு, அதை நடுவர் மன்றம் நிராகரித்து இருக்கிறது. ஏற்கெனவே கொடுத்த தீர்ப்பில் எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கில்லை, செய்ய வேண்டிய அவசியமும் இல்லை என்பதை நடுவர் மன்றம் திட்டவட்டமாக நியாயப்படுத்திவிட்டது.

இது தமிழகத்துக்கும், தர்மத்திற்கும், நியாயத்திற்கும் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

கர்நாடக அரசு இனியும் தாமதம் செய்யாமல், வீண் சர்ச்சைகளிலோ, வீண் விவாதங்களிலோ இறங்காமல் ஏற்கெனவே நடுவர்மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பின்படி சரியான நேரத்தில் குறித்த அளவு தண்ணீரைத் திறந்துவிட வேண்டும்.

இதற்கு மத்திய அரசும் கர்நாடக அரசை அறிவுறுத்த வேண்டும். இதைத்தான் தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரும் எதிர்பார்க்கிறார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதை மத்திய அரசும், கர்நாடக அரசும் செய்யும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது.''

—மேற்கண்டவாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா கூறினார்.

# தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தரப்படும்

2.4.1992 அன்று அதிகாலை இராயபுரம் தொகுதி 6-வது வட்டத்தில் பல்லவன் நகர் மற்றும் திடீர் நகர்ப் பகுதியில் 150 குடிசைகள் தீக்கிரையானது.

இந்தச் செய்தி கிடைத்தவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக காலை சுமார் 7.00 மணியளவில் நேரில் சென்று பார்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

மேலும் தீ விபத்துக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய வேண்டுமெனவும் உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்று உணவு வழங்க வேண்டுமென்றும் கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து நிவாரண உதவிகளும் உடனடியாக வழங்கத் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தீப்பிடிக்காத வீடுகளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# கம்ப்யூட்டர் அருங்காட்சியகம்

கம்ப்யூட்டர்களுக்கென்றே தனி அருங்காட்சியகம் ஒன்று உள்ளது. ஆண்டுதோறும் 1,50,000 பேர் இதனைக் கண்டுகளிக்கிறார்கள்; பல புதிய செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் செய்கிறார்கள். அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் நகரில் இந்த அருங்காட்சியகம் உள்ளது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முற்பட்ட, ஒரு பெரிய கட்டடம் அளவிலான கம்ப்யூட்டர் முதற்கொண்டு, மேசை மீது கச்சிதமாக வைத்துக் கொள்ளக்கூடிய 'டெஸ்க்டாப்' கம்ப்யூட்டர் வரையில், விதவிதமான கம்ப்யூட்டர்கள் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இங்கேயுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கம்ப்யூட்டர்களைப் பார்வையாளர்கள் தாங்களாகவே இயக்கி மகிழலாம். பல விளையாட்டுக்களையும் ஆடிக் களிக்கலாம்.

இங்கு கம்ப்யூட்டர்கள் பொருத்தப்பட்ட மாதிரி விமானத்தை, இடத்தை விட்டு நகராமலே ஓட்டி மகிழலாம். இங்குள்ள கம்ப்யூட்டர்களைக் கொண்டு வீட்டு வரைபடத்தை வரையலாம்; ஓர் ஓவியத்தை உருவாக்கலாம்; என்ன நோய் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்; புதிய இசைக்கோலம் ஒன்றை உருவாக்கலாம்; தாங்கள் பேசும் ஆங்கிலம் இலக்கணச் சுத்தமாக உள்ளதா என்று சரி பார்க்கலாம்; இங்குள்ள வீடியோவில் தோன்றும் தங்கள் உருவத்தைத் தங்களது விருப்பத்திற்கு ஏற்றபடி திருத்தி அமைத்துக் கொள்ளலாம்.

## அறிவுள்ள ரோபோட்கள்

'செயற்கை அறிவூட்டல்' துறைக்காக ஒரு தனிப்பிரிவே இந்த அருங்காட்சியகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இங்குள்ள 'ரோபோட்கள்' மிகவும் துடிதுடிப்பானவை.

உங்கள் உயரம் என்ன என்பதை இவை உங்களைத் தொடாமலேயே அளந்து சொல்லிவிடும். 10 டாலர் நோட்டுக்கும் 5 டாலர் நோட்டுக்கும் எளிதாக அடையாளம் கூறும். உங்கள் பெயரைச் சொன்னால் எழுத்துக்கூட்டிச் சொல்லிவிடும்.

இந்த அருங்காட்சியகத்தில் மிகப் பெரிய கம்ப்யூட்டர் ஒன்றையும் காட்சிக்கு வைத்துள்ளனர். பார்வையாளர்கள் இதற்கு உள்ளே புகுந்து நடக்கலாம். இது எப்படி இயங்குகிறது என்பதை நேருக்கு நேர் பார்வையிடலாம்.

ஒரு கம்ப்யூட்டர் எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பொதுமக்களுக்கு விளக்கிக்காட்ட வேண்டும் என்பதற்காகவே 12 இலட்சம் டாலர்கள் செலவில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டதாகும் இந்த இராட்சதக் கம்ப்யூட்டர்.

- அமெரிக்கத் தகவல் நிலையம்.

## அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை:

அண்ணல் அம்பேத்கரின் 102-வது பிறந்த நாளையொட்டி, அன்னாரின் திருவுருவப்படம் முகப்பை அலங்கரிக்கிறது (14.4.1992).

நான்காவது அட்டை:

தமிழ்நாட்டின் போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற ஏழு தேசிய விருதுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டுப் பாராட்டினார். (2.4.1992).

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

